# உனக்குள் உயிரானேன்

ஆர்.மகேஸ்வரி




WISDOM THE BOOK WORLD

WISDOM BOOKS
Q001 30043229 187.50
UNAKKUL UYIRANEN

உனக்குள் உயிரானேன் * ஆர்.மகேஸ்வரி

# உனக்குள் உயிரானேன்





ஆர்.மகேஸ்வரி

# உனக்குள் உயிரானேன்



# 1

பச்சை பட்டுடுத்தி... இளம் பருவ மங்கையாய் காட்சியளித்தது, வெள்ளிமலை!

வெள்ளிமலை விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள... கல்வராயன் மலையின் மீதுள்ள... அழகிய, எழில் கொஞ்சும் சுற்றுலாத்தலம்!

உடலுக்குப் புத்துணர்வும், மனதுக்கு மகிழ்ச்சியையும் எதிர்பார்த்து... ஆண்டு தோறும் லட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

அவளை வளர்த்தது எல்லாம் ஐயா சக்திவேலும், அவர் மனைவி மகாலட்சுமியும்தான்!

தீபிகா வளைந்து நெளிந்துள்ள பாதைகளில் மெல்ல மேடேறினாள்.

ஊர் நெருங்க... சாலையோர புதர் அருகில்... வலியோடு கூடிய ஆணின் முனகல் குரல் கேட்க...

தீபிகா... சட்டென்று வண்டியை நிறுத்திவிட்டு... குரல் வந்த திசையை நோக்கி ஓடினாள்.

கையில் இருந்த டார்ச் விளக்கை அடித்துப் பார்க்க... இரத்த வெள்ளத்தில்... அவன் வலியில் கண்மூடி முனகிக் கொண்டிருந்தான்.

பொங்கிப் பெருகிய ரத்தத்தின் தீவிரம், காயம் தந்த வலி, பனியின் கடுமை என எல்லாமுமாய் ஒன்று சேர்ந்து அவனைத் தாக்க... கொஞ்ச நேரத்தில் மயங்கி விட்டான். அவன் உடல் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தது.

வாலிபன்! கட்டுமஸ்தான உடம்பும், உயரமுமாய் இருந்தான்! அவனைக் குனிந்து தூக்க... தூக்க முடிய வில்லை! மெல்லத் தூக்கி உட்கார வைத்து... வண்டி யருகே இழுத்து வந்தாள்!

முதல் வேலையாய் ஆம்புலன்ஸுக்கு போன் செய் தாள்.

தெருவோர சோடியம் விளக்கொளியில்... அவன் காயங்கள் தெரிய... வண்டியிலிருந்த முதலுதவி பெட்டி எடுத்து... காட்டனை கொண்டு... ரத்தத்தை அழுந்தத் துடைத்தாள்!

மண்டையில் இருந்து நிற்காமல் ரத்தம் வர... பெரிய கட்டுப் போட்டாள்.



''ஹலோ... ஹலோ...'' அவன் கன்னத்தில் தட்ட.... அசைவே இல்லை.!

கொஞ்ச நேரத்தில் ஆம்புலன்ஸ் வந்து நின்று... டிரைவர் இறங்கி ஓடிவந்தான்.

அந்த புதியவனை தூக்கிப் போட்டுக் கொண்டு ஆம் புலன்ஸ் விரைந்தது.

டிரைவர் பயத்தில் வெளிறி... அவளிடம் ஏதோ சொல்லத் தயங்க...

''என்ன சார்?'' என்று கேட்டாள்.

''மேடம்... இவர் ஆக்ஸிடெண்ட் ஆகி கிடக்கார்ன்னு அரைமணி நேரத்துக்கு முன்ன போன் வந்தது. நானும் விரைந்து வந்து இவரைத் தூக்கிட்டு ஆஸ்பத்திரி போனேன்!''

''அப்புறம் ஏன் புதர்ல கிடக்கிறார்?''

''டாக்டர் தயாகரன் ஐயாதான் நைட் டூட்டி பார்க்கிறார்! அவர் இவரை அட்மிட் பண்ணிக்கலேம்மா!'' என்று சோகமாய் டிரைவர் சொல்ல...

''ஓ... மை காட்!''

''நைட்ல மனுசன் உயிரை ஏன்டா வாங்கறே? இவ்வளவு சீரியஸான கேஸை தேடிப்பிடிச்சி... என்னை பழி வாங்கவே கொண்டு வந்தாயா? நான் ரொம்ப டயர்டா இருக்கேன்! இந்த சீரியஸ் கேஸைப் பார்க்கக் கூடிய மனநிலை எனக்கு இப்போ இல்லே! அதனால அட்மிட் பண்ண முடியாது! என்ன செய்வீயோ எனக்குத் தெரியாது! ஏதாவது தனியார் ஆஸ்பத்திரி திறந்திருந்தா... அருகிலே போட்டுட்டு வந்துடு. இல்லேன்னால் ரோட்டோர புதர்ல வீசிட்டு வந்துடு! கொட்டுற பனியில செத்து மடியட்டும்!

இவன் ஒருத்தன் செத்துப் போனால், நாடு ஒண்ணும் குறைஞ்சிடாதுன்னு மனசாட்சியே இல்லாமல் பேசி... அனுமதிக்காமல் திருப்பி அனுப்ப... எனக்கொண்ணும் புரியாமல் புதர் பக்கம் வீசிட்டு வந்துட்டேன்!''

அவன் வருத்தத்துடன் கூற... தீபிகா சீறினாள்.

''ஏன் சார்... எனக்கு தகவல் தந்திருக்கக் கூடாதா?''

''தயா சார் இதுல சம்மந்தப்பட்டதால... எனக்கு புரியலே, மேடம்! அதுவும் இல்லாமல் உங்க கிட்ட சொன்னேன்னு தெரிந்தால்... என்னை தொலைச்சிடுவார்ன்னு பயந்துதான் சொல்லலே, மேடம்!''

''நீங்கயெல்லாம் ஒரு மனுஷனா? இல்லே மிருகமா?''

''ஸாரி மேடம்!'' மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டான்.

அதற்குள் ஆஸ்பத்திரி வந்துவிட... ஸ்டெக்சரில் ஏற்றி அவசரமாய் உள்ளே கொண்டு போக...

''தோ வந்துட்டாய்யா... பெரிய அன்னை தெரேசா!'' சொல்லிக் கொண்டே டாக்டர் தயாகரன் மறித்தபடி நின்றான்.

''நான் டூட்டி டாக்டர்! என் அனுமதியில்லாமல்... அவனை அட்மிட் பண்ண நீ யார்? உனக்கென்ன உரிமை இருக்கு?'' கோபமாய் கேட்க...

''தள்ளுங்க, தயா...!'' சினத்தோடு கத்தினாள்.

''முடியாது!''

''கொஞ்சம் கூட மனசாட்சியே இல்லாத மனித ஜென்மமா, நீங்க? உயிருக்குப் போராடிட்டு இருக்க ஜீவனோட வாழ்க்கையில விளையாடறீங்களே! தூரப் போங்க.!''



''ஹாஸ்பிடல் புல்கண்ட்ரோலும் என்கிட்ட இருக்கு! என்னை மீறி ஏதாவது செய்தே... என் தாக்குதலுக்கு தாங்கமாட்டே!'' தயாகர் எல்லை மீறிய ஆத்திரத்தில் கத்த...

''என்ன சார் செய்வீங்க?'' அலட்சியமாய் தீபிகா கேட்க...

''வேணாம்! என்கிட்டே வச்சிக்காதே! வம்பாப் போயிடும்!'' அந்த இளம் டாக்டர் கூற...

''சக்திவேல் மாமாவுக்கு இப்படி கொடூர குணமுள்ள மகனா? நினைக்கவே நெஞ்சமெல்லாம் எரியுது!''

அதற்குள் இரவுப் பணியில் இருந்த பிற டாக்டர்கள், நர்ஸ், மருந்தாளுனர் என அத்தனைப் பேரும் வந்து எட்டிப் பார்க்க...

''எல்லோரையும் சும்மா விடமாட்டேன்! தீபிகா யார்ன்னு நாளைக்கு தெரிஞ்சிக்கிவீங்க! தயாவோட சேர்ந்து சீட்டு கட்டு, கேரம், செஸ்ஸுன்னு கூத்தடிக்கறதும்... இழுத்துப் போர்த்திட்டு தூங்கறதும்... இதுதான் இரவுப் பணி செய்யற லட்சணமா? உயிரைக் காப்பாற்ற படிச்சிட்டு... ஏன் உயிரை எடுக்கறீங்க?''

அவள் கேட்க... அத்தனைப் பேரும் அவமானத்தில் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டனர்.

''ஏய் தீபிகா... கத்தாதே! அவனைத் தூக்கிட்டு மரியாதையா... திரும்பிப் பாராமல் போயிடு!''

மற்றவர்கள் ஓடி வந்து அவனைச் சமாதானப்படுத்தி அமர வைத்தனர்.

உடனடியாய் தீபிகாவோடு அனைவரும் வந்து உதவ... காயங்களுக்கு தையல் போட்டு... சிராய்ப்புகளுக்கு கட்டுப் போட்டார்கள்.

ஏகப்பட்ட ரத்தம் வெளியேறி விட... அவனு டைய குரூப் வகை ரத்தமே அவளுடையதாய் இருக்க... அவனுக்குத் தேவையான ரத்தமும் கொடுத்தாள், தீபிகா!

அந்த புதியவனுக்கு சிகிச்சை முடிய இரவு ஒரு மணிக்கு மேலாகிவிட்டது.

எல்லோருமே தீபிகாவுக்கு பயந்து இருந்தனர்.

தீபிகா தயாகரின் முன்பு வந்து நின்றாள். தீபிகா அவனை அவமானப்படுத்திவிட்டதாய் எண்ணிக் கொண்டு... எரிமலையாய் கொதித்துப் போய் இருந்தான்.

''தயா... ஆக்ஸிடெண்ட் ஆகி... உயிருக்கு போராடிய நோயாளியை அட்மிட் பண்ணாமல்... மனசாட்சியில் லாமல் புதர்ல வீசச் சொன்ன குற்றத்துக்காக... உங்களை நாளைக்கு என்ன செய்கிறேன் பாருங்க! உங்களை சும்மா விட்டுடுவேன்னு மட்டும் நினைச்சிடாதீங்க!'' தீபிகா வெகுண்டு எழ...

''ஏய்... துள்ளாதே! தயாப் பத்தி உனக்கு தெரியும் தானே?''

''மரியாதையா பேசுங்க, தயா!''

''உனக்கென்னடி மரியாதை? நீயும், உன் ஆத்தாவும் என் வீட்டு வேலைக்காரிங்க!''

''அது ஒரு காலத்துல!''

''இன்னைக்கும் அம்மாவுக்கு முடியலேன்னால்... என் வீட்டு சமையல் கட்டுல சமைக்கிறவள்தானே, நீ! எல்லாம் மறந்துடிச்சா! என் பெற்றோர்கள் உங்க ரெண்டு பேர் மேல் கருணை காட்டலேன்னா உயிரோடு இருந் திருப்பீங்களா? நீ படிச்ச படிப்பு என் அப்பா போட்ட பிச்சை! கவர்ன்மெண்ட் கோட்டாவுல மருத்துவம் படிக்க



இடம் கிடைச்சாலும் புக், பீஸ், போகவரச் செலவுன்னு எல்லாம் யார் செய்தது? என் டாடி இல்லேன்னால் இவ் வளவு தூரம் வந்திருக்க முடியுமா? டாக்டராகி துள்ள முடியுமா?'' என்று கேவலமாய் கேட்க...

''நிறுத்துங்க, தயா! அந்த கடனை அடைக்கிறேன்னு மாமாகிட்ட கெஞ்சி நிற்கிறேனே! மாமா வாங்கிக்க மறுக் கறாரே! என்ன செய்ய? ஏன் அதுக்கும், இதுக்கும் முடிச்சி போடறீங்க? நீங்க செய்தது குற்றமில்லையா? அதுவும் கொலை குற்றமில்லையா? ஒரு கிரிமினலை சும்மா விடலாமா?''

தீபிகா குரோதம் மேலிட குற்றங்களை அடுக்க...

''என்ன செய்யறதா நினைப்பு?''

''நேரே போலீஸ் ஸ்டேஷன் போவேன்!''

''ஏய்...'' என்று சீற...

''உங்க மேல கம்ப்ளைண்ட் கொடுக்கப் போறேன்.!''

''உன் உளறலை யாரும் ஒரு பொருட்டா எடுத்துக்க மாட்டாங்க! ஏன்னா... போலீஸ் எல்லோரும் என் பாக்கெட்டுல! அது தெரியுமா?''

''அப்படியா? எங்கே காட்டுங்க?'' கேலியாய் கூறி... எம்பி அவன் பாக்கெட்டைப் பார்க்க...

''என்ன கிண்டலா?''

''நீங்கதான் நேரம் காலம் தெரியாமல் ஜோக்கடிக் கிறீங்க! உங்க மேல கம்ப்ளைண்ட் கொடுத்து... உள்ளே தள்ளி... களி திண்ண வைக்கிறேனா... இல்லையான்னு பார்க்கத்தானே போறீங்க!''

''எந்த போலீஸ்டி என்னை உள்ளே தள்ளும்? அவ் வளவு தைரியம் இருக்கா? அப்பா... இந்த மலைக்கே அரசன்னால், நான் இளவரசனாக்கும்!''

''அந்த தைரியத்துலதான் துள்றீங்க! எனக்குத் தெரியாதா? கலெக்டர் கிட்ட போவேன்!''

''போ... போ...'' இகழ்ச்சியாய் கூற...

''அங்கேயும் என் மனு எடுபடலேன்னால்... மனித உரிமை கமிஷன்கிட்டே போவேன்!''

''யார்ன்னே தெரியாதவன் மேல் உனக்கென்ன அவ்வளவு அக்கறை? சொல்லுடி?''

''தயா... திஸ் ஈஸ் டூ மச்! வீட்டுல வாடி, போடின்னு சொல்லுவீங்க! அது சின்ன வயசுல இருந்து வந்த பழக்கம்ன்னு அனுசரித்துப் போறேன்! இது பொது இடம்! நானும் உங்களுக்கு சமமா வேலை பார்க்கற, டாக்டர்! மரியாதையா பேசுங்க, தயா!''

''இருக்க வேண்டியதுதான்! சொல்லுங்க, மேடம்?'' என்று கேலியாய் கூறினான்.

''யார் இவன்? உங்க உறவா? உங்க நண்பனா? இல்ல அதுக்கும் மேலேவா...?'' என்று அசிங்கமாய் பார்க்க...

''தயா...'' கத்தினாள்.

''யார்ன்னே தெரியாதவங்க மேலே அக்கறைக் காட்டத்தான்... மகத்தான மனித சேவை புரியும்... மருத்துவம் படிச்சிட்டு வந்திருக்கோம்! டாக்டர்ஸ் கடவுளின் மறுபிரதி! போற உயிரை மீட்டு கொண்டு வரோம்! அப்படி ஒரு இரக்கமுள்ள பணி நம்முடையது! அதை கேவலமா இப்படி பயன்படுத்தலாமா...? எல்லோரும் என்ன கிழிக்கறீங்க, ஆஸ்பிட்டல்ல? பாதி பேர் விளையாடறீங்க! பாதி பேர் நீட்டியடிச்சி தூங்கறீங்க! இதுக்குத்தான் இரவுப் பணி வேணும்ன்னு விரும்பி வாங்கிக்கிறதா? நாளைக்கு உங்க வேஷத்தை வெளுக்க வைக்கிறேன்! உங்க அய்யோக்கிய தனத்தை தோலுரிச்சிக் காட்டறேன்!...''



''ஆம்புலன்ஸ் டிரைவர், மருந்தாளுனர், நர்ஸ் மீனா, கிருபா, டாக்டர் ரம்யா எல்லோரும் சாட்சி சொல்லுவாங்க!''

''என்னை மீறி ஒருத்தி, ஒருவன் வாயைத் திறந்துடுவாங்களா?'' அலட்சியமாய் கூற...

''இல்லேன்னால் உங்களுக்குத் துணையா போலீஸ் ஸ்டேஷன் வந்து கம்பி எண்ண வேண்டி வரும்! அவங்க அதை விரும்புவாங்களா?''

எல்லோரிடமும் அதிர்ச்சி அலையலையாய் பரவி... பயம் கொள்ள வைத்தது.

## 2



பூமிப் பெண்... இரவுக்கு விடை கொடுத்து... விடியலை, காதலுடன் இருகை நீட்டி, மகிழ்ச்சியாய் வரவேற்ற... அழகான காலை ஆறு மணி!

தீபிகா அந்த புதியவன் அருகிலேயே விடிய விடிய உட்கார்ந்திருந்தாள்.

யாரையும் முதல் பார்வையிலேயே வசீகரிக்கும் அழகான தோற்றம்! பணக்கார களை தேகமெங்கும் கொஞ்சி விளையாடியது. அந்த அழகான அழுல்பேபி முகத்தை எந்தவித சின்னக்கீறலும் தீண்டாமல்... கருணையுடன் விட்டு வைத்திருந்தது.

அச்சு அசல் சின்ன வயது அஜீத் போல பேரழகனாய் இருந்தான்.

சட்டைப் பையில் ஒரு செல்போனோ... ஐ.டி. கார்டோ இல்லை. கொஞ்சம் பணம் மட்டுமே இருந்தது.

யார்? எங்கிருந்து வந்தான்? விலாசம் தெரிந்தால் சொல்லலாம் என்று அவளும், அவள் தோழி பாரதியும் தேடிப் பார்த்துவிட்டனர்.

விடியற்காலை ஐந்து மணியளவில்... தீபிகா போன் செய்ய... உடனே பாரதி வந்து சேர்ந்து விட்டாள்.

''வேணாம், தீபி! தயாவை... சக்திவேல் மாமாவுக்காகவது மன்னித்துவிடக் கூடாதா?''

''எத்தனை முறை மன்னிச்சி விடறது? அவர் அட்டூழியம் மேலும் மேலும் பெருகிட்டே போகுது! இதுக்கு முற்றுப் புள்ளி வைக்கணும்ன்னால்... தயா ஒரு முறை யாவது ஜெயிலுக்கு போகணும்! அப்போதான் இவனுக்கெல்லாம் புத்தி வரும்! கொழுப்பெல்லாம் கரையும்! நீ எனக்கு புத்தி சொல்ல வேணாம்!''

பாரதி மெல்ல வெளியே நழுவி... ஐயா சக்திவேலுக்கு போன் செய்ய... கொஞ்ச நேரத்துல... அவர் ஜீப் எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தார்.

தீபிகாவுக்கு அவரைப் பார்த்தவுடன்... பாரதி செய்த வேலையென்று தெரிந்துக் கொண்டாள்.

''வாங்க மாமா! உட்காருங்க, மாமா! தயா செய்த காரியத்தைப் பார்த்தீங்களா? பாவம் மாமா இந்த பேஷண்ட்!''

தீபிகா அனைத்தையும் சக்திவேலிடம் கூறி முடித்தாள்.

''நான் பேஷண்டை.... புதர்ல இருந்து கண்டுபிடிச்சி, தூக்கிட்டு வந்தப் பிறகாவது... என்னோட ட்ரீட்மெண்ட்



கொடுக்க வரலாமில்ல? சட்டம் பேசறார், மாமா! வாடி, போடின்னு வேற! எனக்கு இவங்க முன்னாடி அவமானமா இருக்கு, மாமா!''

''அவனை கண்டிக்கிறேன், தீபிம்மா! இந்த ஒருமுறை மன்னித்து விடக்கூடாதா?''

அந்தப் பெரிய மனிதன் வேண்டுகோள் விடுக்க...

''சக்திவேல் மாமாவின் மறுபெயர் நீதிமான்! நேர்மை தவறாதவர்! நாணயஸ்தர்! என்று நம்ம மலைஜனங்களே நம்பிட்டு இருக்கு! அப்படிப்பட்ட நீதிமானே இப்படி நியாயம் தவறி கேட்கலாமா? தப்பு செய்த மகனுக்கு துணை போகலாமா? தயாவை எத்தனை முறைதான் மன்னித்து விடறது?''

சக்திவேல் மௌனமாய் தலைகுனிந்து இருக்க...

''உயிருக்கு போராடற நோயாளிக்கு... மருத்துவம் பார்க்காதது கொலை குற்றத்துக்கு சமமில்லையா? டாக்டர்கள் கடவுளின் அவதாரங்கள் அல்லவா? அப்படிப் பட்ட கடவுளுக்கு சமமானவர் இப்படி ஒரு கொடுமையை செய்யலாமா?''

''தப்புதாம்மா! இந்த பிள்ளை உன் கண்ணிலும், கருத்திலும் படாமல் இருந்திருந்தால்... என்ன கதி யாகி இருப்பாரோ? பாவம்! யார் பெத்தப் பிள்ளையோ நம்ம இடத்துக்கு வந்து அடிப்பட்டு கிடக்கு! பெத்தவங் களுக்கு செய்தி தெரிஞ்சா துடிச்சிப் போயிடுவாங்க! இந்த பிள்ளையின் அதிர்ஷ்டம் இந்த தேவதையின் கண்ணில் பட்டு... பிழைக்கணும்ன்னு நிர்ணயிக்கப்பட்டிருக்கு!...

''இந்த ஒருமுறை மன்னிப்புங்கிற மருந்தை தயாவோட கொடூர குணத்துக்கு கொடுத்துடும்மா! எனக்காக...

ப்ளீஸ்ம்மா...! அத்தை இதை தாங்கமாட்டா, தீபிம்மா!'' சக்திவேல் கெஞ்ச...

''நான் மன்னிக்கிறதைவிட இவர் மன்னிக்கணும்! இவர்கிட்டே தப்பை உணர்ந்து, மனப்பூர்வமா மன்னிப்பு கேக்கச் சொல்லுங்க! நான் போலீஸுக்கு போகலே!''

''கேக்கச் சொல்றேன்! எங்கிருக்கான்?''

''ஓய்வு அறையில நல்லா இழுத்துப் போர்த்திட்டு தூங்கறார், மாமா!''

''பாரதி... அவனை எழுப்பி கூட்டிட்டு வாம்மா!''

கொஞ்ச நேரத்தில் தயாகரன் தூக்க கலக்கத்தோடு வந்து நிற்க...

''வேலைப் பார்க்கற லட்சணம் இதுதானா? மடையா... மடையா... கோயம்புத்தூர்லேயே கண்ணுக்கு மறைவா இருந்து தொலைக்கறதுதானே! மலைக்கு... அதுவும் உள்ளூர்க்கு ட்ரான்ஸ்பர் வாங்கிட்டு வந்து... ஏன் என் மானத்தை வாங்கறே? இது உயிர் சம்மந்தமான வேலை! நீ எந்த உயிரோடும் விளையாட வேண்டாம்! வேலையை ரிசைன் பண்ணிட்டு நம்ம தோட்டங்களை மேனேஜ் பண்ணு! என் சுமையும், அலைச்சலும் குறையும்!''

''முடியாதுப்பா!'' தயாகர் முறைப்பாய் சொல்ல...

''அப்போ ஒழுங்கா வேலையைப் பார்!''

''அவ சொல்றான்னு நீங்களும்...''

சக்திவேல் இடைமறித்தார்.

''தீபிகா போல கவர்ன்மெண்ட் கோட்டா கிடைச்சா... நீ படிச்சே? மக்கு... மக்கு... உன் மார்க்குக்கு தனியார் மருத்துவ கல்லூரிக்கு லட்ச லட்சமா கணக்கில்லாமல்



கட்டி படிக்க வச்சேன்! லட்ச லட்சமா கரைச்சிட்டு வந்திருக்கே! பிள்ளை, மக்களுக்கு ஏதாவது சேவை செய்வான்னு ஆசைப்பட்டுதான்... இவ்வளவும் செய்தது! அதை கொஞ்சம் நினைவுல வச்சிக்கோ, தயா!'' என்று புத்தி புகட்ட...

அங்கே படுக்கையில் இருந்த வாலிபனிடம் அசைவு தெரிய... அவனையே ஆவலோடு பார்த்தனர்.

மெல்ல சிரமப்பட்டு கண்களைத் திறக்க... அவன் கண்களிரண்டும் நீரில் மிதந்தன.

முதன் முதலில் கண்களுக்கு தட்டுப்பட்ட முகம், தீபிகாவுடையதுதான்!

அவளைப் பார்த்து... அந்த சேலையின் நிறம் பார்த்து...

''நான் எங்கே இருக்கேன்? எனக்கு என்னம்மா ஆச்சி? உடம்பெல்லாம் வலிக்குதும்மா! தாங்க முடியாத வலிம்மா!''

சோகமாய் சொன்னவன் அருகில் இருந்த தீபிகாவின் கைப்பற்றினான்.

ஒரு ஆணின் முதல் தீண்டல்!

அந்த தீண்டல் அவளுக்குள்ள இரசாயன மாற்றத்தை உண்டு பண்ணியது.

எல்லோரும் அதிர்ந்தனர்.

தலையில் அடிப்பட்டதால் மூளை கலங்கி விட்டதோ என்று தீபிகா கூடப் பயந்தாள்!

அவன் எழுந்தமர முயற்சிக்க... பாரதி உதவினாள்.

கண்களில் இருந்து நீர் வழிந்து விட.... தீபிகாவை உற்று நோக்கியவன்...

"நீ... நீங்க என் அம்மா இல்லே, இல்லையா? ஸாரி... ஸாரிங்க!" அவள் கையை அவசரமாய் விட்டான்.

"எனக்கு ஆக்ஸிடெண்டா? இது ஹாஸ்பிட்டலா? நீங்க எல்லாம் டாக்டர்ஸ்ஸா? என்னை பிழைக்க வச்சீட்டீங்களா? என்னை ஏன் பிழைக்க வச்சீங்க? சாக விட்டிருக்கலாமே!"

அவன் பேச்சு தயாவைத் தவிர, அத்தனைப் பேருக்கும் வலியைத் தந்தது.

"எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கா?"

"எலும்பு முறிவு இல்லே! ஆனால் காயங்கள் பலமா இருக்கு! பயப்படும்படி இல்லே! ஆனாலும் உடம்பு நல்லானதும் தலையை ஸ்கேன் பண்ணி பார்க்கறது பெட்டர்!" என்று தீபிகா அக்கறையோடு சொல்ல...

அவளையே வைத்த விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருக்க...

"மாமா... பேஷண்ட்கிட்ட தயாவை மன்னிப்பு கேட்கச் சொல்லுங்க?" தீபிகா சொல்ல...

"அதெல்லாம் முடியாது!" என்று தயா மறுக்க...

"டேய் தயா... அடங்குடா! நீ செய்த தப்புக்கு மன்னிப்பு கேட்கப் போறே! இதிலென்ன கௌரவம் பார்க்கறே?" கோபமாய் சொல்ல...

"போலீஸுக்கு போறேன்னா இல்ல! அவளை போகச் சொல்லுங்க?" திமிராய் தயா சொல்ல...

சக்திவேல் கோபம் மேலிட... ஓங்கி கன்னம் பழுக்க... தயாவை அறைந்து விட்டார்!

தயா இதை எதிர்பார்க்கவில்லை! அவமானத்தோடு, தலைகுனிந்து, கன்னத்தைப் பிடித்துக் கொண்டான்.



இங்கு நடப்பது எதற்கும் அர்த்தம் புரியாமல்... அந்த புதியவன் முழிக்க...

"மாமா... என்ன மாமா, நீங்க?"

மீண்டும் கை ஓங்கி போனவரை தீபிகா தடுத்தாள்.

"பின்னே, என்னம்மா? நானும் சின்னக் குழந்தைக்கு சொல்றாப்போல விளக்கறேன்! கேக்கறானாப் பார்! இவனை அறையாமல், முத்தம் கொடுத்து கொஞ்சச் சொல்றீயா?"

"என்ன மன்னிப்பு?" புதியவன் கேட்க...

தயாகரன் அப்பாவுக்கு பயந்து "ஸாரி சார்!" என்று சொல்லிவிட்டு... தீபிகாவை முறைத்துக் கொண்டே சென்றான்.

"மன்னிச்சிக்க, தம்பி! நான் வரேம்ப்பா!" என்று சக்திவேல் கிளம்ப... பாரதியும் அவரோடு வெளியேறினாள்.

தீபிகா அனைத்தையும் சொல்ல... அவன் நன்றி பொங்க... விழியகற்றாமல் ஸ்பரிசித்துக் கொண்டிருந்தான், அவளையே!

அந்த புதியவன்... அவள் மனவீட்டின் கதவைத் தட்ட... அவள் அனுமதியில்லாமலேயே... மனக்கதவு திறந்து... அவனை உள்வாங்கிக் கொண்டது!

அவனுடைய நிலையும் அதுதான்!

அவளின் கள்ளவிழிப் பார்வையில் கரைந்துப் போனான்!

முதன் முதலாய் அவனுள் சலனம்!

முதன் முதலாய் அவனுள் பரவசம்!

இருவரும் ஒருவரை ஒருவர் பார்வையால் பருகிக் கொண்டனர்!

முதலில் இயல்புக்கு வந்தது, அவன்தான்!

''ஸாரிங்க...! இதே கலர்ல அம்மாவும் ஒரு சேலை வச்சிருக்காங்க! நான் அம்மாதான்னு நினைச்சுட்டேன்! என் அம்மாவின் ஜாடை, உங்ககிட்ட நிறைய இருக்கு!'' என்று சொல்லிப் புன்னகைக்க...

அவன் புன்னகையை ரசித்துக் கொண்டே...

''உங்க பேர் என்ன?''

''சத்யன்!''

''ரொம்ப நல்லப் பேரு! ஆமா, எந்த ஊர்?''

''.........''

''என்ன மௌனமா இருக்கீங்க? இந்த ஊர் இல்லன்னு தெரியுது! பின்னே எந்த ஊர், நீங்க? கோடைக்காக சுற்றுலா வந்தீங்களா?''

''..........''

''ஊர் பேர், விலாசம் சொன்னாத்தானே... தகவல் கொடுக்க முடியும்! சொல்லுங்க?''

''.....................''

''யாரும் இல்லையா?''

அவன் சட்டென்று வாய் திறந்தான்.

''இப்போதைக்கு என் உறவு, சொந்தம் எல்லாமே நீங்க... நீங்க மட்டும்தான்!'' சொன்னவனின் கண்கள் நீரில் நனைய...

''கண் கலங்க வேண்டாம்! நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்! நான் கேட்கலே!''



தீபிகா கர்சீப் கொண்டு கண்களை துடைத்து விட்டாள்!

''நான் சீக்கிரம் குணமாயிடுவேனா, மேடம்?''

''ம்...!''

''காயமெல்லாம் ரொம்பவே வலிக்குது!''

''கொஞ்ச நாளில் குறைஞ்சிடும்! நான் உங்களுக்கு சாப்பாடு ப்ரிபேர் பண்ணி எடுத்துட்டு வரேன்! என் வீடு பக்கம்தான்! இருப்பீங்க, இல்லையா?''

''சீக்கிரம் வந்துடுவீங்க, இல்லே? உங்களைப் பார்த்துட்டு இருந்தா, வலியேத் தெரியல!''

சத்யன் சொல்ல... தீபிகா நாணத்தை குழைத்து... கன்னத்தில் பூசிக் கொண்டு, வெளியேறினாள்.

புது பேஸ்ட், புது ப்ரஸ், சட்டை, லுங்கி என்று வாங்கி வந்திருந்தாள்.

ஆம்புலன்ஸ் டிரைவர் உதவியுடன் பல் துலக்கி, ஆடைகளை உடுத்திக் கொண்டான்.

சூடான இட்லியில் சாம்பாரை ஊற்றி, ஸ்பூன் போட்டு கொடுத்தாள்.

அவனால் ஸ்பூன் கொண்டு சாப்பிட முடியாமல் சிராய்ப்புகள் வலியைக் கொடுக்க...

''முடியலையா? நான் ஹெல்ப் பண்றேன்!'' என்றவள் அவனிடமிருந்த தட்டை வாங்கிக் கொண்டு எதிரே அமர்ந்து... கொஞ்ச கொஞ்சமாய் ஊட்ட... அவன் அழுதே விட்டான்!

''தெய்வங்க! தேவதைங்க!'' அழுகையோடே கூற...

''ஓ... சத்யன்! சின்னக் குழந்தையா, நீங்க? ம்?'' புன்னகையோட கண்டித்தாள்.

நோயாளிகளுக்கு உணவு, உடை, பணம் என்று உதவுவாள்தான், தீபிகா! ஆனால் இதுபோலெல்லாம் உணவு ஊட்டியதில்லை.

அவளின் இந்த செய்கை அவளுக்கே ஆச்சரியமாய் இருந்தது.

அவனை கண்டதிலிருந்து 'தன்னுடையவன்... தனக்காக இறைவன் அனுப்பியிருக்கும் தேவன்!' என்ற எண்ணம் வந்து, ஆட்கொண்டு... அவளை இவ்வாறெல்லாம் செய்யச் சொன்னது.

''இது கவர்ன்மெண்ட் ஆஸ்பிட்டலா?'' கேட்டான்.

''ம்...''

''நாங்க அப்பல்லோவைத் தவிர, எந்த ஹாஸ்பிட்டலிலும் ட்ரீட்மெண்ட் எடுத்துக்க மாட்டோம்! ஹாஸ்பிட்டல் டீன் அமீர் அங்கிளுக்கு போன் பண்ணினால்.... மறுநிமிடமே பங்களாவுக்கு வந்து நிற்பார்!'' அவன் இயல்பாய் சொல்ல...

''நீங்க சென்னையா?''

சட்டென்று அவள் கேட்க... உதட்டை கடித்துக் கொண்டான்.

''ஓ.கே... ஓ.கே... நான் கேட்கலே! சென்னைன்னு மட்டும் தெரியுது! வேலைப் பார்க்கறீங்களா?''

''ம்கூம்! பிசினஸ்!''

''என்ன பிரச்சனை?''

சத்யன் மௌனிக்க...

''சொல்ல விருப்பம் இல்லேன்னால் சொல்ல வேண்டாம்! உங்க உடம்பு உள்ள கண்டிசனுக்கு, எமோஷனல் ஆகக் கூடாது!



அவனுக்கு தண்ணீர் புகட்டி, வாய் கொப்பளிக்க உதவி...

''டயர்டா இருக்கா...? படுத்துகிறீங்களா?''

''ம்...''

''நான் ரூட்டி பார்க்கணும்! படுத்து இருப்பீங்களா?''

''ம்...! ஆனால் சீக்கிரம் வந்துடணும்!'' அவன் உரிமையாய் கட்டளையிட... அவள் புன்னகைத்து வெளியே வர.. இதையெல்லாம் கண்ட தயாகர் கண்களில் தீசுவாலை சுடர்விட்டு எரிந்தது!

# 3



மேற்கு மலையோடு... அஸ்தமனச் சூரியன்... கைக் கோர்த்து, நட்பு பாராட்டி, பூமியிடம் விடைபெற்றுச் சென்ற, மாலைப்பொழுதை, அந்த மலைமகள் இனிமையாய் வரவேற்றாள்.

சத்யன் மருந்து, மாத்திரைகளின் துணையோடு... பகல் முழுக்க நன்கு உறங்கிவிட்டான்.

மதிய உணவு கொடுக்க... தீபிகா எழுப்பியும் அவன் எழவேயில்லை.

தீபிகா உள்ளே நுழைய... அவனுக்கு மெல்ல விழிப்பு வந்தது.

''என்னங்க இரவு வந்துடிச்சா? பசிக்குதுங்க! சாப்பிட எதுனா தருவீங்களா?''

''தோசை இருக்கு! சாப்பிடுங்க!''

சத்யன் எழுந்தமர்ந்து... சிரமப்பட்டு அவனே உண்டான்.

''பகல் டூட்டி மட்டும்தானா, டாக்டர்?''

''ம்...''

''நீங்க வீட்டுக்கு கிளம்பிட்டா... நான் எப்படி தனிச்சிருப்பேன்?''

''டாக்டர், நர்ஸ், பேஷண்டுங்க இருப்பாங்க! என்ன பயம்?''

''இல்லீங்க! என்னால் முடியாதுங்க! என்னையும் உங்களோட்டவே, உங்க இடத்துக்கு கூட்டிட்டு போறீங்களா?''

''விளையாடாதீங்க, சார்! நீங்க டிஸ்சார்ஜ் ஆக எப்படியும் ஒரு வாரமாவது ஆகும்! அதுவரை ஹாஸ்பிட்டல்லதான் இருக்கணும்! இருக்க முடியாதுன்னா... உங்க அட்ரஸ் கொடுங்க! தகவல் சொல்றேன்! வந்து கூட்டிட்டுப் போகட்டும்!''

''ஐய்யோ... வேணாம், டாக்டர்! நான்... நான் இங்கேயே இருக்கேன்! நான் இருக்கும் வரை எனக்காக... இங்கே நைட் டூட்டியும் சேர்த்துப் பார்க்கக் கூடாதா? ப்ளீஸ்ங்க...''

சத்யன் கெஞ்சினான்.

''நீங்களும், பாரதி மேடமும் இருந்தா எனக்கு தைரியமாகவும், தெம்பாகவும் இருக்கு! தயா சார்கிட்டே விட்டுட்டுப் போயிடாதீங்க! அந்த ஆளை எனக்குப் பிடிக்கலே! இருப்பீங்க தானே? மறுக்க மாட்டீங்க தானே?''

அவனை, அதற்கு மேல் கெஞ்சவிட மனசில்லாமல், பாரதியோடு தங்கிவிட்டாள்.



இரவு ஒவ்வொரு அறையாய் சென்று, ஊசிப் போட வேண்டியவர்களுக்கு ஊசிப் போட்டு, மாத்திரை கொடுக்க வேண்டியவர்களுக்கு மாத்திரை கொடுத்து, அன்புடன் அவர்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு பதிலளித்து விட்டு, பாரதியும் தீபிகாவும் டாக்டர்ஸ் ஓய்வறைக்கு வந்தார்கள்.

''பாரதி நீ மேஜை மேலே தலை சாய்த்து ஓய்வெடு! சத்யன் எப்படி இருக்கான்னு பார்த்து... அந்த அறையிலேயே கொஞ்ச நேரம் படிச்சிட்டு வரேன்!''

அவள் தலையசைக்க... போர்வையையும், புத்தகத்தையும் எடுத்துக் கொண்டு... சத்யன் அறைக்குள் நுழைந்தாள்.

''என்ன இன்னும் தூங்கலையா?''

''ரொம்ப குளிருதுங்க, தீபிகா!''

அவள் அறையின் மூலையில் இருந்த போர்வையை எடுத்து, உதறி, அவனுக்கு போர்த்திவிட....

''எங்க சுத்தமா இருக்குமா? எல்லாப் பேஷண்டும் போர்த்தி, துவைச்சப் போர்வையா? ஐயோ... எனக்கு பிடிக்கலைங்க!''

''நேற்று இதைத்தானே போர்த்தி இருந்தீங்க!''

''நினைவு தப்பி இருந்தப்போ தெரியலே! ஆனால் இப்போ இந்த போர்வை அருவெறுக்குது! உங்க போர்வையை போர்த்திவிடக் கூடாதா?''

அவளுடையப் போர்வையை போர்த்தி விட...

''உங்களுக்கு?''

''வேற இருக்கு! நான் பார்த்துக்கிறேன்!''

''நான் விபரம் தெரிஞ்ச பிறகு படிச்சதெல்லாம் பாரீன்ல தான்! படிக்கற காலத்துல என்னோட ஹாஸ்டல்

அறையில அம்மாவோட புடவை ரெண்டு கட்டாயமா இருக்கும்! நெஞ்சு மேல ஒரு சேலையை போட்டு, கட்டியணைச்சிகிட்டு... இன்னொரு சேலையை போர்த்திட்டு தூங்குவேன்! அதுவே இன்னும் பழகிப் போச்சு! எனக்கு தூக்கமே வர்ல! நாளைக்கு வரும் போது காலையில ஒரு சேலை கட்டியிருந்தீங்களே... அதை எடுத்துட்டு வந்து தருவீங்களா...?''

சத்யன் சாதாரணமாய் கேட்க... அவள்தான் பதறினாள்.

''ஐய்யோ... என்னங்க?''

''தப்பா எடுத்துக்காதீங்க! அதுபோல சேலை அம்மாவும் வச்சிருக்காங்க! அந்த சேலையை போர்த்திட்டு படுத்தால்... என் அம்மா அருகிலே இருக்கும் உணர்வு வரும்! அம்மான்னா எனக்கு உயிர்! பெரும்பாலும் இந்தியா வந்த பிறகு சின்னக் குழந்தையா அம்மா பக்கத்துல படுத்துப்பேன்! அம்மா மடின்னால் என்க்கு ரொம்ப இஷ்டம்! இன்னமும் அம்மா மடியில தலைவச்சி படுத்துக்க புடிக்கும்!''

அவள் அவனை ஆச்சரியமாய் நோக்கிக் கொண்டிருக்க...

''பாரதி மேடம் கூட நல்லாத்தான் பழகறாங்க! அவங்ககிட்ட கேட்டேனா? நீங்க சட்டுன்னு என் மனசுல ஒட்டிட்டிங்க! உங்களை ரொம்பப் பிடிக்குது, எனக்கு! முதன் முதலா கண்விழிச்சிப் பார்த்தப்போ... உங்களில் என் தாயைத்தான் உணர்ந்தேன்!''

''உங்களை பெரிய பிசினஸ் மேனா, நினைச்சுக் கூடப் பார்க்க முடியலை!'' அவள் மென்னகை புரிந்தாள்.

''ஏன்... பிசினஸ் மேன்னா கொம்பு முளைச்சிருக்கணுமா?''



''குழந்தை மனசா... இளகிய உள்ளமா... இருப்பதற்காக சொன்னேன்! அம்மா மேல இவ்வளவு பாசம் வச்சிருக்கீங்களே? அதை நினைச்சி வியப்பா இருக்கு! அப்புறம் ஏன்?'' மெதுவாய் அவன் குடும்பம் பற்றி கேட்கப் போக...

''அதை விடுங்க! அடுத்ததா ஒரு ஹெல்ப் பண்ணனும்! எனக்கு உடம்பு குணமானதும்... இந்த வெள்ளிமலையிலே ஒரு வேலை வாங்கித் தருவீங்களா?''

''வீட்டுல கோபிச்சிட்டு வரவேண்டியதுதான்! ஆனால், அதுக்காக இவ்வளவு வீம்பு பாராட்டுணுமா? பெற்றவர்கள், உறவினர்கள்ன்னு துடிச்சிட்டு இருப்பாங்களே? உங்களை தேடிக்காணாமல் தவிச்சிட்டு இருப்பாங்களே!''

''தவிக்கணும், துடிக்கணும், கஷ்டப்படணும், கலங்கணும்!'' கண்கள் சட்டென்று சிவந்துப் போனது.

''அது பாவமில்லையா?''

''கண்ணீர் விட்டு கலங்கி தவிக்கிறதைத்தான்... அவங்ககிட்ட இருந்து எதிர்பார்க்கிறேன்!''

''சரி உணர்ச்சி வசப்பட வேண்டாம்! காயம் கண்ட உடம்புக்கு ஆகாது! எல்லாத்தையும் மறந்து தூங்க முயற்சிப் பண்ணுங்க! நான் படிக்கணும்!''

ஓரமாய் கிடந்த மேஜையின் மேல் புத்தகத்தைத் திறந்து... நாற்காலியில் அமர்ந்து படித்தாள்.

''என்ன படிக்கறீங்க? டாக்டர் கோர்ஸ்லே எதுனா பி.ஜி. பண்றீங்களா?''

''ம்கூம்! கலெக்டருக்கு படிக்கறேன்!''

''கலெக்டருக்கு படிக்கறீங்களா?'' ஆச்சரியமாய் கேட்க...

"நிறைய படிக்கணும்! எக்ஸாம் டேட் நெருங்குது!"

"டாக்டர் தொழில்ல கிடைக்கற வருமானம் போதாதா? கலெக்டராகி வேற சம்பாதிக்கணுமா?"

"சம்பாதிக்கறதுக்காக கலெக்டருக்கு படிக்கலே! எங்க மலையக மக்களோட வாழ்க்கையைப் பார்க்கறீங்கதானே? அத்தனைப் பேரும் வறுமைக் கோட்டிற்கு கீழே வாட றாங்க! நிறைய மழை பொழிந்தால் வாழையும், சாமையும், தினையும், கம்பும், ராகியும் வெள்ளத்துல அடிச்சிட்டுப் போயிடும்! அதிகமான பனிப் பொழிவுன்னால் கம்பும், ராகியும், தினையும் சூல் பிடிக்காது! வறட்சின்னால் பட்டுப் பாழாப் போயிடும்! மரங்கள் பூத்துக் குலுங்காது! பூ பூக்கலேன்னால் 'மது'ங்கிற தேன் கிடைக்காது!......

"இப்படி எல்லாவிதத்திலும் எங்க மலையக மக்கள் பாதிக்கப்படறாங்க! பஞ்சம், பட்டினிதான் இவங்க கண்டதெல்லாம்! அரசாங்கமும், ஓட்டு வாங்கிகிட்டுப் போன எம்.எல்.ஏவும் கண்டுக்கறது இல்லே! உதவியோ, நிவாரணமோ, அல்லது நிலையான வேலையோ எதுவுமே அரசாங்கம் இவங்களுக்காக செய்யறதில்லே! எத்தனையோ மனுக்களை விபரமா எழுதி கலெக்டர், தலைமைச் செயலகம்ன்னு அனுப்பியும்... எங்க மனுக் களுக்காக சின்ன நடவடிக்கைக் கூட எடுக்கலே!...

"அந்த ஆத்திரத்திலதான் கலெக்டருக்கு படிக்க முடிவெடுத்தேன். நான் கலெக்டரானால் எங்க மலைவாழ் மக்களின் பிரச்சனைகளை சீப் மினிஸ்டர், ப்ரைமினிஸ்டர், ப்ரசிடெண்ட்ன்னு நேரா எடுத்துட்டுப் போகலாம்! அதில் வெற்றி பெறலாம்ன்னு என்னுள்ளே அசைக்க முடியாத நம்பிக்கை!" அவள் கண்களில் நம்பிக்கை நட்சத்திரம் ஒளிர்ந்தது.



"வெல்! உங்களில் அன்னை தெரேசாவைக் காண் கிறேன், மேடம்!"

"ஓ... சத்யன்! சாதாரணமா தீபிகான்னு கூப்பிடுங்க! மேடமெல்லாம் வேண்டாம்!"

"கொஞ்சம் உரிமைக் கொடுத்தால்... வா தீபிகா... போ தீபிகான்னு கூட கூப்பிடலாம்! ஜாக்கிரதை!" சத்யன் சிரித்தான்.

"என்ன தப்பு? நான் உங்களை விட சின்னவதான்!"

"சரி சொல்லு, தீபிகா? கோச்சிங் ஏதாவது எடுத்துக் கீறியா?" என்று அவன் ஒருமைக்குத் தாவ...

அவள் புன்னகையோடே சொன்னாள்,

"ம்! புதுச்சேரியில மகாத்மா காந்தி கோச்சிங் சென்டர்ல சேர்ந்து படிக்கறேன்! வாரத்துல ரெண்டு நாள் போகணும்!"

"அங்கே எங்க தங்குவீங்க? ஏங்க சின்ன பெண் என் றாலும்... வேலைக்காவது மரியாதைக் கொடுக் கணும்!'ங்க' போதுமா?"

"தங்கமாட்டேன்! இங்கே இருந்து புதுச்சேரி ஒரு 200 கி.மீ. இருக்கும். காலையில் போனால்... இரவு திரும் பிடலாம்? நான் எழுதப்போறது ப்ரிலிமினரி எக்ஸாம்! அடுத்ததா மெயின் எக்ஸாம்! அப்புறம் இண்டர்வியூன்னு ஏகப்பட்ட தடைக்கற்கள்! ஒவ்வொன்றையும் கஷ்டப் பட்டு தாண்டிட்டால் நிம்மதி! என் இன மக்களுக்கு ஏதாவது செய்யலாம்ன்னு ஒரு நம்பிக்கை பிறக்கும்!" தீபிகா கனவுகளோடு சொல்லி முடிக்க...

"சுயநலமே இல்லாத நல்ல உள்ளத்துக்கு சொந்தக்காரி, நீங்க! உங்ககிட்டதன்னம்பிக்கை நிறைய இருக்கு! அது உங்களை சாதிக்கிறவரை விடவே விடாது, தீபிகா! உச்சம் தொட்டப் பிறகுதான் ஓயும்!"

"நிஜம்மாவா?"

"யெஸ்!"

"ரொம்ப சந்தோசமா இருக்குங்க, சத்யன்! என்னை யாரும் இதுபோல புகழ்ந்ததே இல்லை! இது போல தன்னம்பிக்கையை ஊட்டியதே இல்லை! நான் சாதிச் சேன்னால்... உங்க வாய்க்கு சர்க்கரைப் போடுவேன்!" என்று மலர்ந்தாள்.

அந்த மலர்ச்சி விரைவிலேயே வாடப் போகிறது, என்று அறியாமல்!

# 4



சத்யனுக்கு தேவையானதை உள்ளன்போடு செய் தாள், தீபிகா!

நேரா நேரத்துக்கு ஊசிப் போட்டு, மாத்திரைக் கொடுத்து, காயங்களுக்கு ஆயின்மெண்ட் தடவி என்று பொறுப் போடு தீபிகா கவனித்துக் கொண்டாள்.

தீபிகாவோடு பாரதியும் சேர்ந்து அக்கறையோடு கவனிக்க... நான்கே நாளில் எழுந்து நடமாடும் அளவு தேறிவிட்டான்!

"தீபிகா... உங்களையும், பாரதி மேடத்தையும் நினைக்க நினைக்க ரொம்ப பெருமையாவும், ஆச்சரியமாவும் இருக்குங்க! சுயநலமே இல்லாத தூய்மையான, நல்ல



உள்ளங்கள்! அன்பு ஒன்றைத்தவிர அறியாத தேவதை கள்! நல்ல ப்ரண்டுங்களும் கூட!...

"உங்களிடம் வரும் நோயாளிகள் அத்தனைப்பேரும் மகளே, பேத்தி, சகோதரின்னு ஏதாவது முறை வச்சித் தானே பிரியமா கூப்பிடறாங்க! நீங்க எந்த அளவு பொறுப்புணர்ச்சியோட... உங்க கடமையை பாசத்தோட செய்திருந்தால்... இந்த அளவு பற்றும், பாசமும் இந்த மலையக மக்கள் உங்க மேல் வச்சிருப்பாங்க!"

"இன்னும் கொஞ்ச நேரத்தில் நான் காய்ச்சல் கண்டு படுக்கப்போறேன்! பனிக்கட்டி பனிக்கட்டியா என் தலைமேல் ஏற்றினால் தாங்குவேனா? ம்?" பற்கள் பளீரிட சிரிக்க...

"உங்களுக்கு ஐஸ் வக்கணும்ன்னு வர பொய்யான வார்த்தைகள் இல்ல! ஒவ்வொரு வார்த்தைகளும், சத்தியமா... என் நெஞ்சுக்குள்ளிருந்து வரும் வார்த்தை கள்!"

"தேங்க்யூ, சத்யன்!"

"உங்களைப் பெற உங்க தாய் முன் ஜென்மத்துல தவம் செய்திருக்கணும்! அதான் இவ்வளவு சொக்க தங்கமான பெண் பிறந்திருக்கீங்க? உங்க அப்பா என்ன செய்யறாங்க? பிசினஸ்ஸா? இல்ல கவர்ன்மெண்ட் வேலையா?"

அந்த கேள்விக்கு சோகமாய் தீபிகா தலைக்குனிய...

"உங்க டாடி என்ன செய்கிறார்? சொல்லக் கூடாதா?"

சட்டென்று அவள் நீண்ட நயனங்கள் பொத்துக் கொண்டு நீரைக் கொட்டியது.

"என்னங்க... நான் தவறா ஏதும் கேட்டுட்டேனா?"

அவள் உதடு பிதுக்கி அழ...

''ஐயோ... தீபிகா... ஏங்க? எதுக்குங்க அழறீங்க? நான் நிஜமாகவே தவறா ஏதும் கேட்டுட்டேனா? அழாதீங்க... அழாதீங்க... ப்ளீஸ்...''

சத்யன் அவளருகில் ஓடிப் போய் சமாதானப்படுத்த... தீபிகா தன்னை கட்டுப்படுத்தி... கண்களைத் துடைத்துக் கொண்டு... சோகமாய் புன்னகைக்க முயற்சிக்க...

''முதல்ல உட்காருங்க!'' அவனை கட்டிலில் அமர வைத்து, எதிரில் அமர்ந்தாள்.

''நான் உங்க மனசைப் புண்படுத்திட்டேனா?''

''ம்கூம்!'' அவள் தலையாட்ட...

''ஸாரி... வெரி வெரி ஸாரிங்க, தீபிகா!''

''என் நண்பராயிட்டீங்க! நீங்களும் என்னைப் பற்றி தெரிஞ்சிக்கணுமில்லையா?''

''உங்களுக்கு கஷ்டம் கொடுக்கற செய்தின்னா சொல்ல வேணாங்க!'' அவன் தவிப்புடன் மறுக்க...

''அதெல்லாம் இல்லை! எனக்கு அம்மா மட்டும்தான் இருக்கா?''

''அப்பா?''

''அப்படி ஒரு அயோக்கியன் யாருன்னே தெரியாது!'' சொன்னவளின் கண்கள் கசிய...

''ஓ... காட்!'' என்று அதிர்ந்தான், சத்யன்.

''அம்மா வாய் பேசமுடியாத... அழகான மலைஜாதிப் பெண்! இந்த வெள்ளிமலைக்கு சுற்றுலா வந்த எவன் கண்ணிலோ... அம்மாவின் அழகு ஆசையைத் தூண்ட... ஊமைப் பெண்... என்றும் பாராமல்... அம்மாவிடம் அன்பாய் பேசி.... தன் ஆசையைத் தீர்த்துக் கொண்டான்.!...''



''அவன் வெறி, காமம், ஏக்கம், எண்ணம் அத்தனையும் தீர... அம்மாவிடம் சொல்லிக் கொள்ளாமல் ஓடி விட்டான். சின்னப் பெண்... ஊமைப் பெண்... தான் ஏமாந்ததை பெற்றவர்களிடம் சொல்லத் தெரியலே! நான் வயிற்றில் வந்த பின் தான் அம்மாவின் கதி தாத்தாவிற்கு தெரிந்திருக்கிறது! ஆஸ்பத்திரி போய் கருவைக் கலைக்க போக... டாக்டர் முடியாதுன்னு கை விரிக்க... நான் பிறந்தேன்!''

அவன் அனுதாபத்தோடு நோக்கிக் கொண்டிருக்க... தீபிகா தொடர்ந்தாள்.

''நான் பொறந்த கொஞ்ச நாளில்... அம்மாவின் மன அழுத்தம் அதிகமாகி... சித்தம் கலங்கி... பைத்தியமாய் அலைய...''

''ஐய்யோ தீபிகா...''

''தாத்தா... அந்த வேதனையை தாங்க முடியாமல் நெஞ்சி வலியால் உயிர் விட்டுட்டார். தாத்தா... சக்தி வேல் ஐயா வீட்டு விசுவாசமான வேலைக்காரன்! என் கதியும், அம்மாவின் நிலையும் பரிதாபத்திற்கு உரியதாய் போக... அந்த நேரத்தில் நேசக்கரம் நீட்டியவர் சக்திவேல் ஐயாவும், மகாலட்சுமி அம்மாவும்தான்! நம் டாக்டர் தயாகரனின் பெற்றோர்கள்! அம்மா சமீபமாத்தான் குணமடைந்தாள்!...''

''என்னால முடிஞ்ச வேலையை செய்திட்டு பள்ளிக் குப் போவேன்! மகாலட்சுமி அத்தை வேலை செய்யவே விடமாட்டாங்க. நானாத்தான் விரும்பி செய்தேன்! அங்க இருந்த எல்லோருக்கும் பிடித்தாலும்... தயா ஒருத்தனுக்கு என்னைப் பிடிக்காது! ரொம்ப கீழ்தரமா பேசுவான்! நடத் துவான்! அத்தை சண்டைப் போட்டாலும் கேட்க மாட்டார்!''

''பனிரெண்டாம் வகுப்பில் விழுப்புரம் மாவட்டத் துக்கே முதலாவதா வந்து தேர்ச்சிப் பெற்றேன்!''

''நிஜமாவா? கவர்ன்மெண்ட் ஸ்கூல்ல படிச்சா?'' பிரமிப்புடன் கேட்க...

''கவர்ன்மெண்ட் ஸ்கூல்ன்னா உங்களுக்கு இளப் பமா? அங்கேயும் தரமிக்க ஆசிரியர்கள் இருக்காங்க! ஆனால், மாணவர்கள்தான் அதைப் பயன்படுத்திக்கிறதே யில்லை! எனக்கு கிடைச்ச அத்தனை ஆசிரியர்களும் நல்லவங்க! பாடத்தோட.... அன்பைப் போதிப்பாங்க! பண்பைப் போதிப்பாங்க! பொறுப்புணர்ச்சியைப் போதிப்பாங்க! பாசத்தைப் போதிப்பாங்க! சந்தேகம்ன்னு கேட்டால் முகம் சுளிக்காமல் சொல்லித் தருவாங்க! தெரியுமா?''...

''வேலூர் சி.எம்.சியில மருத்துவம் படிக்க இடம் கிடைச்சது! மாமாதான் என்னை படிக்க வச்சார்! படிச்ச உடனே அரசு தேர்வு எழுத... வேலையும், மாமா முயற்சியால் வெள்ளி மலையிலே கிடைச்சிடிச்சி!''

''என் படிப்பு மாமா போட்ட பிச்சை! இந்த உயிர், உடல் அத்தை போட்ட பிச்சை! அந்த ஒரு காரணத்துக்காகத் தான் நான் டாக்டர் தயாவோட இழிவை, கொடுமையைத் தாங்கிக்கறேன்!''

அவள் கண்களில் காட்டாறு வெள்ளமாய் கண்ணீர் பெருக்கெடுத்து ஓட.... அவன் கை சட்டென்று நீண்டது. பெரும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்.

அவள் விழிநீரைத் துடைத்து, இழுத்து மடியில் போட்டு, இதமாய் தட்டித் தாலாட்ட எழுந்த எண்ணத்தை தன்னுள்ளேப் போட்டு புதைத்துக் கொண்டான், சத்யன்!

''என் வீடு சின்னக் குடிசை வீடு! அங்க வந்து தங்கினால்... உங்களுக்கு வசதி பத்தாது! பாரதி வீடு



பெரிய பங்களா! உங்க அந்தஸ்துக்கு அங்கே தங்கி னால்தான்... போதுமான வசதியோட இருப்பீங்க! பாரதிகிட்ட சொல்லியிருக்கேன்! அவளும் சரின்னு சொல்லிட்டாள்! உங்க உடம்பு குணமாகும் வரை தங் கிக்கங்க, சத்யன்! அப்புறமா வேற ஏற்பாடு செய்ய லாம்!''

''கொஞ்ச நாள் உங்க வீட்டுலேயே தங்கிக்கிறேன்! வீடு சின்னதானாலும்... உங்க மனசு பெரிசு!'' அவன் அழுத்தம் திருத்தமாய் சொல்ல...

வேறு வழியில்லாமல், மறுக்க முடியாமல் தலையாட் டினாள்.

''எனக்கொரு நல்ல வேலை வாங்கி தருவீங்க, தானே?''

''என்ன படிச்சிருக்கீங்க?''

அவன் சொல்ல...

''வர்த்தகம் நடத்த தேவையான உச்சகட்ட படிப்பு படிச்ச உங்களுக்கு, இந்த மலையில என்ன வேலை வாங்கி தருவது? சென்னைக்கு திரும்பற வேலையைப் பாருங்க, சத்யன்! பெத்த வயிறு கலங்கி அழுதுட்டு இருக்கும்! பத்து மாதம் சுமந்து, கண் விழிச்சி காப்பாற்றி, நல்ல படிப்பு கொடுத்த பெற்றவர்களுக்கு நீங்க காட்டற விசுவாசம் இதுதானா? புரிஞ்சிக்கங்க சத்யன்! சொன்னாக் கேளுங்க!'' அவள் கெஞ்சலோடு ஆணையிட....

''என்னுடைய பிரிவை நல்லா ரசிச்சி அனுபவிக் கட்டும்!'' கோபமாய் சொல்ல...

''எவ்வளவு இனிமையானவர்! இந்த குறைந்த நாளிலே எல்லோருடைய மனதையும் கவர்ந்த நல்லவர், நீங்க! நீங்களே இப்படி பேசலாமா?''

''வலிக்குது, தீபிகா! இங்கே... இங்கே... என்று நெஞ்சைத் தொட்டுக் காட்ட...

தீபிகா அப்படியே நெகிழ்ந்துப் போனாள்.

''என் ஆசையை, விருப்பத்தை தீயிட்டு கொளுத்திட்டு... அவங்க விருப்பத்தை நிறைவேற்றப் பார்த்த பாதகர்கள்! அவர்கள் செய்த அநியாயத்தை நினைக்க, நெஞ்சே விண்டுப் போகுது, தீபிகாம்மா!''

''ஈ.ஸி... ஈ.ஸி, சத்யன்!''

''எப்பேர்ப்பட்ட வேதனையை விழுங்கிட்டு வந்திருக்கேன்! தெரியுமா, தீபிகா?'' அவன் கலங்க...

அவள் பூவிழியால் ஆறுதலாய், அவனை மென்மையாய் ஸ்பரிசிக்க...

''அவமானம், தீபிகா! ஒரு ஆணுக்கு அவமானம் எது தெரியுமா? என்ன தெரியுமா?''

அவள் புரியாமல் விழிக்க...

''ஒரு பெண்ணால் நிராகரிக்கப்படறதும், மணமேடைக்கு வந்த கல்யாணம் தடைப்படறதும்... ஒரு ஆண்மையுள்ள ஆணுக்கு எவ்வளவு பெரிய இழுக்கு! எவ்வளவு பெரிய துன்பம்! கொஞ்சம் யோசிச்சிப்பார் தீபிகா, என் நிலையை!''

''அழகு சிலையாய் அஜந்தா ஓவியமாய் இருப்பவனை ஒரு பெண் நிராகரித்தாளா? அவள் என்ன அப்படி ஒரு பேரழகியா? அல்லது கண்ணில்லாத குருட்டு ஜென்மமா?''

''எனக்கு கல்யாணம் பிடிக்கலேன்னு அந்தப் பெண் சொல்ல செத்துட்டேன், தீபிகா!''

அவன் பழைய நிகழ்வுகள் ஏடு திருப்பிச் சொல்ல.... தீபிகா கலங்கிவிட்டாள்.



# 5



பறவைகள் அனைத்தும் சுற்றித்திரிந்து... நாளெல்லாம் இரைதேடி... உழைத்துக் களைத்து... தங்களின் கூடுகளுக்கு வரிசை வரிசையாய்... கூட்டம் கூட்டமாய் சென்றுக் கொண்டிருந்தன.

கதிரவன் நாள் முழுக்க... மண்மகளுக்கு வெப்பத்தையும், வெளிச்சத்தையும் வள்ளலாய் வாரி வழங்கி... களைத்து விட்டானோ என்னவோ... முகம் வாடி... உழைத்த அலுப்பு எஞ்சியிருக்க... தாயின் மடிதேடி... மேற்கு மலைக்குள் அவசர அவசரமாய் நுழைந்துக் கொண்டிருந்தான்.

இனிய தென்றல் விரவி, எல்லோரையும் தீண்டிக் கொண்டிருந்த, ரம்யமான மாலைப் பொழுது!

அந்தக் கோவிலுக்குள் போவோரும், வருவோருமாய் சின்ன கூட்டமிருந்தது!

சத்யனின் தாய் மீனாட்சி உள்ளே நுழைய... அர்ச்சகர் அவளைப் பார்த்து புன்னகைத்து ''வாங்கம்மா....!'' என்று வரவேற்றார்.

''அர்ச்சனை யார் பேருக்கும்மா?''

''என் இளைய மகன் சத்யன் பேருக்கு, சாமி! கிருத்திகை நட்சத்திரம்!'' என்று விபரங்கள் கூற...

"விசேஷமா, அம்மா? இல்ல சின்னவருக்கு பொறந்த நாளா?"

"அதெல்லாம் இல்லீங்க, சாமி! அவனுக்கு பொண்ணே தகையமாட்டேங்குது! நாம காட்டறப் பொண்ணை புடிக்கலேங்கிறான்! அவனாவும் ஒருத்தியை கைகாட்டி கட்டி வையுங்கன்னு சொல்ல மாட்டேங்கிறான்! என்ன மனசோ தெரியல! எவளைக் காட்டினாலும் என் கற்பனை தேவதைப் போல இல்லேங்கறான்! கஷ்டமா இருக்கு! படிச்சி முடிச்சி வந்து பொறுப்பா தொழிலைப் பார்க்கிறான்! தொட்டதெல்லாம் துலங்குது! பெரியவனை விட சின்னவன் சுட்டி! ராஜகளை பொருந்தியவன்! எல்லாத்திலும் ஒழுங்கா பேச்சு கேட்கிறவன் கல்யாண விஷயத்துல மட்டும் கேட்கறதே இல்லை!" என்று கவலையாய் கூற...

"இந்தக் காலத்து பிள்ளைங்க அத்தனையும்... ஏதாவது கற்பனை, கனான்னு சொல்லிட்டு... இப்படித்தான் தாய், தகப்பன் பேச்சைக் கேட்காமல் அலையறாங்க! அவங்களுக்கு நல்லது எது? கெட்டது எது?ன்னு சொன்னாலும் புரிஞ்சிக்கறதில்லே! சுயமாகவும் சிந்திக்கறதில்லே!"

"கரெக்டா சொல்றீங்க, சாமி!"

"அவங்க அப்படித்தான் இருப்பாங்க! நாமதான் கட்டாயப்படுத்தி... நல்லப் பொண்ணாப் பார்த்து கட்டி வைக்கணும்!"

"சரிபடுமா?"

"ஏன் சரிபடாது? எந்தக் குழந்தையாவது மருந்து, மாத்திரை குடிக்கறேன்னு சந்தோசமா வாங்கிக் குடிக்குதா?"



"இல்லைதான்!"

"அதனுடைய நலன் கருதி... தேன்ல குழைச்சி... பாலாடையில் ஊற்றி... மடியிலப் போட்டு... கட்டாயப் படுத்தி, கத்தக் கத்த புகட்டறது இல்லையா? அது போல குடும்பப்பாங்கானப் பொண்ணாப் பார்த்து, இவதான் பொண்ணு, நீதான் மாப்பிள்ளைன்னு ஒரேப் பிடியாப் பிடிச்சால், சத்யன் தம்பி கட்டறுந்து எங்கேப் போயிடும்?..."

"கட்டாய கல்யாணம் என்றாலும்... மனைவி வந்து... அன்பைப் பொழிஞ்சி... அக்கறையா, அரவணைப்பா நடந்துட்டா... தானேக் கல்யாணத்துக்குப் பின்னாடி காதல் வந்துட்டுப் போகுது?" அர்ச்சகர் அழுத்தமாய்க் கூற...

"நீங்க சொல்றது சரிவருமா?" நம்பாமல் கேட்க...

"ஏன் வராது? உங்க மேல தம்பி அபரிமிதமான அன்பும், பாசமும் கொண்டிருக்கே! நீங்கன்னா தம்பிக்கு உயிர் தானே? அதை நீங்க கொஞ்சம் பயன்படுத்திக்கலாம்! உங்க சொல்லை சின்னவர் எப்படி தட்டுவார்?"

"கல்யாணம்ன்னு வரும்போது யோசிக்கறான்!"

"நீங்க அழுத்தம் திருத்தமா ஒரு முடிவோட இருந்தா சின்னவரால் மீறவா முடியும்? அது போல நீங்க அவரை வளர்க்கலையே!"

மீனாட்சி யோசித்தாள்.

"மீனாட்சியம்மா... தினமும் ஒரு பொண்ணு சமீபமாத்தான் கோவிலுக்கு வரா! தினம் ஒரு கார்ல வந்து இறங்கறா! உங்க அந்தஸ்துக்கு சரியாப் பொருந்துவா! தோற்றத்துல எவ்வளவு அடக்கம்! பேச்சில பணிவு!

நெற்றி நிறைய விபூதியும், குங்குமத்தையும் வச்சிட்டு மகாலட்சுமி கணக்கா இருக்காள்! இன்னும் கொஞ்ச நேரத்தில் வரலாம்! வந்தான்னால் சாமி மேல பக்தி பர வசத்தோட பாடறாப் பாருங்க... அதை நாள் முழுக்க கேட்டுட்டே இருக்கலாம் போல இனிமையான குரல்!''

அர்ச்சகர் சொல்லி முடிக்க...

அந்த புதியவள் வந்து ''மாலை வணக்கம், மாமா!'' என்று புன்னகைத்தாள்.

மீனாட்சியம்மாளுக்கு கண்சாடைக் காட்டினார், அர்ச்சகர்!

அவளோ... அவரைப் பார்த்து பெண் பிரமாதம் என்பது போல சிரித்து, தலையாட்டினாள்.

''சாமி பெயருக்கே அர்ச்சனைப் பண்ணிடுங்க, மாமா!'' அர்ச்சனைக் கூடையை நீட்டினாள்.

அவள் மனமுருக பாட ஆரம்பிக்க...

மீனாட்சியம்மாளோ... அவளை சத்யனின் அருகில் நிறுத்தி பொருத்தம் பார்த்தாள்.

சத்யனுக்கு பொருத்தமாய், இணையான ஜோடியாய் தெரிய... சத்யனுக்கு பட்டு வேட்டி, சட்டை அணிவித்து... அந்தப் பெண்ணுக்கு சாமுத்ரிகா பட்டுடுத்தி... மண வறையில் இருவரையும் அமர்த்த... சத்யன் அவளுக்கு தாலிக்கட்டினான்! சத்யன் அவளோடு மகிழ்ச்சியாய் குடும்பம் நடத்தி... வருடத்திற்கு ஒன்றாய் குழந்தையைப் பெற்று... மீனாட்சியின் கையில் கொடுக்க... அதை எடுத்து கொஞ்சி, கூத்தாடி...

''என்னம்மா பெண்ணைப் பார்த்தீர்களா?''

அர்ச்சகர் கேட்க... மீனாட்சியின் கற்பனை சட்டென்று அறுப்பட்டு... நிஜத்துக்கு வந்தாள்.



அந்தப் பெண் அருகில் இல்லை!

''சாமி... அந்தப் பெண் எங்கே?''

''பிரகாரத்தை சுத்தப் போயிருக்காம்மா!''

அவர் கூற... மீனாட்சி விரைந்தாள்.

அந்தப் பெண்ணருகே சென்று...

''எவ்வளவு இனிமையாப் பாடறேம்மா! உன் குரல் என் நெஞ்சிலே தேனாய் இறங்கி, தித்தித்தது! அருமைம்மா! ஆமா, உன் பேர் என்னம்மா!'' ஆசையாய் கேட்க...

''விநோதினி!''

''நல்லப் பேரும்மா! இந்த ஊரா?''

''ம்கூம்! மும்பை, ஆன்ட்டி! என் மாமா வீட்டுக்கு வந்திருக்கேன்!''

''ஓ... அப்படியா? என்ன படிச்சிருக்கே?''

''பி.எஸ்ஸி பிசிக்ஸ்!''

''அப்பா என்ன செய்யறாங்க?''

''பிசினஸ், ஆன்ட்டி!''

''வீட்டுக்கு ஒரேப் பொண்ணா?''

''இல்ல, ஆன்ட்டி! அண்ணா ஒருத்தன் இருக்கான்!''

இப்படித்தான் அவர்கள் நட்பு ஆரம்பித்தது.

தினம் தினம் கோவிலில் சந்தித்துக் கொண்டனர்.

வீட்டில் ஒருநாள் அனைவரையும் வைத்துக் கொண்டு, அந்தப் பெண்ணைப் பற்றிய விபரங்களைக் கூறினாள்.

''என்னப்பா... அந்தப் பொண்ணைப் போய் பார்க்கலாமா?''

''உங்களுக்கு வேற வேலையே இல்லையா? இப் படியா பொண்ணுங்களை வேட்டையாடுவீங்க?''

''ஏய் மடையா... மனைவி பூக்களால் தொடுத்த பூஞ் சிறைடா!''

''நிஜமாவா? அப்புறம் ஏன் என் மனைவி ஒரு ராட்சசி! அரக்கி! மோகினி பிசாசு! என்றெல்லாம் புலம்பறே! அவ கொடுமைத் தாங்கலடான்னு நேற்று கூட சொன்னாயே!''

அண்ணி ரஞ்சனா, மித்ரனை முறைக்க...

''ஏய்... ஏய்... குடும்பத்துல குழப்பம் பண்ணிடா தேடா!''

மித்ரன் அவனை கை ஓங்கி அடிக்க வந்தான்.

''பேச்சை திசை திருப்பப் பார்க்கிறாயா, சத்யா? நாளைக்கு போகலாமா?'' மீனாட்சி கேட்க...

அவன் வேண்டா வெறுப்பாய் தலையாட்டி வைத் தான்!

'ஏன்டா சம்மதித்தோம்' என்று சஞ்சலப்பட்டு மருகப் போவது தெரியாமல்!

## 6



அழகிப் போட்டியில் கலந்துக் கொண்ட நவநாகரீக நங்கையாய்.... நிலவு தேவதை, வானமென்ற அரங்கில்... ஒய்யாரமாய் நடைபயில... நட்சத்திர இளைஞர்கள் கண் சிமிட்டி... கைத்தட்டி, ஆரவாரம் செய்த.... அழகான இனிமையான இரவுப் பொழுது!



இரவானால் மொட்டை மாடியில் வந்து படுத்தி.... வானம், நிலவு, நட்சத்திரம், கருமேகம், வெண் மேகம் என்று ரசிக்கும் சத்யனுக்கு... அன்று ரசிக்கும் மன நிலையே வரவில்லை!

'காரணம்....?'

அம்மா! அம்மா ஏற்பாடு செய்திருக்கும் பெண் பார்க் கும் படலம்! அம்மா தீவிரத்தோடு மறுநாளே மும்பை கிளம்ப ஏற்பாடு செய்து விட்டாள்.

அங்கேப் போனாலும் அவனுக்குப் பிடித்த... அவன் மனதில் உலாவரும் கற்பனைப் பெண்ணைக் காணப் போவதில்லை!

திரும்பவும் பதில் 'நோ'தான்.

அம்மா கத்துவாள்!

அப்பா அதட்டுவார்!

அண்ணன் சலித்துக் கொள்வான்!

அண்ணி ரஞ்சனா மட்டும்... அவன் எண்ண ஓட்டங் களுக்கு, உணர்வுகளுக்கு மதிப்பளித்து, எதுவும் பேசாமல் நகர்ந்துப் போவாள்.

காலையில் விமானம் ஏறி மும்பை போய் சேர்ந்தார்கள்!

உயர்தர ஹோட்டலில் உண்டு, உடுத்தி பெண் வீட்டிற்கு போய் சேர மணி பதினொன்று ஆகிவிட்டது!

அந்தப் பெண்ணின் தாயும், தகப்பனும் வாசலுக்கே வந்து வரவேற்றனர்.

எல்லோரும் மகிழ்ச்சியாய் இருக்க... சத்யன் மட்டும் முகப்பவுடருக்கு பதிலாய் சோகத்தை பூசிக் கொண் டிருந்தான்.

கொஞ்ச நேரத்தில்.... பட்டு சேலைக் கட்டி, வீட்டில் உள்ள மிகுதியான நகைகள் அனைத்தையும் அள்ளி

மேலேப் பூட்டிக் கொண்டு, நெற்றி நிறைய விபூதி, குங்குமத்தோடு விநோதினி ஹாலுக்கு வர...

எல்லோரும் திருப்தியுடன் புன்னகைக்க...

சத்யனும், ரஞ்சனாவும் அலண்டு விட்டனர், அவளின் தோற்றத்தில்!

யாரோ அலாக்காகத் தூக்கி புதை குழியில் வீசிய கணக்காய், சத்யன் மிரண்டான்!

காரணம்....?

கற்பனை தேவதையின் ஜாடை துளிகூட அவளிடம் இல்லாதது கண்டுத்தான்! அந்த நேரம் பார்த்தா... மனதிற்குள் உலா வரும் பெண் வந்து... நாணப் புன்னகை வீசி... சத்யனுக்கு கண்களால் அழைப்பு விடுத்து... கவர்ச்சியாய் கொடியிடை அசைய செல்ல வேண்டும்!

விநோதினிக்கு தலையில் ஒரு கிரீடமும் சூட்டி, கையில் ஒரு வேல் கொடுத்து விட்டால்.... சாட்சாத் பராசக்திதான்! காளிதேவி தான்!

சத்யன் இடிந்துப் போய் அமர்ந்திருக்க...

''மாப்பிள்ளையை எங்களுக்கு பிடிச்சிருக்கு!'' என்ற வெடிகுண்டு வார்த்தையை அவளுடைய பெற்றவர்கள் ராஜனும், கலையரசியும் தூக்கி, அவன் மேல் போட....

''எங்களுக்கும் பெண்ணை நிரம்ப பிடித்துள்ளது!'' திராவகத்தில் தோய்த்த வார்த்தையை மீனாட்சி அவன் மேல் வீச...

''நமக்கு பிடிக்கறது இருக்கட்டும்! சத்யனுக்கும், விநோதினிக்கும் பிடிச்சிருக்கான்னு கேளுங்க!''

ரஞ்சனா இடைப்புகுந்து, அவனை புதைகுழியில் இருந்து போராடி மீட்க யத்தனித்தாள்.



''என்ன சத்யா?'' அம்மா கேட்க...

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

அவன் ஆர்வமே இல்லாமலும்...!

அவள் சுரத்தே இல்லாமலும்...!

அவன் சொல்லும் அந்த மனஈர்ப்பு, பிடிப்பு, ஒட்டுதல், பரவசம், மகிழ்ச்சி எதுவுமே அவளைப் பார்த்து ஏற் படவேயில்லை.

மாறாய்...

பக்தி பரவசத்தோடு இருக்க வேண்டியதுதான்! அதற்காக இப்படியா விபூதியையும், குங்குமத்தையும் எடுத்து நெற்றி நிறைய அப்பிக் கொண்டிருப்பது என்று வெறுப்பு வந்தது, சத்யனுக்கு!

அவளுக்கோ...

'இவன் அழகன்தான்! கம்பீரமானவன்தான்! செதுக்கிய சிலையாய்... பிசிறில்லாமல் வரைந்த ஓவியமாய்தான் இருக்கிறான்!' என்று ஒப்புக் கொண்டாலும்... அவளுக்கு அவனை ரசனையோடு நோக்க முடியவில்லை!

எதுவோ உள்ளிருந்து தடுத்தது!

இருவரின் மௌனத்தையும் பார்த்த பெரிசுகள்... மௌனத்தை சம்மதமாக எடுத்துக் கொள்ளப் போக...

''யோசித்து சொல்கிறேன், ஆண்ட்டி!'' என்று அவளும்...

''வீட்டுக்குப் போய் தகவல் கொடுக்கலாம்மா!'' என்று சத்யனும் கூற...

அங்கிருந்த பெரியவர்களின் முகம் கூம்பிவிட்டது!

விமான நிலையத்திலேயே அம்மா சாமியாட ஆரம் பித்து விட்டாள்.

''அவளுக்கு என்ன குறை? எவ்வளவு அழகா இருக்கா! இந்தக் காலத்துல இது போல ஒழுக்கமான, அடக்கமான, பக்தி பரவசம் மிக்க பெண்ணைப் பார்க்க முடியுமா? சொல்லு, சத்யா?''

''என்னை என்னம்மா செய்யச் சொல்றே? அவளைப் பிடிக்கலேம்மா!''

''என்ன குறை?'' அம்மா காரமாய் கேட்க....

''பிடிக்கலேன்னு சொன்னால் புரிஞ்சிக்க மாட்டீங் களா?'' இவனும் எகிற...

''உனக்கு திமிர் ஜாஸ்திடா! குருடனாடா நீ? தங்கச் சிலையாட்டம் இருப்பவளைப் பிடிக்கலையேங்கிறீயே! இப்போ சொல்றேன்... கேட்டுக்கோடா! என்னோட ரெண்டாவது மருமகள், விநோதினித்தான்!''

''அம்மா... முட்டாள்தனமா ஏதாவது முடிவெடுக்காதே! அவள் எனக்கு வேணாம்மா! பொறும்மா! வேறு பெண் பார்க்கலாம்மா! ப்ளீஸ்ம்மா...'' என்று அழாதக் குறையாய் சத்யன் கெஞ்சினான்.

''நான் முடிவெடுத்தால்... அதில் மாற்றமில்லே!''

''வீணா உங்க பிடிவாதத்தால், என் வாழ்க்கையை அழிச்சிடாதீங்க! கல்யாணம்ங்கிறது பரஸ்பரம் பிடிச்சி செய்யற காரியம்! இதில் உங்க விருப்பத்துக்கு மட்டும் மதிப்பு கொடுத்து... என் வாழ்க்கையை கேள்விக்குறியாக் கிடாதீங்க!''

''அவன் சொல்வதை கேளேன், மீனாட்சி!'' கீர்த்தி வாசன் இடைப்புக...

''கேட்க முடியாதுங்க!'' பட்டென்று கோபத்தோடு பதில் சொன்னாள்.



''அவன் இஷ்டத்துக்கு விட்டுடு! நீ இதுல தலை யிடாதே! பின்னால ஏதாவது குறை வந்தால், உன்னைத் தான் சொல்லுவான்!''

''என்ன குறை வரும்? நீங்க பேசாமல் வாயை மூடிட்டு இருக்கீங்களா? என்ன பிள்ளைக்காக பறிஞ்சிட்டு வரீங் களா?''

''உனக்கு ஏன் இவ்வளவு வேகம்? கட்டிக்கப் போற வனுக்கே விருப்பம் இல்லேங்கும்போது... உனக்கேன் இத்தனை நாட்டம்? விருப்பம்? ப்ரியம்? எதுக்கு இவ் வளவு தீவிரம் காட்டறே? உனக்கு அவளைப் பிடிச் சிருந்தாப் போதுமா? சத்யனுக்கு பிடிச்சிருக்க வேணாமா? அவன்தானே அவளோட வாழப் போறவன்! வாழப் போறவனுக்கே பிடிக்கலைங்கும்போது.... ஏன் இப்படி அலையறே?'' கீர்த்திவாசன் தன் பங்குக்கு எரிச்சலைக் காட்ட...

''இப்போதான் தெரியுது! யார் சப்போர்ட்டுல சத்யன் பய ஆடறான்னு! எல்லாம் உங்க வேலை தானா? இப் படியே அவன் போக்குக்கு விட்டால்... எப்போ கல்யாணம் பண்றது? எண்பதிலா?''

''இவளுக்கு உள்ளிருந்து எதுவோ ஆட்டி வைக்குது! சத்யா... நீயாச்சி...! இந்த ராட்சசியாச்சி! ஆளை விடுங்க சாமி!'' அவர் அகன்று விட....

''தம்பி விருப்பத்துக்கு மாறா ஏன் நடந்துக்கிறே?'' மித்ரன் கேட்க...., அவனும் மீனாட்சியிடம் வண்டி வண்டியாய் திட்டை வாங்கிக் கொண்டு அகன்றான்.

அம்மாவின் தீவிரம் கண்டு சத்யன் உள்ளே 'பயத்தீ' கொழுந்து விட்டு எரிந்தது!

தீயிக்கு இடையில் மாட்டிக் கொண்ட.... ரெக்கை முளைக்காத சிறு பறவையின் கதியானது, அவன் நிலைமை!

மீனாட்சி வீட்டிற்கு வந்து யாரிடமும் பேசவில்லை!

தன்னறையிலேயே முடங்கி உண்ணாவிரதம் இருந்தாள்.

ஒருநாள் முழுக்க பொறுத்துப் பார்த்தான்! மறுநாளிலும் சத்யாக்கிரக போர் நீடிக்க...

அவளுக்கு ஏற்கனவே பீபி, சுகர் என்று எக்கச்சக்க நோய்! அந்த நோய்கள் ஏதாவது வம்பை இழுத்து விட்டு விடுமோ என்று பயந்தான், சத்யன்!

கெஞ்சிப் பார்த்தான்! பெற்றவள் மனமிரங்கவில்லை!

''அம்மா... உங்களுக்கு அந்தப் பெண்ணை பரிபூரணமா பிடிச்சிருக்கா?''

அவன் கேட்க... கோபமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்!

''நான் அவளைக் கட்டிட்டா உங்களுக்கு சந்தோசமா?''

மீனாட்சி புன்னகையோடு அவனை ஏறிட்டாள்.

''அந்த விநோதினி... என் மனைவியா வந்தால்தான் உனக்கு மகிழ்ச்சின்னா எனக்கும் சம்மதமே!'' என்று சுரத்தே இல்லாமல் சத்யன் கூற...''

''நிஜமாவா? பொய் சொல்லலையே, சத்யன்?''

''உயிரோடு இருக்கும் பெற்ற தாய்க்கு மதிப்பு கொடுக்காமல்... இதய தேவதை, கற்பனை பெண்ணுன்னு, கண்ணுக்குத் தெரியாத, கானல் நீருக்கு நான் ஏன் அவ்வளவு முக்கியத்துவம் தரணும்? என் உயிர் கொடுத்தவளை விட... என் உள்ளத்துல இருக்க... நிஜமில்லாத நிழல் ஒண்ணும் பெரிசில்லே! கற்பனை, கனவுக்காக நான் நிஜத்தை இழக்கத் தயாரில்லேம்மா! நீ சாப்பிடும்மா! எனக்கு நீ முக்கியம்மா! அவளுக்கு என்னைப் பிடிச்சிருக்கான்னு கேளுங்க?''



''உன்னை எப்படி பிடிக்காமல் போகும்?'' மீனாட்சி அலட்சியமாய் கேட்க...

''இல்லம்மா! அவள் மனசுக்கும் மதிப்பு கொடுக்கணும்! மனைவிங்கிறவ... தன்னுடைய பெற்றவர்கள், சகோதர, சகோதரின்னு அத்தனை பேரையும் விட்டுட்டு வந்து... கணவனே கண்கண்ட தெய்வமாய்... மீண்டும் மறு பிறவி எடுத்து வாழப் போறவள்!....''

''பெண்கள் நிஜமாகவே தியாகத்தின் மறுபெயர் தாம்மா! எந்த ஆம்பளையாவது, மனம் விரும்பி, பெண் வீட்டுக்குப் போய் உள்ளன்போடு வாழுவானா? ம்கூம்! ஒண்ணு பெண் வீட்டாரின் கட்டளைக்கு அடிபணிந்து அங்கே காலத்தைத் தள்ளுவான்! அல்லது பெண்ணுக்கு வரவேண்டிய சொத்து, சுகத்துக்கு ஆசைப்பட்டு அங்கேப் போய் வாழுவான்.!''

''நீ சொல்றது கரைக்ட்தான்!''

''ஒரு பெண் கணவன் வீட்டிற்கு இதயப்பூர்வமா, மகிழ்ச்சியா வாழ வருகிறாள்! தன்னை புதுவாழ்க்கையில் ஈடுபடுத்திக் கொண்டு மெழுகாய் கரைகிறாள்! ஒரு பெண்ணுக்கு திருமணத்திற்கு பின்பு அவளுடைய சொர்க்கம், உயிர்மூச்சு, வாழ்க்கை எல்லாமே அவளுடைய கணவனும், குழந்தைகளும்! அப்படிப்பட்ட போற்றுதலுக்குரிய பெண்ணின் மனசுக்கும், அந்த பெண்ணிற்கும் மதிப்பளிக்கணும்மா!'' சத்யன் கூறி முடிக்க...

''போன் பண்ணிக் கேட்கிறேன்!'' அம்மா சந்தோசமாய் ஓடினாள். அம்மாவின் சந்தோசத்திற்காக, அவனின் சந்தோசத்தை அடகு வைத்து விட்ட சத்யன், உள்ளுக்குள்ளே நொறுங்கிவிட்டான்!

மும்பையிலும் விநோதினி திருமணத்தை மறுத்தாள்.

''ஏன்? அவருக்கு என்ன குறை?''

"அவருக்கு எந்த குறையுமில்லே!"

"பின்னே, ஏன் மறுக்கறே?"

"கல்யாணம் பிடிக்கலேப்பா!"

"வாய் மேலேப் போடுங்க! ஊரெல்லாம் தேடிட்டுப் போனாலும் இதுபோல நல்ல இடம் கிடைக்குமா? மாப் பிள்ளை குணத்துல தங்கம்! பாரீன் படிப்பு! பிசினஸ்ல உச்சத்துல இருக்கார்! எங்களை எதிர்த்து எதுவும் பேசாதே! வாயை மூடிட்டுப் போய் உன் வேலையைப் பார்!" என்று அதட்டினாள், கலையரசி.

விநோதினியும் அரைகுறையுமாய் சம்மதித்து வைத் தாள்.

ராஜனும், கலையரசியும் மகிழ்ந்தனர்.

அவர்களின் மகிழ்ச்சியில் தங்கள் மகள் கைப்பிடி மண் எடுத்துப் போடப்போவது தெரியாமல்!

# 7



சத்யனின் ஆசை, விருப்பம், கற்பனை, கனவுகளை அம்மா தீயிட்டு கொளுத்திவிட... சோக அலையில் விழுந்து கரையேற முடியாமல் தத்தளித்தான்.

மனசெல்லாம் வெடித்து தூள் தூளானது.

சாப்பிடப் பிடிக்கவில்லை! தூங்கப் பிடிக்கவில்லை! ஏன் அம்மாவிடம் பேசவோ... அவள் முகத்தைப் பார்க்கவோ பிடிக்கவில்லை.!



எல்லோரையும் விட்டுவிட்டு, ஆட்களே இல்லாத வனப்பகுதிக்கு சென்று விட, அவன் உள்ளம் ஏங்கியது!

பத்திரிகை அடிக்கப்பட்டு ஊரெல்லாம் விநியோகித் தனர்.

பட்டு சேலை, வேட்டி, தாலி அத்தனையையும் தரமுள்ளதாய் வாங்கினாள், மீனாட்சி.

அங்கே பொருட்களுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை கூட.... சத்யனின் மன உணர்வுக்கு கொடுக்கவில்லை!

சத்யன்... விநோதினியை செல்போனில் தொடர்பு கொள்ளும் போதெல்லாம் ஸ்விட்ச் ஆப் என்று வரும்! இல்லையேல் 'கோவில்ல இருக்கேன்! பஜன்ல இருக் கேன்! குருஜியோட பிறந்தநாள் கொண்டாட்டத்துல இருக்கேன்! குருஜி உரையாற்றுகிறார். அதை சுவாரசியமா கேட்டுட்டு இருக்கேன்!" ஒவ்வொரு நாளும் இதுபோல் காரணத்தை கற்பித்துக் கொண்டு "பிறகு பேசுங்களேன்" என்பாள்.

அவளுடைய அம்மாதான் ஒருநாள் விளக்கினாள்.

"ஆந்திராவில் உள்ள சாமியாரின் பெயரைச் சொல்லி, என் பொண்ணு அவரை தெய்வமா வணங்கறாத் தம்பி. அவர் அங்கே வரும் போதெல்லாம்... தவறாமல் அவ ருடைய உரையைக் கேட்பாள். பஜனையில் கலந்து கொள்வாள். சிலசமயம் அவர் கொல்கட்டா, புனே, டில்லின்னு வடமாநிலங்களுக்கு வந்தாக்கூட, நாங்க என்ன கண்டிச்சாலும் அவரைப் பூஜிக்க போயிடுவாள்!"

"பொண்ணு கெட்ட வழியிலப் போனால் கண்டிக் கலாம்! ஆனால் பக்தி வழியிலத்தானேப் போறான்னு நானோ, அவரோ கண்டிக்கறதில்லை! இந்த காலத்துல எந்தப் பொண்ணுங்க இறைமார்க்கத்தில ஈடுபடுதுங்க!

ஆனால் என் பொண்ணு தீவிர இறைமார்க்கத்துல ஈடுபட்டிருக்கா! பெருமைப்பட வேண்டிய விஷயம் தானே! நீங்களேச் சொல்லுங்க தம்பி?''

கலையரசி பெண்ணைப் பற்றி புகழ... தலையி லடித்துக் கொண்டான்.

''இதுபோலப் பக்தி பண்டாரத்தைக் கட்டிட்டு எப்படி குடும்பம் நடத்துவது என்று மிரண்டு போனான்.

இந்தக் காலத்தில் கட்டின கணவன்களுக்கு கொடுக் கும் மரியாதையை விட.... சாமியார்களுக்குத்தானே அதிக மரியாதையையும், விசுவாசத்தையும் காணிக்கையாக்கு கிறார்கள், சில பேதைப் பெண்கள்! அவன் இதையெல் லாம் அறியாதவனா?

இதுபோல காதலையும், நேசத்தையும் தெரியாத பெண்ணை மணந்து எப்படி மகிழ்ச்சியாய் வாழ்வது?

அவனுக்கு பயம் வந்து விட்டது!

'திருமணத்துக்குப் பின்னும் இவ்வாறு குருஜி, பஜனை, பூஜை என்று புறப்பட்டு விட்டால், அவள் மேல் கட்டுக்கடங்காத கோபம் வராதா? எப்படி அந்தக் கோபத்தை வெல்வது? எப்படி அந்த எரிச்சல்களை யெல்லாம் தீயிட்டுக் கொளுத்துவது?'

'என்னால் முடியுமா?'

'இது போன்ற பெண்ணோடு மனம் ஒப்பி வாழ முடியுமா?'

'அவள் என்னை அலட்சியப்படுத்தினால்... என்னால் தாங்க முடியுமா...?'

'ஐய்யோ கடவுளே! நான் என்ன பாவம் செய்தேன்?'

'ஏன் எனக்கு இப்படி ஒரு பெரிய தாங்க முடியாத வேதனையை வழிவகுத்து கொடுக்கிறாய்?'



'மணவாழ்க்கை சோலைவனமாய் பூத்து குலுங்க வேண்டுமல்லவா?'

'மாறாக... சோகவனமாய் வாடி, வதங்கி என் வாழ்க்கை உதிர்ந்துப் போக வேண்டுமா?'

'இதுவரை வெற்றியே கண்ட எனக்கு திருமணத்தில் மட்டும் தோல்வி வந்ததேன்? துயரம் நிறைந்ததேன்?'

'என் மனதிற்கு பிடித்தவளாய் கண்டு, மாலையிட முடியாமல், அம்மா இப்படி குறுக்கே நந்தியாய் நின்று விட்டாளே! முட்டுக்கட்டையாயும், முள்ளாயும் மாறிவிட் டாளே! ஒரு தாயே தனது மகனுக்கு தலைவிதியாய் மாறலாமா? ஒரு எதிர்ப்பார்ப்பு இல்லாத, ஏக்கம் காணாத வாழ்க்கையை நிர்ணயிக்கலாமா?'

நாட்கள் நெருங்க நெருங்க... துன்பத்தின் பாரம்... அவனைத் துவண்டுப் போகச் செய்தது.

தூக்குத் தண்டனை கைதியாய்... அந்த நாளை பெரும் துன்பத்தோடும், துக்கத்தோடும் வரவேற்றான்.

அவர்களுடைய 'சத்யன் மஹால்' சீரியல் பல்புகளின் துணையோடு தங்கமாய் மின்னியது.

இரவு மாப்பிள்ளை அழைப்பின் போது, எந்த உணர்ச்சி யும் இல்லாமல், சோகமே உருவாய் இருந்த சத்யனைக் கண்டு, அண்ணி மட்டும் மனம் பதறினாள்.

''கல்யாணமாகி வந்தப்பின் எந்தப் பெண்ணும் மாறிடுவா, சத்யன்! பெண்களை அந்த அளவு மனம் மாற வைத்து விடுகிறது.... புனிதமான தாலியும், திருமணமும்! கல்யாணமான உடனே ஒரு பெண்ணோட உலகமே அவள் கணவன்தான்! அவளுடைய குதூகலமே அவ ளுடைய குழந்தைகள்தான்! அவள் இங்கே வந்து குருஜி, பூஜை, பஜனை எல்லாத்தையும் மறந்து உன்மேல் அன்பு

செலுத்துவாள். அக்கறை கொள்வாள்! உன்னை பாசத்தோடு அரவணைத்துக் கொள்வாள்!...

''அவளின் உயிரினும் மேலான நேசம் கண்டு... நீயுமே அவளை காதலிக்கத் தொடங்குவாய்! அப்புறம் பார்... உன் இதய தேவதையெல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போய் விடுவார்கள்! அப்புறமா உன் மனைவி தான் மனம் கவர்ந்த தேவதை! சந்தோசமா இரு சத்யா!''

''என்னால முடியலையே, அண்ணி!''

''இவ்வளவு தூரம் வந்தப்பின் நீ இப்படி பேசறது கொஞ்சம் கூட நல்லாயில்லை! மாப்பிள்ளை ஏன் சோகமா இருக்கார்ன்னு... என் காதுபடவே சிலபேர் பேசறாங்க! அது மணப்பெண் வீட்டாரின் காதில் விழுவது அவ்வளவு நல்லதில்லை, சத்யன்!...

''அவளைக் காணும் போதெல்லாம்... என் தேவதை, என்னவள் என்று மனதிற்கு புத்தி புகட்டு! உன்னை மீறி உன் மனம் கட்டறுந்து ஓடிவிடுமா? ம்?'' ரஞ்சனா கூறி முடித்தாள்.

சத்யன் தலையாட்டி வைத்தான்.

மறுநாள்...

இராவணனின் பிடியால் இலங்கையில் இருந்த சீதையின் சோகமான உருவை, மனநிலையை கடனாய் பெற்று மணவறையில் அமர்ந்திருந்தான், சத்யன்!

அவன் எத்தனை பாடம் புகட்டியும் மனம் கட்டறுந்த கன்றாய் துள்ளிக் கொண்டு போய்... துன்பத்தில் விழுந்து, புரண்டு, கலங்கியழுதது!

விநோதினி அலங்கரிக்கப்பட்ட பொம்மையாய் வந்தமர்ந்தாள்.



அவள் முகத்தில் சந்தோசத்தின் சாயல் ஒரு துளி கூட இல்லை.

அது உண்மையா? அல்லது அவனுக்கு ஏற்பட்ட பிரமையா?

ஐயர் மந்திரம் ஓதி சடங்குகளை சொல்லச் செய்ய... ஒருவித தொய்வோடு சொன்னான்.

ஐயர் தாலி எடுத்துக் கொடுக்க, சத்யன் விதியே என்று கட்டப்போனச் சமயம்தான்... அது நடந்தது.

விநோதினி 'நோ....' என்று அலறினாள். சத்யனின் கையில் இருந்த தாலியைப் பிடிங்கி தூரே வீசினாள்.

பத்ரகாளியாய் மணமேடையை விட்டு எழுந்து, கழுத்தில் கிடந்த மாலையை பிய்த்தெறிந்தாள்.

எல்லோரும் அதிர்ந்து நோக்க...

சத்யன் மட்டும் எரிமலையில் மாட்டியக்கணக்காய் துடிதுடித்துப் போய் விட்டான்.

அவமானமாய் இருந்தது.

''டாடி... எனக்கு இந்த கல்யாணத்துல இஷ்டமில்லே!'' கத்தினாள்.

''விநோதினி... உனக்கென்ன பைத்தியமா? என்ன பேசறே? பேசாமல் உட்கார்!'' கலையரசி வந்து அவளை உட்கார வைக்க முயற்சிக்க...

''என்னை விடு மம்மி! எனக்கு இந்த கல்யாணமெல்லாம் வேண்டாம்! நான் என் குருஜிக்கு தொண்டு செய்யப் போறேன்! அவர் புகழ் பரப்பப் போறேன்! சாமியாராகப் போறேன்! ஆன்மீகம்தான் எனக்கு பிடிச்சிருக்கு!'' அழுத்தம் திருத்தமாய் விநோதினி பேச...

''ஐய்யோ... பாவிப் பெண்ணே!'' கலையரசி பெரும் குரலெடுத்து அழுதாள்.

கூட்டம் சலசலத்து... சுவாரசியமாய் எழுந்து நின்று வேடிக்கைப் பார்த்து நகைத்தது.

''நான் வேணாம்ன்னு மறுத்தும்... என்னை மீறி ஏற்பாடு பண்ண... உங்களை மீற முடியாமல்... மனசே இல்லாமல் ஒத்துட்டேன்! ஆனால்... ஆனால் இது தப்புன்னு இப்போதான் தெரியுது! எனக்கு ஆன்மீகம்தான் பிடிச்சிருக்கு! மணவாழ்க்கை பிடிக்கலே!''

''விநோதினி அவமானம்மா இருக்கும்மா! போய் உட்காரும்மா!'' அப்பா ராஜன் கெஞ்ச....

''முடியாது, டாடி!''

''நாங்க செல்வாக்கு உள்ள குடும்பம்! இந்தக் கல்யாணம் நின்னுப் போனால்... நாங்க எப்படி வெளியே தலைக் காட்டுவோம்!'' மீனாட்சி கதறியழுதாள்.

''என் பையன் மறுக்க மறுக்க... மிரட்டி, அடம்பிடிச்சி சம்மதம் வாங்கினேன், விநோதினி! மானமே போகுது! மணவறையில் உட்காரும்மா!''

மீனாட்சி கையெடுத்துக் கும்பிட்டாள்.

''ஆன்மீகம்தான் உன்னோட விருப்பம்னால் முன்னமே சொல்லியிருக்கலாமே!''

''படித்த பெண்தானே...! அறிவிருக்க வேணாம்...! ச்சே!''

''எங்க சத்யன் போல நல்லவனை நிராகரிச்சதுக்கு பின்னாடி வருந்துவே!''

''என்ன வளர்ப்போ! த்தூ! என் பிள்ளை கிழிச்சக் கோட்டைத் தாண்டமாட்டான்! உன் மகளை சமாதானப் படுத்தி மணவறையில் உட்கார வை!'' என்று எல்லோரும் எகிறினார்கள்.



''மான நஷ்ட வழக்குப் போட்டு, உள்ளே தள்ளிடுவேன்!'' கீர்த்திவாசன் மிரட்ட....

ராஜனும், கலையரசியும் மிரண்டுத்தான் போனார்கள்!

''விநோதினி... நம்ம குடும்பம் பண்பாடும், பாரம் பரியமும் மிக்க குடும்பம்! கல்யாணம் நிற்கறது அவமானம்மா! அதைவிட சத்யன் வீட்டுக்கு பெரும் அவமானம், இழுக்கு, மானக்கேடு! கல்யாணம் நின்னுப் போனால்... மாப்பிள்ளையின் எதிர்கால வாழ்க்கை பாதிக்கப்படும்! என்ன குறையோன்னு அசிங்கமா பேசுவாங்க! அந்த அவமானத்தோட வெளியே நடமாட முடியுமா? உச்சத்துல இருக்கப் பிள்ளையை உருக்குலைய வக்கக் கூடாதும்மா! பாவம்மா!'' கலையரசி கெஞ்ச...

''முடியாதும்மா! என்ன சொன்னாலும் இனி என் மனசு மாறாது! என் முடிவை மாத்திக்க மாட்டேன்! என் பயணம் இனி ஆன்மீக வழியிலதான்!''

''மரியாதையா போய் உட்கார்!''

''ம்கூம்!''

''கொன்னுடுவேன்! போடி! போய் உட்கார்!'' ராஜன் கத்த...

''கொல்லுங்க! நிம்மதியாப் போய் சேர்ந்துடறேன்''

ராஜன் பட்டென்று கன்னம் பழுக்க அறைந்தார். அவள் ஜடையை பிடித்து இழுத்துக் கொண்டு மணவறையை நோக்கிச் செல்ல...

விநோதினி ஆவேசம் வந்தவளாய்... அவரிடம் இருந்து விடுபட்டு...

''பெத்த அப்பான்னு மரியாதை கொடுத்தா துள்றீங்களா? அருகில்தான் ஐ.ஜி. ஆபீஸ் இருக்கு! நான் போறேன்!'' என்று வெளியே ஓடினாள்.

அருகில் இருந்த போலீஸ் ஸ்டேஷனில் தஞ்சம் புகுந்து... விஷயத்தைச் சொன்னாள்.

''சத்யா... சத்யா... என்னை மன்னிப்பாயா? உனக்கு இப்படி ஒரு துன்பத்தை, இழுக்கைத் தேடித் தந்துட்டேனே! நான் தாயே இல்லை! சாத்தான் என்னுள்ளே இருந்து இப்படியெல்லாம் ஆட்டி வச்சிடுச்சி! இந்த விநோதினி மண் குதிரைன்னு தெரியாமல் நம்பி ஆத்துல இறங்கிட்டேனே, சத்யா...''

மீனாட்சி அழ... சத்யன் அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்.

''பிஸினஸ்ல நெம்பர் ஒண்ணாய் இருந்தவனை இப்போ ஜீரோவாக்கிட்டேனே! வெளியே எப்படிடா இந்த அவமானத்தோட நடமாடுவே?....

''இத்தனை காலமும் உங்களை எதிர்த்துப் பேசாதவள், இந்த கல்யாண விஷயத்துல பேசிட்டேனே! எனக்கு எதுனா பெரிய தண்டானையாக் கொடுங்க!''

கீர்த்திவாசனின் காலில் விழுந்து அழுதாள்.

போலீஸ் ஸ்டேஷனில்...

''என்ன பெண்ணம்மா நீ? எப்பேர்ப்பட்ட குடும்பம்! சத்யன் போல கண்ணியமான பிள்ளையைப் பார்க்க முடியுமா? சத்யனுக்கு சென்னையில் எவ்வளவு போட்டி தெரியுமா? இதுநாள்வரை எவளைக் கண்டும் மனுசன் சறுக்கியதில்லை! சஞ்சலப்பட்டதில்லை! ஒரு கெட்டப் பழக்கமும் இல்லாதவர்! போய் ஒழுங்கா அவரைக் கட்டி வாழற வழியைப் பார்!''

அந்த மூத்த அதிகாரி மேலும் விளக்க ஆச்சரியமானாள்.

''சரி! அவரையே கல்யாணம் பண்ணிக்கிறேம்மா!'' என்று பெற்றவளைப் பார்த்துச் சொல்ல...



அடுத்த சில நிமிடங்களில் மண்டபத்திற்கு வந்து விபரங்களைக் கூற...

''சத்யா... உன் குணம் கேட்டு... மனம் மாறி, அவளே வந்திருக்கா! முகூர்த்தம் முடியறதுக்குள்ள தாலியைக் கட்டிடுப்பா!''

மீனாட்சி அவசரப்படுத்த...

''முடியாதும்மா!'' என்றான், ஒரு முடிவோடு!

''உன் முறையாடா?'' மீனாட்சி வெகுண்டாள்.

''முக்கியமான நேரத்துல மனசு மாறிப் போனவள்... அப்புறமா மாறாமல் இருப்பான்னு என்ன நிச்சயம்? போலீஸ் அங்கிள் புத்திமதி இன்னும் எத்தனை மணி நேரம் இவளுக்கு தாக்குப்பிடிக்கும்ன்னு யார் கண்டா? கொள்ளிக் கட்டைன்னு தெரிஞ்சே... எடுத்து என் தலையை சொறிஞ்சிக்க சொல்றீயாம்மா?''

''சத்யா... ப்ளீஸ் சத்யா...'' அப்பா கெஞ்ச...

''எனக்கு இவளோடன்னால் கல்யாணமே வேணாம்பா! எனக்கு என்ன குறைன்னு வேண்டுமானாலும், மனுஷங்க குறை கூறட்டும்!''

''பேசாமல் உட்கார்!''

''கடவுள் என்னை பெரிய இக்கட்டுல இருந்து காப்பாற்றி இருக்கார்! மலையளவு துன்பத்திலிருந்து விடுபட்டு இருக்கேன்!''

''என் பேச்சை கேட்கலேன்னால், என் பிள்ளையே இல்லை, நீ! நான் உன் அம்மா இல்லை!''

''இனி உன் மிரட்டலுக்கு இந்த சத்யா அடிபணிய மாட்டான்! அப்படி ஒரு எண்ணமிருந்தா மாத்திக் கோம்மா!''

''இனி, உனக்கு என் வீட்டுல இடமில்லே! போடா வெளியே!''

''தாராளமாய்ப் போறேன்.!''

''நான் பெத்த ரெண்டு பிள்ளையில்... என் இளைய மகன் செத்துட்டான்! மிஞ்சி இருக்கறது என் மூத்த பிள்ளை மித்ரன் மட்டும்தான்!''

அம்மா சொல்ல... சத்யனுக்கு கண்களில்... சட்டென்று கண்ணீர் பூத்தது.

மனைவி இவ்வாறு சொன்னதற்கு கண்டிக்காத தந்தையைக் கண்டு மனம் சோர்ந்துப் போனான்.

சத்யனுக்கு கண்மண் தெரியாமல் கோபம் வர, சட்டைப் பையிலிருந்த பணம், செல்போன், கழுத்து சங்கிலி அத்தனையும் எடுத்து விட்டெறிந்தான்.

''சத்யா... சத்யா...'' என்று அண்ணி ஓடிவர...

''நான் செய்தது தப்பா, அண்ணி?''

''நீ செய்ததுதான் சரி!'' என்று ரஞ்சனா தட்டிக் கொடுத்து... கொஞ்சம் பணத்தை கையில் திணித்து ''கொஞ்ச நாள் எங்காவது போய் இருந்து விட்டு வா'' என்றாள்.

''என் உணர்வுகளைப் புரிஞ்சிக்கிற ஒரே ஜீவன்! ஆனால் அண்ணி... இனி இந்த வீட்டுப்பக்கமே திரும்பிப் பார்க்க மாட்டேன்!''

ரஞ்சனா அதிர்ந்து நிற்க... சத்யன் வேகமாய் வெளியேறினான்.

சத்யன் சொல்லி முடிக்க... தீபிகா இடிந்துப் போய் அமர்ந்து விட்டாள்.

அவன் அருகில் நின்று, அவன் துக்கம், துயரம், துன்பம், வேதனை கஷ்டம் எ )லாத்தையும் அருகில்



நின்று அவனிடம் இருந்து துடைத்தெறிய மனதிற்குள் உறுதி பூண்டாள்.

அவள் உறுதி உருக்குலையப் போகிறது என்று அறியாமல்!



## 8

**மே** மாதம் தான்!

ஆனால், வான தேவனுக்கு பூமிமேல் தீராத காதல் பொங்கியதோ என்னவோ... மழையாய் உருவெடுத்து... மோகத்தோடு... வெள்ளிக் கம்பிகளாய்... ஆசையோடு, ஆவேசத்தோடு, அணைத்து குளிர்வித்துக் கொண்டிருந்தான்.

பூமிப்பெண்ணும் சிறிதும் வெட்கமில்லாமல், நாணமில்லாமல், மழையின் அணைப்பில் சிலிர்த்து, கிறங்கி, மயங்கிக் கொண்டிருந்தாள்.

ஊரெல்லாம் வெள்ளக்காடு. ஆனால் கொஞ்ச நேரத்திலேயே சிற்றோடைகளாய் கைக்கோர்த்து... பெரும் ஆறாய் உருவெடுத்து... மலையிலிருந்து மடுவை நோக்கி... பீடபூமியை நோக்கி... சமவெளியை நோக்கி... கடலை நோக்கி... துள்ளலோடும், துடிப்போடும்... இளம் குழந்தையின் வேகத்தோடு நீர் கீழிறங்கத் தொடங்கிவிடும்!

மழை... எத்தனை ஆங்காரத்தோடும், ஆவேசத்தோடும், சுழற்றி சுழற்றி மலையைப் பதம் பார்த்தாலும்... மழை விட்டவுடன் இயல்பு நிலைக்கு மாறி விடுவாள், மலையரசி!

அதுதான் மலைகளுக்கே உரியச் சிறப்பு!

மலையும் மலைச்சார்ந்த குறிஞ்சிப் பூமியில் தீபிகாவின் அருகாமையில், பாசமான அரவணைப்பில் ஒரு வாரம் ரெக்கை கட்டி பறந்து விட்டன.

தீபிகா... சத்யனை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டாள்.

பேரருவி வீழ்கின்ற மடுவினிலே தலைக்கீழாக சிக்குண்டவனின் கதியானது, சத்யனின் நிலை! தலைக்குப்புற அவளுள் அவன் விழுந்து விட்டான். தீபிகா என்ற மடு... சத்யன் என்ற மலையை விழுங்கிவிட்டது! உள்ளிழுத்துக் கொண்டது!

வானத்தின் விஸ்தீரணமாய்...

நீலக்கடலின் விரிவாய்...

மலையின் உயர்ச்சியாய்...

ஆழ்கடலின் ஆழமாய்... அவனிதயத்தில் அவள் மேலான காதல் விரிந்து, பரந்து, உயர்ந்து ஓங்கி நின்றது.

'தீபிகா... என்னை ஏற்றுக் கொள்வாளா?'

'என் காதலைப் பெற்றுக் கொள்வாளா?'

'என் இதயத்தில் உன்னை வைத்து... என் தேவதையாய் பூஜிக்கிறேனே... அது தெரியுமா, என் தீபிகா கண்ணே?'

'என் ஆருயிரே... நான் என் நேசத்தை சொன்ன மறுவிநாடி.... உன் முகம் மலருமா? பூரிக்குமா? அல்லது என் நேசம் கண்டு நெஞ்சுப் பதறிப் போவாயா?'

'என் அன்பே... உன்னை முதன் முதலாய் பார்த்த போது... நீ என்னவள் என்ற எண்ணம்தானே என்னுள் தோன்றியது!'



'முதன் முதலாய்... என் உள்ளத்தைத் தொட்டவள், நீதானே!'

'முதன் முதலாய்... என் உயிரை சுருட்டி, மடித்து, திருடிச் சென்றவள், நீதானே!'

'முதன் முதலாய்... என்னைத் தீண்டிச் சென்ற தென்றல் நீதானே?'

'எனது உயிரில் கலந்து விட்ட... உனதுயிர்யின்றி ஒருநாளும் நான் வாழேன், கண்ணே!'

'நீ மட்டும் என் நேசத்தை மறுத்துவிட்டால்... என் சின்ன இதயம் தாங்காது, பெண்ணே!'

தீபிகா... அவனை கொஞ்ச நேரம் விட்டுவிட்டு பிரிந்துப் போனால்... தவியாய் தவித்து விடுவான்!

'கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்;

தேடுங்கள், கண்டடைவீர்கள்;

தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும்.'

ஏசப்பா... பைபிள் சொல்கிறதே...

நான் கேட்டால்... அவள் இதயத்தை எனக்குத் தருவாளா?

நான் தேடினால்... அவளின் காதலை அவளுள் கண்டறிய முடியுமா?

நான் தட்டினால்.... அவளின் மனக்கதவு... எனக்காகத் திறக்குமா? திறந்து என்னை காதல் அரியணையில் அமர்த்தி, மயிலிறகால் வெஞ்சாமரம் வீசுவாளா?

தன் மனதோடும், கடவுளோடும் புலம்புவான், சத்யன்!

தீபிகா... அவனுள் அன்பை விதைத்தாள்! பாசத்தை விதைத்தாள்! காதலை விதைத்தாள்! கருணையை விதைத்தாள்! அந்த காதல் விதை முளையாகி, செடியாகி, மரமாகி, விருட்சமாய் மாறி, சடசடவென ஓங்கி உயர்ந்து, அவளுக்கு நிழல் தர காத்திருந்தது. அந்த நிழலில்

இளைப்பாற வருவாளா? அல்லது இரும்பை காய்ச்சி, அந்த மரவேரில் ஊற்ற முயற்சிப்பாளா?

அன்று காலை...

''டாக்டர்.... வாய் எப்போதும் எரியுதே, ஏன்?'' அந்த நாற்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி கேட்க...

தீபிகா இன்முகத்தோடு பதிலளித்தாள்.

''ஓ... ராதா டீச்சரா? உட்காருங்க! 'பர்னிங் மவுத் சிண்ட்ரோம்' என்று இதற்குப் பெயர்! இதற்கான உண்மையான காரணங்கள் தெரியவில்லை. எனினும் ஹார்மோன் மாற்றம், மருந்து உட்கொள்வதால் ஏற்படும் உலர் வாய், சத்துணவு குறைபாடு, பூஞ்சை தொற்று, வயிற்றில் அமிலம், படபடப்பு, வாய் சுத்தம் சரியாகப் பராமரிக்காமல் இருத்தல் ஆகியவற்றால் இப்படி ஏற்படலாம்! ஊசிப் போடறேன்! மாத்திரைத் தரேன்! அதோட கீரையை உணவில் அதிகம் சேர்த்துக்குங்க, டீச்சர்!''

''நன்றி நான் வரேம்மா!''

''நெக்ஸ்ட்....'' என்று கூற ஒரு பத்து வயது குழந்தையுடன் உள்ளே வந்த தகப்பன்...

''தங்கச்சி... என் குழந்தைக்கு அடிக்கடி தலைவலி ஏற்படுதும்மா! கண்பார்வை சரியில்லாமல் இருந்தால் இப்படி ஏற்படுமா?''

''பெரும்பாலான குழந்தைகளுக்கு கண்பார்வை சரியில்லை என்பது கவனிக்கப்படாமலேயே உள்ளது. இதனால், கற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்படுகிறது. இது 'டிஸ்லெக்சியா'வுடைய பாதிப்பு. மந்தப் படிப்பு, வகுப்பில் தகராறு செய்பவர்கள் என்று தவறாக புரிந்துக் கொள்ளப்படுகிறது. குழந்தைகளுக்கு சிவந்த கண்கள், தலைவலி, படிக்கும் போது வரிகளைத் தவற விடுவது,



கிறுக்கும் கையெழுத்து ஆகியவை இருந்தால் உடனடியா கண் பரிசோதனை செய்து விடுங்கள்! டாக்டர் நேருவிடம் ஒருமுறை போய் கண்ணை செக்கப் செய்துக் கொள்வது, நல்லதண்ணா!''

''வரேன், தங்கச்சி'' என்று வெளியேற...

அடுத்ததாய்...

''அக்கா... குழந்தை திடீர் திடீர்ன்னு அழறாக்கா...!'' அவள் கண்ணீரோடு கூற...

''ஏய் இதுக்கெல்லாமா கண்ணை கசக்குவாங்க! வயிற்றில் வாயு சேர்ந்தால் இப்படி திடீரென அழலாம்! நீ சாப்பிடும் உணவு, தாய்ப்பால் வழியே குழந்தைக்கு செல்லும்! நீ ஒவ்வாமை உள்ள பொருட்களை ஒதுக்கிட்டு கவனமா இருந்தால்... இதுபோல் உன் குட்டிப் பாப்பா அழமாட்டா!''

''வாங்க தாத்தா... என்ன பிரச்சினை?'' அந்த முதியவரைப் பார்த்துக் கேட்க...

''இரவுல தூக்கமே வரமாட்டேங்குது, தாயீ! ரொம்ப கஷ்டமா இருக்கு!''

''தினமும் நீங்க சரியான நேரத்துக்கு தூங்கப் போகணும், தாத்தா! தூங்குவதற்கு முன் டி.வி. பார்க்கக் கூடாது! டீ, காபி குடிக்கக் கூடாது! புகை, மதுவை தவிர்க்கணும்! சாப்பிட்ட உடனே படுக்காமல்... கொஞ்சம் உலாவிட்டு படுங்க! தூக்கம் தானே கண்ணை சொக்கும்!'' என்று வெள்ளையாய் சிரித்து சில மாத்திரைகளை கொடுக்க...

''நான் வரேன், மலைராணி!'' அவர் அகன்றார்.

இதையெல்லாம் அறைவாயில் நின்று கவனித்துக் கொண்டிருந்த சத்யனை தீபிகா பார்த்துவிட்டாள்.

''வாங்க, சத்யன்! இப்படி உட்காருங்க! வேலை முடிஞ்சதும், உங்க அறைக்கு வரலாம்ன்னு நினைச்சேன்! நீங்களே தேடிட்டு வந்துட்டீங்களே!''

''எப்படி? எப்படி தீபிகா?''

''எதுக்கு?''

''இவ்வளவு இனிமையா, பொறுமையா, அழகான விளக்கங்கள் கொடுக்கிறாயே!''

''எல்லா டாக்டரும் செய்யறதுதானே?

''நீ வேற... எந்த டாக்டர் இப்படி பேஷண்ட் கிட்ட புன்னகையோடு, நோயைப் பற்றியும், நோயின் தன் மையைப் பற்றியும் விளக்கறாங்க?''

''எல்லோரும் போல நாம ஏன் இருக்கணும்?''

''இந்தப் பண்படல் எங்கிருந்து வந்தது? யார் சொல்லி தந்தது?''

''என் ஆசிரியர்கள், அடுத்ததா மகாலட்சுமி அத்தை, கடைசியா காட் எனக்கு நேச்சுரலா கொடுத்ததுன்னு கூடச் சொல்லலாம்!''

"மகாலட்சுமி அம்மாவை நான் பார்க்கணும்! கிரேட் லேடி!"

''என்ன அவசரம்? உடம்பு குணமாகட்டும்!''

''நீதான் டாக்டராச்சே! என்னை உன் வீட்டுல வச்சே இனி ட்ரீட்மெண்ட் கொடுக்கக்கூடாதா? என்னால முடியல, தீபிகா! இந்த ஆஸ்பத்திரி வாடை, அழுக்கு எல்லாம் குமட்டுது! ரொம்ப கஷ்டமா இருக்கு!'' முகம் சுளித்து சத்யன் சொல்ல...

''தனியார் ஆஸ்பிட்டல்ல சேர்த்து விடட்டுங்களா?''

''ஐய்யோ... உனக்கு எதுக்கு வீண் சிரமம்? உன் ட்ரீட்மெண்டை அவமதிச்சாப்போல ஆயிடும்! நான் ட்ரீட்மெண்ட் பிடிக்கலேன்னு சொல்லலம்மா! இந்த



சுற்றுப்புற சூழல், சுகாதாரம் இல்லாத சீர்கேடு இதெல் லாம்தான் பிடிக்கலேன்னு சொல்றேன்! ப்ளீஸ்... கொஞ்சம் கருணை காட்டேன், தீபிகா!''

''இன்னும் ரெண்டு நாள்...?''

''ம்கூம்...'' அவன் சிறு குழந்தையாய் தலையாட்டி மறுத்தான்.

''தீபிகா... நீ எனக்கு செய்யும் செலவுகளை ஒரு பைசா விடாமல்... உங்க ஊரிலேயே வேலைப் பார்த்து அடைச் சிடறேன்!''

''சாப்பாடு ஒரு செலவா...?''

'இப்போ நான் அணியற ட்ரஸ் கூட நீ வாங்கித் தந்தது தான்!''

''இது பலனை எதிர்பார்த்து செய்யறதில்லே! மனி தாபிமானத்தால் செய்யறேன்!''

''என் மேல் வெறும் மனிதாபிமானம் மட்டும் தானா?'' சத்யன் சட்டென்று கேட்க....

''சொல்லு, தீபிகா? என்மேல் வெறும் மனிதாபிமானம் மட்டும் தானா?'' அவள் கண்களைப் பார்த்துக் கேட்க... அந்தக் கண்களில் பொங்கியெழுந்த பார்வை வீச்சை தாங்க முடியாமல்...

''இல்லே! அதுக்கும் மேலே நட்பும் கூட! உங்களை நான் என் ப்ரண்டா ஏத்துட்டேன்!''

அங்கிருந்து அவள் நழுவி ஓட....

'வெறும் நட்பு மட்டும்தானா? கடவுளே... என்மேல் வேறு ஏதும் ப்ரியம் இல்லையா? நேசம் இல்லையா? அப்போ நான்தான் அவளுக்காய் உருகுகிறேனா? அவ ளுக்கு என்மேல் துளிகூட விருப்பம் இல்லையா?'

சத்யன் தவித்துப் போனான், பேரலையில் மாட்டிக் கொண்ட கப்பலாய்!



# 9

அழகான சின்னக் குடில்!

வேலியமைத்து சுற்றிலும் பூந்தோட்டங்களுக்கு மத்தியில் இருந்தது. கலர்கலராய் ரோஜாக்கள் மலர்ந் திருக்க... குடிலின் அருகில் குண்டு மல்லிகை கொடி யும், முல்லைக் கொடியும் நட்டு கலைநயத்தோடு குடிசை முழுக்க ஏற்றிவிட்டிருந்தாள், தீபிகா!

முல்லையும், மல்லிகையும் மலர்ந்து, நட்சத்திரங் களாய் நகைத்து, வாசத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது.

சத்யன் அசந்து விட்டான்.

''வாவ்! வெரி பியூட்டிபுல்! எக்ஸலண்ட்! வொண் டர்புல் ஹவுஸ், தீபிகா!'' ரசித்து, ரசனையோடு சொல்ல...

''உள்ள வாங்க, சத்யன்! உங்களுக்கு இந்த சின்னக் குடிலைப் பிடிச்சிருக்கா?'' மலர்ச்சியோடு தீபிகா கேட்க...

''சொர்க்கம் தீபிகா! கலைநயத்தோட அமைச்சிருக் கீயே!''

சத்யன் உள்ளே போய் பின் வாசல் கதவு திறந்து வெளியேறி பார்க்க... அசந்து விட்டான்.

வெள்ளிக் கம்பிகளாய்... மூலிகை வாசத்தோடு நீரோடை ஒன்று சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது.



யூக்காப்லடிஸ், தேவதாரு, பைன் மரங்கள் அத்தனையும் கண்களுக்கு குளிர்ச்சியை வாரி வழங்கின!

''எங்க கொடைக்கானல், ஊட்டி எஸ்டேட் இந்த குடி லின் ஓரம் வந்து நிற்குமா என்பதே சந்தேகம்! அருமை தீபிகா! உனக்கு கலைநயமும், அழகுணர்ச்சியும் அதிகம்!''

ஷோபாவில் அமர்ந்தான்.

''இது எங்க அம்மா!'' என்று அறிமுகப்படுத்திய பார்வதி சற்றே வயது முதிர்ந்த தீபிகாதான்!

''அச்சு அசல் உன்னைப் போலவே இருக்காங்களே!''

''என் அம்மா என்னைப் போல இல்லாமல் பின் யார் போல் இருப்பாங்க? ம்?'' என்று உதடு சுழித்து அவள் புன்னகைக்க... அந்த சுழிப்பில் தோன்றிய சுழலில் மாட்டி, அவன் இதயம் சின்னாபின்னமாகியது.

அவளின் அந்த அழகை கண் எடுக்காமல் சத்யன் நோக்க... தீபிகா முகம் சூடேறி... நாணத்தில் சிவந்து உள்ளே ஓடி விட்டாள்.

இரவுக்கான உணவை தயாரிக்க... பாரதியும் வந்து விட... அந்த மூவரும் சிரிப்பு, பேச்சு, கிண்டல் என்று சாப்பாட்டை உண்ண...

இதையெல்லாம் கண்ட பார்வதியின் வயிற்றில் ஒரு பயப்பந்து உருண்டது! கவலையோடு தீபிகாவையே பார்த்துக் கொண்டிருந்தாள், அந்த ஊமை தாய்!

அவளுடைய அறையை அவனுக்கு கொடுத்தாள்.

''குட் நைட், சத்யன்! மன சஞ்சலமோ, வருத்தமோ எதுவுமில்லாமல் நல்லா தூங்கணும்! ஓ.கே. வா?'' என்று அக்கறையாய் தீபிகா சொல்ல... அப்படியே குளிர்ந்துப் போனான்.

படுக்கையில் விழுந்த சத்யன் அவளின் போர்வையை எடுத்து ஆசையாசையாய் போர்த்திக் கொண்டான். கொடியில் கிடந்த இரண்டு சேலையை எடுத்து நெஞ்சுலே அணைத்துக் கொண்டு நிம்மதியாய் நித்திரையில் ஆழ்ந்தான்.

ஆனால் தீபிகாதான் உறக்கம் வராமல் தவித்தாள்.

சத்யனின் ஞாபகத்திலேயே கரைந்து காணாமல் போனாள்.

'சத்யனின் கற்பனை தேவதையை ஒத்தவளாய் நான் இருக்க வேண்டும், கடவுளே!'

சத்யனும் அவளை விரும்பினால்... உலகத்து சந்தோசத்தையெல்லாம் ஒரு சட்டியில் போட்டு, பிசைந்து, அவனுக்கு அமுதமாய் ஊட்டி விட்டு விடுவாள்!

அவனுள் இருக்கும் துன்பத்தை துடைத்து, வழித்து, எறிந்து விட்டு... அவனுள் இன்பத்தை ஊற்றாய் பொங்க வைத்து விடுவாள்!

'சத்யன்...! சத்யன்...!'

'நான் உங்கள் தீபிகாவாய் மாற என்ன செய்ய வேண்டும்?'

'எப்படி நடந்துக் கொள்ள வேண்டும்?'

விடிய விடிய இதே புலம்பல்களோடு மல்லுக்கு நின்று... விடியற்காலையில்தான் உறக்கம் அவளை தட்டி, தழுவி தாலாட்டியது!

கொஞ்ச நேரத்திலேயே குயில்களும், குருவிகளும் விடிந்து விட்டதை அறிவிக்க...

தீபிகா எழுந்து வேக வேகமாய் வேலையை முடித்து விட்டு... ஏழு மணிக்கெல்லாம் ஆஸ்பத்திரியில் நுழைந்து விட்டாள்.



எட்டு மணி வாக்கில் விழித்த சத்யன், அவளைக் காணாதது கண்டு, சற்றே மனம் வாடினான்.

பின்னர் குளித்து, சூடான இட்லியை உண்டு விட்டு ஆஸ்பத்திரிக்கே வந்து விட்டான்.

''வாங்க! சாப்பிட்டீங்களா? அங்கேயே படுத்து ரெஸ்ட் எடுத்துக்கக் கூடாதா? கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் இருக்கும்! நடந்தா வந்தீங்க? எதுக்கு இப்படி உடம்பை அலட்டிக்கிறீங்க!'' பொறுப்பாய் கேட்க...

''நாள் முழுக்க கம்பெனி, பைல், லேப்டாப்ன்னு வேலை செய்து பழகின உடம்பு, தீபிகா! வெட்டியா சோம்பி இருக்க முடியலே! நீ ஊசியை போடு! நான் நீ சொல்ற மாத்திரையை எடுத்துத் தரேன்!'' அவன் வசீகரமாய் சிரிக்க...

அந்த சிரிப்பின் அழகை சிந்தைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டாள்!

அவள் வந்தவர்களின் நோய் அறிந்து ஊசி போட... அவள் சொன்ன மாத்திரைகளை அவன் எடுத்து நீட்ட... கொஞ்ச நேரத்தில் வெளி நோயாளிகளை பார்த்து முடித்து விட்டாள்.

அவனை உட்கார்ந்திருக்கச் சொல்லிவிட்டு உள் நோயாளிகளைப் பார்க்கச் சென்றாள்.

தயாகரன்... ஒரு அறையிலிருந்து வெளியே வந்தான். தீபிகா அருகில் வர, சட்டென்று வழியை மறித்து நின்றான்.

''நான் உள் நோயாளிகளைப் பார்க்கணும்! உங்களுக்கு என்ன வேண்டும்? எதுக்கு வழியை மறிக்கறீங்க? சொல்லுங்க?'' தீபிகா கோபமாய் கேட்க...

''நான் உன்கிட்ட பேசணும்?''

ஃ. ங்ககிட்ட பேச எனக்கு எந்த விஷயமும்
எ

லட்டாதே! ஆமா, அவன் இன்னும் ஊர் ரலையா?''

''யார்? சத்யனா? உங்களுக்கு ஏன் அவர் பற்றிய கவலை?''

''அவன் உன் வீட்டுலதானே இருக்கானாம்! நான் நம்பலே! அது நிஜமா?''

''ம்! அதுக்கென்ன?''

''உனக்கு அறிவில்லையா?''

''நான் அப்படி சொல்லலையே!'' இகழ்ச்சியாய் சிரிக்க... அவன் கோபமானான்.

''நீயோ கல்யாணமாகாத பொண்ணு! அவனும் வாலிபன்! இப்படி ஒரே வீட்டுல தங்கினால், ஊர் ஏதும் சொல்லாதா?''

''ஊர் ஏதும் சொல்லாது! ஆனால் நீங்க சொல்லுவீங்க! அசிங்கமா களங்கம் கற்பீங்க!''

''ஏய் வெட்கம் கெட்டவளே! உனக்கு ஏன் அவன் மேல் இவ்வளவு அக்கறை?''

''வார்த்தை தடிக்குது! நானும் அப்புறம் அவனே, இவனே என்பேன்!''

''கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல்... அவன் மேல் அப்படி என்ன அக்கறை பொத்துட்டு வழியுது?''

''நான் மனிதாபிமானம் உள்ள மனுஷி!''

''மண்ணாங்கட்டி! யாரும் எதுவும் பேசிடறதுக்குள்ளே அவனை அனுப்பற வேலையைப் பார்!'' சீறினான்.



''நீங்க உங்க வேலை என்னவோ அதைப் பாருங்க! நான் என் வேலையைப் பார்க்கிறேன்!''

''என்னைப் பற்றி தெரியாதில்லே! வீணா, என்கிட்ட பகைச்சிக்காதே! என் தாக்குதலுக்கு தாங்கமாட்டே!''

''அப்பப்பா... இந்த டயலாக்கையே எத்தனை முறை கேட்பது? சின்ன வயசுல இருந்து இதே டயலாக் தானா? இப்போதான் வளர்ந்துட்டீங்க இல்ல? அந்த சின்ன மூளையை யூஸ் பண்ணி வேற ஏதாவது பஞ்ச் டயலாக் விடலாமில்லே!'' என்று இடக்காய் சொல்லிவிட்டு... கொடியிடையசைய அவள் செல்ல...

தயாகர் கோபத்தின் உச்சிக்கே சென்று விட்டான்.

'இவளை விடக் கூடாது! இவளை ஏதாவது செய்ய வேண்டும்! இவளை தலைக்குப்புற தரைத்தட்டி விழ வைக்க வேண்டும்! விழுந்தவள் திரும்ப எழவே முடியாமல்!'

என் வீட்டில் வளர்ந்த கழுதை! எவ்வளவு திமிராய் பேசுகிறதே!

என்ன செய்யலாம்?

எப்படி வீழ்த்தலாம்?

அவன் தன் எண்ணங்களைக் கொண்டு... அவளுக்கு வியூகம் அமைக்க ஆரம்பித்தான்.

கொஞ்ச நேரத்தில் தீபிகா சத்யன் முன்பு வந்து, நின்று ''போகலாம்!'' என்று கூற...

''தயாகர் உன்கிட்ட என்ன கேட்டார்? ரெண்டு பேரும் சினத்தோடு காரசாரமா விவாதிச்சது போல தெரிஞ்சதே! என்ன?''

''ஒண்ணுமில்லையே! இது அபீஷியல்! ஒரு பேஷண்டுக்கு தவறான மருந்தும், ட்ரிப்பும் ஏத்திட்டார்.

அதைத்தான் கண்டிச்சேன்!'' என்று இயல்பாய் பொய் சொல்ல சத்யனும் நம்பிவிட்டான்.

அவள் ஸ்கூட்டி ஓட்ட.... அவன் பின்புறம் அமர்ந்துக் கொண்டான்.

மாலை அவனை அழைத்துக் கொண்டு வாக்கிங் சென்றாள்.

மேகக் கூட்டங்கள் தாழ்வாய் சுற்றி, சுழன்று வந்து... மோகத்தோடு அவர்களிருவரையும் தீண்டி, தெவிட்டாத இன்பத்தை தந்துவிட்டு சென்றது.

முதல் மழை என்னை நனைத்ததே...

முதல் முறை ஜன்னல் திறந்ததே...

பெயரே தெரியாத பறவை அழைத்ததே...

மனமும் பறந்ததே... இதயமும் இதமாய் மிதந்ததே...

அந்த இனிமையான பாடல் காற்றிலே மிதந்து வந்து... அவன் இதயம் தீண்ட...

''அருமையான பாடல்! இல்லையா, தீபிகா? உனக்கு இந்த பாடலை பிடிக்குதா?''

''ம்...'' என்று ஒத்துக் கொள்ள... அவளை கூர்மையாய் பார்த்தான்.

சாலையின் இரு மருங்கிலும், பள்ளத்தாக்குகளிலும் இருந்த மரங்களில்.... மரம் கொள்ளாமல் பூத்துக் குலுங்கும் பூக்களின் நறுமணத்தை இதயம் வரை ஆழ சுவாசித்து... தீபிகாவிடம் கேட்டான்.

''தீபிகா... இந்த பூக்கள் எவ்வளவு ரம்யம்! இலைகளே தெரியாத அளவு பூத்துக் குலுங்குதே! சின்ன சின்ன வெள்ளை நிறமுள்ள மலர்கள்! ஆஹா... இதன் வாசம் சூப்பர் தெரியுமா? ஆமா.. இது என்ன மரங்கள்?'' ஆர்வத்தோடு சத்யன் கேட்க...



''வெப்பாலை மரங்கள்!''

''நான் கேள்விப்பட்டதில்லையே! அதுவும் இல்லாமல் சமவெளியில் இதுபோல மரங்களைப் பார்த்ததா நினைவில்லே!''

''எங்க மலைக்கே உரிய சிறப்பான மரம் இது! இந்த வருடம் மார்ச், ஏப்ரல்ல பரவலா கோடை மழைப் பெய்தது இல்லையா? அதன் பயனாய்தான் ரொம்ப வருஷத்துக் கப்புறம்... இந்த மரங்கள் பூத்து குலுங்குது!

''வெப்பாலை பூக்களின் மலர்ச்சியால் எங்க மலை வாழ் மக்களின் மனசெல்லாம் குளிர்ந்து போய் இருக்கு!''

''ஏன்?''

''மற்ற பூக்களை விட வெப்பாலை பூக்களில் 'மது' என்று அழைக்கப்படும் தேன் அதிகமா இருக்கும்! இது தவிர தேனீக்களை தங்கள் வசம் கவர்ந்து இழுக்கும் அபூர்வ சக்தி, இந்த பூக்களுக்குண்டு! வெப்பாலை பூக்களில் மது அதிகமாக இருப்பதால் தேனீக்கள் அதை சேகரித்து அதிக அளவில் கூடு கட்டும்!''

''வெரி இண்ட்ரஸ்டிங்க் நியூஸ்!'' கண்கள் மின்ன கூறினான்.

''இந்த ஆண்டு எங்கள் வனப்பகுதியில் தேனீக்கள் அதிக அளவில் கூடும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் நடப்பு ஆண்டில் தேன் உற்பத்தி அதிகரித்து... எங்கள் மக்களின் வாழ்க்கை தரம், வருமானம் உயர்ந்திடும்! இங்கே தேன் எடுக்கும் தொழிலாளிகள்தானே அதிகம்! அவங்க எல்லோரும் ஆனந்தமா இருக்காங்க!''

அவன் மனதிற்குள் நினைத்தான்.

'பெண்களில் தீபிகா கூட அபூர்வ பெண்தான்! அபூர்வ மலர்தான்!'

'இந்த அபூர்வ பூவை நான் மாலையாய் என்று சூடிக் கொள்வேன்! அந்த நாட்கள், நேரம் கூடிய சீக்கிரமே ஒன்று கூடி வருமா?'

இவனின் ஏக்கம் ஒருநாளும் நிறைவேறாது எனத் தெரியாமல்!

# 10



விடியலை பகல் பொழுது விலைக்கு வாங்கிக் கொண்ட... அழகான காலைப்பொழுது!

இருட்டை வேகமாய் விரட்டியடிக்க காலைப் பொழுது முனைப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

சத்யனுக்கு விழிப்பு வந்து... படுக்கையில் புரண்டுக் கொண்டிருந்தான்.

''உள்ளே வரலாமா...?'' குரல் கொடுத்துக் கொண்டே, தீபிகா உள்ளே நுழைந்து, காபியை அவனிடம் நீட்ட வாங்கிக் கொண்டான்.

''இன்னைக்கு நாம முக்கியமான நபரை சந்திக்கப் போறோம்!''

''யார் தீபிகா? உன் மகாலட்சுமி அத்தையையா?''

''ம்! உங்களை அழைச்சிட்டு காலையிலே வரச் சொன்னாங்க!''

''வேணாம், தீபிகா! தயாகர் என்னைக் கண்டாலே எரிச்சல் படுவார்! 'மதியாதார் வாசலை மிதிக்கக் கூடாது'ன்னு நானும் படிச்சிருக்கேன்!''



''தயாகருக்கு ஏன் முக்கியத்துவம் தரீங்க? அழைப்பு விடுத்த அத்தை கோபிச்சுக்குவாங்க!''

''சரி வரேன்!''

''காலை உணவு அங்கே தான்!''

''உன்னோட வழவழ, கொழகொழ சமையல்ல இருந்து தப்பிச்சேன்!'' சத்யன் சிரித்தபடி கூற...

''என் சமையல் அந்த அளவா மோசம்? சொல்லுங்க, சத்யன்?'' அவள் நிஜமான சந்தேகத்துடன் கேட்க...

'நீ காலமெல்லாம் சமைத்துப் போடவேண்டும், தீபிகா! அதை நான் அலுத்துக் கொள்ளாமல் அமிர்தமாய் உண்பேனே! என் எண்ணம் நிறைவேறுமா?'

''உன் சமையல் பிரமாதம்! என் அம்மாவின் கையால் சாப்பிடுவது போல இருக்கு! சும்மா சீண்டினேன்! ஸாரிம்மா, தீபிகா!''

அந்தச் சொற்கள் அனைத்தும், அவள் உயிருக்குள் ஊடுருவி, ஆனந்தத்தைக் கொடுத்தது.

கண்கள் பளபளக்க விழி எடுக்காமல் அவனையே நோக்கினாள்.

அந்த பிரமாண்டமான பங்களாவிற்குள் சத்யனும், தீபிகாவும் உள்ளே நுழைய... புன்னகையோடு வந்து வரவேற்றாள், மகாலட்சுமி.

''உட்காருங்க! சாப்பாடு தயாரா இருக்கு! எங்க தயாவையும் கூட்டிட்டு வந்துடறேன்!''

தயாகரனிடம் போய் நிற்க...

''உனக்கு வேற வேலையே இல்லையாம்மா? கண்டவனுக்கெல்லாம் விருந்து படைத்து உபசரிக்கணும்ன்னு என்ன தலையெழுத்தா? எல்லாம் இந்த தீபிகா பண்ற அட்டகாசமா?'' என்று கோபமாய் கேட்க...

''எதுக்கெடுத்தாலும் நீ தீபிகாவைத்தான் குற்றம் சொல்லுவே! எப்போதான் இயல்பான மனிதனா மாறு வீயோ? நான் அந்த தம்பியைப் பார்க்கணும்ன்னு விரும் பினேன்! தீபிகாகிட்டே சொல்ல அழைச்சிட்டு வந் திருக்கா! தப்பா?''

''தப்பே இல்ல! நீ போய் முதல்ல அவங்களுக்கு இன்முகத்தோட விருந்து படை! எனக்கு பசிச்சா வந்து சாப்பிட்டுக்குவேன்!''

தயாகரின் வார்த்தைகளில் வெறுப்பு வெளிப்பட ''உன்னை திருத்தவே முடியாது, தயா!'' என்று சலிப்புடன் வெளியேறினாள்.

மகாலட்சுமி பரிமாற சத்யன், தீபிகா, சக்திவேல் மூவரும் உண்டனர்.

''உடம்பை பத்திரமா பார்த்துக்குங்க! உடம்பு குண மானதும் ஊருக்கெல்லாம் போகலாம்! எனக்கு வேலை யிருக்கு! தப்பா நினைச்சிக்காதீங்க! நான் வரேன்!''

சக்திவேல் மன்னிப்பு கேட்டுக் கொண்டு வெளி யேற...

''வாங்க தம்பி வீட்டை சுத்திக் காட்டறேன்! தீபிம்மா ஒரு உதவி செய்யுடா! தயா பயலை கூட்டி வந்து சாப்பிட வச்சிடும்மா!'' என்று பணித்து விட்டு சத்யனோடு நகர்ந்தாள். மகாலட்சுமி.

தீபிகா தயாகர் முன்பு நிற்க...

''அந்த சத்யனை இழுத்துட்டு, என் வீடு வரைக்கும் வந்தாச்சா? என் அம்மா மனசையும் கெடுத்தாச்சா?'' நக்கீரனாய் குற்றம் சாட்ட...

''அத்தைதான் வற்புறுத்தினாங்க! அவர் இங்க வரவே விரும்பவில்லை! என் சொல்லுக்குக் கட்டுப்பட்டு வந்திருக்கார்!''



''அவனை பேக்கப் பண்ணி சென்னைக்கு எப்போதான் அனுப்பப்போறே?''

''எப்படி அனுப்ப? வீட்டுல உள்ள மனுஷங்ககிட்ட கோபிச்சிட்டு... நம்ம மலையில தஞ்சம் புகுந்தவருக்கு... எதிர்பாராதவிதமா ஆக்ஸிடெண்ட் ஆகிடிச்சி! ட்ரீட் மெண்ட்ல இருக்கார்! முடியட்டுமே! மெல்ல புத்தி புகட்டி அனுப்பறேன்!''

''அந்த தடியனுக்கு என்னதான் பிரச்சனை?''

''அது அவர் பர்சனல்! எனக்கு சொல்ல அனுமதி யில்லே! ஆமா... அவர் தடியனா? அவரா? இல்ல நீங்களா? உங்க உருவத்தை குனிஞ்சி கீழே வரைக்கும் பார்க்கறதே இல்லையா?'' என்று தீபிகா நக்கலாய் கூற... ஒரு வித கலக்கத்துடன் தன்னை அவசரமாய் குனிந்துப் பார்க்க...

''பயந்துட்டீங்களா, தயா? ச்சும்மா மிரட்டினேன்! நீங்க ஆள் நல்ல அழகுதான்! ராஜகளையோடு கூடிய கம்பீரம் தான்! அசரவைக்கும் ஆண்மை நிரம்பியவர்தான்! மொத் தத்துல உருவம் அழகுதான்! உடல் பளிங்குதான்! ஆனால் உங்க உள்ளம்தான் அழகில்லே! ஒரே அழுக்கா, தூசா, கோரமா, இருக்கு! உடலில் உள்ள அழகு உள்ளத்தில் இருக்க வேண்டாமா? கழுவுங்க, தயா உங்க உள்ளத்தை!''

தீபிகா அவன் அழகை புகழ... தயாகர் ஒருவித பரவசத்துடன் வானில் மிதந்தான்.

புதுவித உணர்வு ஆட்கொள்ள அவளை ஊடுருவி னான், பார்வையால்!

''அறிவற்றவர்கள்... அளவற்ற சாத்திரங்களை, வேதங் களைக் கேட்டிருப்பினும், படித்திருப்பினும் அவற்றின் உட்பொருளை உணர்ந்து நடந்துக் கொள்ளமாட்டார்கள்!

ஆனால், நீங்கள் அறிவில்லாதவரா? இல்லையே! மெத்தப் படித்தவர்! உயிர் காக்கும் உன்னதமான தொழில் செய்பவர்! ஆனால், அந்த உயிர்களின் உன்னதம், மதிப்பு தெரியாதவரா இருக்கீங்களே, தயா!...''

''செய்யும் தொழிலை தெய்வமாக கருதுவதும், தொடங்கிய செயலில் இடைவிடாத முயற்சியை விடா மலும், பிறர் பொருளை விரும்பாமலும், அண்டினவரைக் காப்பாற்றுவதுமே, நல்ல மனிதனுக்கு அழகு! நான் அதைத்தான் செய்யறேன்! என்னை நம்பி இருப்பவரை எப்படி போங்க என்று துரத்துவது?''

தயாகர் அதிசயமாய் அவளையேப் பார்த்துக் கொண் டிருக்கத் தொடங்கினாள்.

''ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஈரம், தெய்வீகத் தன்மை, இரக்கம், கருணை, அன்பு, பண்பு, பாசம், அரவணைப்பு என்று அத்தனையும் நம் உள்ளத்திலே கொட்டிக் கிடக்கு! அதை நிறைய பேர் பயன்படுத் தாமல்... எல்லாவற்றையும் மனசாட்சியிடம் அடகு வைத்து விட்டு... கருணையே இல்லாதவர்களாய்... எதற்கும் பயன்படாத உவர் கடல் நீராய் வாழ்ந்துக் கொண் டிருக்கிறார்கள்...! மானிடராய் பிறத்தலரிது! தெரி யுமா?...

''உங்களைப் போன்று இருப்பவர்கள்... நாம் செய்வது பாவம், துரோகம், தீங்கு, தவறு என்று அறியும் போது திருந்துவார்கள்! ஆனால், அதற்குள் ஆயுள் குறைந்து மரணம் நெருங்கிவிடும்! காலத்தே பயிர் செய்யாத யோசனையால் என்ன பயன் விவசாயிக்கு? அது போலத் தான் உங்களுக்கு ஞானம் வரும்போது... அது மக்கள் சமுதாயத்துக்கு பயன்படாமல் போகலாம்!''



இவ்வளவு தெளிவாய், இனிமையாய் பேசிய தீபி காவை எதிர்த்துப் பேச மனம் வரவில்லை! ஆனால் எங்கே தன்னை அவளின் அடிமையாய் எடுத்துக் கொள்வாளோ என்று...

''போதும்... உன் லெக்சரை நிறுத்து! போ வெளியே!'' கத்தினான்.

''பட்டினி கிடக்க வேண்டாம்! என்கிட்ட இதுபோல அடிக்கடி கத்தி கலாட்டா பண்ண எனர்ஜி வேணு மில்லையா? அதுக்காகவாவது வந்து சாப்பிடுங்க! சரியா?''

தீபிகா கன்னத்தில் குழிவிழ சிரிக்க... அந்த கன் னக்குழியை ஆசையாசையாய் பார்த்துக் கொண்டிருந் தான்.

இருவரும் வீடு திரும்பினர்.

''தயாவுக்கு நான் அங்கே வந்தது பிடிக்கலே போல!''

''அந்த அளவு தயாகர் மட்டமான மனிதரில்லே! படிச்சிட்டு இருந்தார்!''

சத்யனிடம் தயாகரை தரம் தாழ்த்த தீபிகாவிற்கு மனம் வரவில்லை! அவன் தாய் ஊட்டிய பாசமும், அன்பும் அவ்வாறு பொய் சொல்லச் சொன்னது!

''என்ன சமைக்கப் போறே, தீபிகா? சாதம், சாம்பார்ன்னு சாப்பிட்டு நாக்கே செத்துப் போச்சி! சிக்கன், மட்டன்னு ஒரு நாளைக்கு செய்து தரக்கூடாதா?''

''அசைவம் சாப்பிடுவீங்களா?''

''ம்...! ரொம்ப விரும்பி!''

''ஆனால், நான் சாப்பிடறதில்லே! அதுவும் நம்மைப் போல உயிர்! ஒரு உயிரை இன்னொரு உயிர் கொன்று சாப்பிடுவது பாவமில்லையா?''

"என்ன தீபிகா நீ? சிங்கம், புலி, சிறுத்தை எல்லாம் உணவுக்காக மிருகங்களை வேட்டையாடி சாப்பிடறதில் லையா? இந்த அடிப்படை அறிவு கூட இல்லாதவளா நீ?" சத்யன் கொஞ்சம் அதட்டலாய் கேட்க...

"அது ஐந்தறிவு படைச்ச ஜீவன்! ஆறாவது அறிவான பகுத்தறிவு இல்லாத மிருகங்களும், நீங்களும் ஒண்ணா, சத்யன்? மனுஷங்க சத்யன், நாம்ம! எது நல்லது? எது கெட்டது? எது பாவம்? எது புண்ணியம்? எது தர்மம்? எது அதர்மம்?ன்னு நமக்கு பிரிச்சிப் பார்க்க தெரியுமில் லையா? பாவச் செயலை செய்யலாமா?"

"நடைபாதையில் புழு, பூச்சி உள்ளிட்ட ஜீவராசிகளை மிதித்து கொல்ல வேண்டி வரும் என்று சமண மதத்தவர் கள் மயிலிறகு கொண்டு பாதையைச் சுத்தப்படுத்திக் கொண்டு நடப்பார்கள்ாம்!....

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்..." என்று சாதாரண தாவரத்தின் மீது கூட வள்ளலார் வைத்த அன்பு எத்தகைய போற்றுதலுக்குரியது!...

"கொலை கூடாது! களவு கூடாது! ஒழுக்கமின்மைக் கூடாது! பொய் கூடாது! மது கூடாது! புத்த பெருமானின் இந்த ஐந்து போதனைகளை படித்ததில்லையா? புத்தர் முதல் போதனையாய் கொலை கூடாது என்றுதானே சொல்கிறார்!

"நாமெல்லோரும் இவர்களின் வழித்தோன்றல்கள்தானே? அவர்களின் கொள்கையை கடைபிடித்து வாழக்கூடாதா?"

"கடைபிடிக்கலாம்! ஆனால், விலங்கினங்களை மக்கள் உணவுக்காக பயன்படுத்தாமல் போனால்... உல கில் விலங்கினங்களின் உற்பத்திப் பெருகி... கஷ்டமாகி விடாதா?"



"ஏன் உற்பத்தி அதிகமாகும்? யானையை அடிச்சித்திங்க புலி, சிங்கம்! மானை, ஆட்டையடிக்க, சிறுத்தை! எலியைக் கொல்ல பூனை! கீரியை, தவளையைக் கொல்ல பாம்பு! சின்ன மீனை பெரிய மீன்! பெரிய மீனை திமிங்கலம்! இப்படி பகுத்தறிவு இல்லாத ஜீவன்கள், தங்கள் இனத் தையே உணவாய் உட்கொண்டு உயிர் சக்தியை கட்டுப் பாட்டுக்குள் வைத்துக் கொள்ளாதா...?"

"விலங்குகளை நுகர்வோரில் இருந்து மனித இனம் மட்டும் விலகிக் கொள்ளக் கூடாதா, சத்யன்?"

"புத்தன், காந்தி, மகாவீரர், வள்ளலார், அரவிந்தர் இவர்களின் கொள்கையை நாமும் கடைபிடிப்போமே! ம்?"

கொஞ்சம் ஆவேசமாய் தீபிகா கேட்க...

"தீபிகா சத்தியமா இனி ஒருபோதும் அசைவத்தை தொடமாட்டேன்! நம்பாமல் பார்க்கிறாயே, தீபிம்மா! உன் மேல் சத்தியமா!"

அவள் தலைத் தொட்டு சத்தியம் செய்ய... தீபிகா நெகிழ்ந்துப் போனாள்.

இந்த நெகிழ்ச்சியால் பின்னாடி வரப் போகும் விபரீதம் உணராமல்!

## 11



**கை**யில் இருக்கும் பொருளின் அருமை தெரியாமல், எட்டி உதைத்து தெருவில் வீசுவதும்... அந்தப் பொருளை

ஒருவன் ஆசையாய், பிரியமாய் எடுத்துப் போய் தன் வீட்டில் வைத்து, பூஜித்து மகிழும்போது... அந்தப் பொருளின் மதிப்பு தெரிந்து, ஆத்திரப்பட்டு... எடுத்துப் போய் பூஜிப்பவனிடம் 'என் பொருள் கொடுடா!' என்று சண்டைக்குப் போவதும் மனிதனின் இயல்பு!

அதைத்தான் தயாகர் செய்துக் கொண்டிருந்தான்.

தீபிகாவின் மதிப்பு, அருமை, பெருமை தெரியாமல் இழிவாய் நடத்திய தயாகருக்கு... அவளை ஒருவன், அதிலும் பெரிய பணக்காரன் தலையில் தூக்கி வைத்து கொண்டாடும் போது ஆத்திர ஆத்திரமாய் வந்தது.

தீபிகாவின் மேல் தயாகருக்கு ஒருநாளும் ஆசை வந்ததில்லை!

அவளின் அழகை வேலைக்காரிதானே என்று கண் ணுற்று நோக்காதவன்... இன்று கண்ணுறும் போது, அந்த பேரழகு அவனை அடித்து வீழ்த்தியது!

சத்யனும், தீபிகாவும் இணைந்து செல்லும் போது பார்த்துவிட்டால், எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றியது போல, அவனுள் கோபத்தீ கொழுந்து விட்டு எரியும்!

அவன் உடம்பு ஓரளவு குணமானதும்... அவனை அழைத்துக் கொண்டு ஒருநாள் பெரியார் நீர்வீழ்ச்சி,

அடுத்த நாள் மேகம் நீர்வீழ்ச்சி,

பழத்தோட்டம், மூலிகைத் தோட்டம்,

மலையடிவாரத்தில் உள்ள கோமுகி டேம், சக்தி வாய்ந்த தாவடியம்மன் கோவில் என்று ஒவ்வொரு இடமாய் கூட்டிப் போய் காட்ட...

அந்தச் செய்தி யார் மூலமாவது தயாகரின் காதில் விழ கொதித்துக் கொண்டிருந்தான்.



சமய சந்தர்ப்பம் கிடைத்தால் அவன் கழுத்தை, நெரித்து கொலை செய்துவிடும் அளவு தீராத வெஞ்சத் தோடு சுற்றிக் கொண்டிருந்தான், தயாகரன்!

தீபிகாவின் மனதில் உள்ள காதலை... அவளின் முகம் தூரிகை எடுக்காமலே ஓவியமாய், தினம் தினம் சத்ய னுக்கு வரைந்துக் காட்ட... அவள் மேலான காதல் அவ னிதயத்தில் எவரெஸ்ட் சிகரமாய் உயர்ந்து கொண்டேப் போனது!

உள்ளத்தைக் காட்டும் கண்ணாடியாய் அவன் முகமும் காதலை படம் பிடித்துக் காட்ட.... தீபிகாவும் எக்கச்சக்க ஆசையை வளர்த்துக் கொண்டாள்.

சிலசமயம் அவன் தன்னுடைய சொத்து மதிப்பு, தொழில் பெருமையை எல்லாம் பேசும் போது 'இத்தனை வசதியுள்ளவன் என்னைக் காதலிப்பானா? அவன் நெஞ்சில் என்ன உள்ளது என்று அறிந்துக் கொள்ளாமல், கேட்டுத் தெரிந்துக் கொள்ளாமல் அவன் மேல் அதீத நேசம் கொள்வது தவறல்லவா!' என்று மருகி உள்ளுக் குள்ளே மாண்டுப் போவாள்.

கத்தியின்றி, இரத்தமின்றி... காதல் தன் யுத்தத்தை அவள் உள்ளமென்ற போர்க்களத்தில் நடத்திக் கொண டிருந்தது.

மாலை தென்றல் குறும்பு கூத்தாட தீபிகா, சத்யனின் முன்னுச்சி முடியை செல்லமாய் கலைத்துச் சென்றது.

வீட்டின் பின்புறத்தில் சலசலத்து ஓடும் நீரோடை அருகே இருந்த பெரிய மரத்தின் வேர்ப்பகுதியில் அமர்ந் திருந்தனர். இயற்கை எழில் கொஞ்சும் காட்சியில், தன்னை மறந்து, இதயத்தைப் பறி கொடுத்து கண்ணுக் குள் நிரப்பிக் கொண்டிருந்தான், சத்யன்!

அவனை விழுங்கி விடுவது போல் பார்வையால் ஸ்பரிசித்துக் கொண்டிருந்தாள், தீபிகா!

தீபிகா... தன்னிடம் உள்ள அழகு, அறிவு, வேலையை மூலதனமாக வைத்து... யாராவது பணக்கார வாலிபன் கிடைத்தால் வளைத்துப் போடலாம் என்று ஒருபோதும் நினைத்ததில்லை! சிறு கனவு கூடக் கண்டதுமில்லை!

ஏன் இதுவரை கல்யாணம், கணவன், குழந்தை, குடும்பம் என்று சிறு கற்பனையாய் கூட நினைத்துப் பார்த்ததில்லை!

முதன் முதலாய் காதலிக்க ஆசை வந்தது, சத்யனைக் கண்ட பின்புதான்!

முதன் முதலாய் அவளின் திடமான மனதை அசைத் துப் பார்த்திருக்கும் பெருமைக்குரிய ஆண்மகன் சத்யன் மட்டுமே!

சத்யனை மணந்து... அவனின் அச்சு அசலில், சாய லில் நிறைய குழந்தைகளைப் பெற்று, தாலாட்டி, சீராட்டினால் எவ்வளவு இனிமையாய் இருக்கும் என்ற எண்ணம் வந்து தினம் தினம் அவளை அலைக்கழித்தது!

சத்யன், என் மனதில் எப்படி நுழைந்தான்?

எப்போது நுழைந்தான்?

என் மனம் அவன் வசமாய் எதனால் சென்றது?

என்னை இப்படி காதலில் விழ வைக்க காரணமாய் இருந்தது எது? என்ன காரணமாய் சத்யனுள் விழுந்து விட்டேன்!

'இந்த அழகு முகம் செய்த சலனமா?'

'இந்த கம்பீரமான தோற்றம் கொடுத்த பரவசமா?'

'இவனின் இனிமையான பேச்சு தந்த சுகமா?'



'இவனின் மயிலிறகு போன்ற மென்மையான அணுகு முறையா?'

'எது என்னைக் கவர்ந்து, என்னை அவன் உயிரில் விழ வைத்து விட்டது?'

''தீபிகா... என் முகத்துல அப்படி தீவிரமா என்ன படிக்கறே? ம்?''

சத்யன் கேட்க... சட்டென்று இயல்புக்கு வரமுடியாமல் தவித்தாள். கொஞ்ச நேர அவகாசத்திற்கு பின்னர்...

''சத்யன்... உங்க உடம்பு பூரண குணமாயிடிச்சி! இதுக்கு மேலே என்ன செய்யப் போறீங்க?''

''டாக்டரம்மாதான் ஒரு வேலையை தேடிக் கொடுக் கணும்!'' என்று முகம் மலர...

''நீங்க இப்படி பேசறது கொஞ்சம் கூட நல்லாயில்லே! ஏதோ பெரியவர்கள் உங்களுக்கு நல்லது செய்யறதா நினைச்சிட்டு... தீவிரமா கல்யாணம் செய்து வைக்கற செயல்ல ஈடுபட்டுட்டாங்க! அந்தச் செயல் பொய் யாகும்ன்னு அவங்களுக்கு தெரியுமா? நினைச்சிப் பாருங்க, சத்யன்! தன்னுடைய செல்ல மகனின் திரு மணம் நின்னுப் போனால் அவங்களுக்கு மகிழ்ச்சியா இருக்குமா?...

''ரெண்டு நாள் ரெயில் பயணத்தில் வர நட்பில்லே! தூக்கி தூரேப் போட்டுட்டு நம் வேலையைப் பார்க்க! உங்களுக்கு உயிர் கொடுத்த பெற்றோர்கள்! தவிச்சிட்டு இருப்பாங்க! தெரியுமா?''

''தவிக்கட்டும்!'' கண்கள் சிவக்கச் சொன்னான்.

''அவ்வளவு கொடூர மனம் படைச்சவர் இல்லே, நீங்க!''

''என்னை மாற்றிய பெருமை அவர்களையே சாரும்!'' கிண்டலாய் சொல்ல...

''கோபத்துல நீ என் மகனில்லே! நீ யாரோ! போடா வெளியே! என்று பெற்றவர்கள் சொல்றது சகஜம்தான்! அதுக்காக அவங்களைப் பிரிஞ்சி வந்து, இவ்வளவு பெரிய தண்டனையைக் கொடுக்கணுமா?''

''தொழில் எல்லாத்தையும் என் தலையில் இழுத்துப் போட்டுட்டு நடத்தினேன், தீபிகா! அண்ணாவும், அப்பாவும் கெஸ்ட் மாதிரி வந்து பார்த்துட்டுப் போவாங்க! வெளிநாடு, வெளியூர்ன்னு பிசினஸ் சம்மந்தமா... காலில் சக்கரம் கட்டாத குறையாய்... அலைந்து, திரிந்து... இந்த குறைந்த ஆண்டுகளில் பின்னுக்கு இருந்த பிசினஸ்ஸை முன்னுக்கு கொண்டு வந்து இருக்கேன்!...

''எத்தனை கஷ்டம், எத்தனை அலைச்சல்! எத்தனை தியாகங்கள்! எல்லாமே பாலைவனத்துக்கு பாய்ச்சின தண்ணீராயிடிச்சே! ஒரு நிமிஷத்திலே என்னை தூக்கி எறிஞ்சிட்டாளே, என் அம்மா!...

''என்னுடைய ஆசை, விருப்பம், கொள்கை, கோட்பாடு எல்லாத்தையும் தீயிட்டு கொளுத்தினது இல்லாமல்... கல்யாணம் வேணாம்ன்னு மாலையை பிய்ச்சி எறிஞ் சிட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு போனவள்... போலீஸ் அங்கிள் சொன்னார் என்று கழுத்தை நீட்ட வருபவளை எப்படி ஏத்துக்கிறது? ஏற்கனவே அவள் மேல் ஏகப்பட்ட வெறுப்பு! மனதை சமாதானப்படுத்தி அவள்ள ஏத்துக் குற மனப்பக்குவத்தை மெல்ல கொண்டு வந்தப்போ... அப்படி அவள் செய்ததும், முதலில் அவமானமா இருந்தது. பிறகு நல்ல சந்தர்ப்பம்ன்னு சந்தோசப்பட் டப்போ 'இவ கழுத்துல கட்டுடா தாலியை'ன்னு



சுத்தினால் எப்படி இருக்கும்? மறுத்தேன்! அதுக்காக என் இளையமகன் செத்துட்டான்! அது இதுன்னு...''

''ஐய்யோ சத்யன்!'' தீபிகா காதைப் பொத்திக் கொண்டாள்.

''ஊட்டி, கொடைக்கானல்ல எல்லாம் தேயிலை, காபி தோட்டங்களும், அரண்மனை மாதிரி பங்களாக்களும், சேலம், திருச்சி, மும்பை, புனே, கொல்கட்டான்னு முக்கிய நகரங்களில் பிசினஸ் கிளைகள் இருக்கு. அங்கே எல்லாம் போனால் தெரிஞ்சிடும் என்று இந்த கல்வராயன் மலையை தேர்ந்தெடுத்தேன்! வந்து இறங்கின உடனே... உங்க ஊர் ஆக்ஸிடெண்டை பரிசாய் கொடுத்துடிச்சி!''

''சத்யன்...'' வருத்தத்துடன் அழைத்தாள்.

''ஒரு கெட்டதிலும் நல்லதாய் உன் நட்பு கிடைச்சது! இப்படி ஒரு அபூர்வ பெண்ணைப் பார்க்கத்தான் என் வாழ்க்கையில புயலடிச்சதா? பூகம்பம் வந்ததா? பெரும் புயலிலும், பூகம்பத்திலும் சிக்கி, சின்னாபின்னமாகி ரணப்பட்டாலும்... உன் அன்பென்ற, நட்பென்ற மருந்து கிடைத்ததில் எனக்கு பெரும் மகிழ்ச்சியே, தீபிகா!'' உருகலோடு சத்யன் கூற... அகமகிழ்ந்துப் போனாள், தீபிகா!

''ஆக்ஸிடெண்ட்ல எனக்கு கை, கால் முறிஞ்சி, பலமா அடிபட்டிருந்தா... இப்படி துரத்தமாட்டே இல்ல?'' புன்னகையோடு கூற...

''என்ன சத்யன் நீங்க?'' சட்டென்று கோபம் கொண்டாள்.

அந்தக் கோபம் சத்யனுக்குப் பிடித்திருந்தது.

சத்யன்... இதய நரம்பில் அவள் மேலான காதலை, நேசத்தை, அன்பை, ஆசையை, பாசத்தை முத்துக்களாய்

கோர்த்து... அவளுடைய சங்கு கழுத்தில் சூட்டக் காத்திருந்தான்.

தீபிகா சூடிக் கொள்வாளா?

அல்லது சூறாவளியாய் சுழன்று வீசுவாளா?

## 12



தீபிகா இல்லாமல் சத்யன் தனியே எப்போது மாட்டு வான் என்று எதிர்பார்த்துக் காத்திருக்க, அந்த சந்தர்ப்பம் விரைவிலேயே கிடைக்க, தயாகர் மகிழ்ந்துப் போனான்.

தயாகரன் ஆஸ்பத்திரியிலிருந்து மாலை வீடு திரும்பும் போது... சத்யன் தனியாக நடைப்பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான்.

தயாகரன் ஜீப்பை ஓரமாய் நிறுத்தி விட்டு, சத்யன் அருகில் போனான்.

''சத்யன்... உங்ககிட்ட நான் கொஞ்சம் பேசணும்!''

''என்கிட்ட பேச என்ன விஷயமிருக்கு?'' சத்யன் கோபமாய் கேட்க...

''சத்யன்... நான் உங்க மேலான வெறுப்பை ஒதுக்கி வச்சிட்டு... பொறுமையோடு, அன்பாய் பேச வந்திருக்கேன்!''

''அன்புக்கும், பொறுமைக்கும் உங்களுக்கு அர்த்தம் தெரியுமா, தயா?''

''சத்யன் ப்ளீஸ் பீ சீரியஸ்! நீங்க சென்னை தானே? உங்க இடத்துக்கு திரும்பற வழியைப் பாருங்க!'' அழுத்தம் திருத்தமாய் தயாகரன் கூற...



''என்னைப் போகச் சொல்ல, என்ன ரைட்ஸ் இருக்கு?''

''இது என் இடம்! என் ஊர்! எனக்கு பிடிக்காதவர்கள் இங்கே இருக்கக் கூடாது!''

''என்னைப் பிடிக்காமல் போக என்ன காரணம்?''

''நீங்க தீபிகாவோட பழகறது எனக்குப் பிடிக்கலை!''

''நான் தீபிகாவோட பழகினால் உங்களுக்கென்ன?''

சட்டென்று தயாகரன் அந்த நேரம், அந்தப் பொய்யைச் சொன்னான்.

''தீபிகா... என் உரிமை! என் உடமை! வருங்கால என் மனைவி!''

பெரிய பாறை ஒன்று தலையில் விழுந்தக் கணக்காய் துடிதுடித்துப் போய் விட்டான்.

''பொய் சொல்லாதீங்க! அப்படி ஒரு செய்தி இருந் திருந்தால் இதுநாள் வரை தீபிகா என்கிட்ட சொல்லாமல் இருக்கமாட்டா!''

''அவள் என் வீட்டில், என் கண்முன்னாடி வளர்ந்தவள்! சின்ன வயசுல இருந்தே அப்பாம்மாவுக்கு இப்படி ஒரு ஆசை இருக்கு! அவளுக்கு இந்த செய்தி தெரியும்!'' கூசாமல் பொய் சொன்னான்.

''நோ... நான் இதை நம்பமாட்டேன்!'' கத்தினான். இருதயம் சுருதி தப்பி வேகவேகமாய் அடித்துக் கொண்டது.

''நீங்க நம்பணும்ன்னு அவசியமில்லே! என் வழியில் குறுக்கிடாமல், தூரே விலகிட்டால் போதும்!''

''நான் அவளை உயிருக்குயிராய் நேசிக்கிறேன்!''

''கைக்கிளை காதலால் என்ன பயன்?'' ரௌத்திரமாய் சொன்னான்.

''அவளும் என்னைக் காதலிக்கிறாள், அவள் முகம், பார்வை அந்தச் செய்தியை எனக்கு சொல்லுது!''

''உங்களுக்கு கற்பனா சக்தி அதிகம், மிஸ்டர் சத்யன்! அவள் உங்களுக்கு ஆக்ஸிடெண்ட் ஆகி... யாருமில்லாமல் தவிக்கறீங்களேன்னு இரக்கம் காட்டி, அடைக்கலம் கொடுத்திருக்கா! அதுக்காக இதயத்தில் இடம் கொடுத்துட்டதா தப்பான அர்த்தம் எடுத்துக்கக் கூடாது! கருணையை காதல்ன்னு அர்த்தம் புரிஞ்சிட்டீங்க! கருணைக்கும், காதலுக்கும் வித்தியாசம் தெரியாதவரா, நீங்க?....''

''கிட்டத்தட்ட ஒரு மாசத்துக்கும் மேலா தங்கி இருக்கீங்க! உங்க மேல நேசமானால், காதலானால் இந்நேரம் தீபிகா வெளிப்படுத்தியிருப்பா, இல்ல? என்றாவது வாயைத் திறந்து சொன்னாளா?

"சொல்லல, இல்லையா? காதலை தன்னுள்ளே போட்டு புதைக்கவோ, மறைக்கவோ முடியாது! அவள் சொல்றாளான்னு காத்திருந்துப் பாருங்க! நிச்சயமா சொல்ல மாட்டாள்! காதலிக்கிறது ஒருத்தனையும், கல்யாணம் பண்ணிக்கப் போறது இன்னொருத்தனையும்ன்னு பண்பாடு தெரியாத மேல்நாட்டு பொண்ணில்லே, எங்க தீபிகா! அவள் பண்பாடு, பாரம்பரியம், நல்ல பழக்க வழக்கம், கலாச்சாரம் மிக்க தமிழ் பொண்ணு!...''

''நீங்க அவளைக் காதலியுங்க! ஆனால், அதை நான் தடுக்கப் போறதில்லே! உங்க காதலை அவள்கிட்ட சொல்லாமல் இருங்க! அவள் சொல்றாளான்னு பாருங்க! அப்படி அவள் சொல்லிட்டால்... நான் தோற்றவன்! அப்புறமா தீபிகாவை உங்களுக்கு விட்டுத்தறேன்! தாராளமா மேரேஜ் பண்ணி சந்தோசமா வாழுங்க! என்ன இந்த போட்டிக்கு சத்யன் ரெடியா?'' தயாகர் பரிகாசமாய் கேட்க...



கொஞ்ச நேரம் யோசித்தவன்... சட்டென்று சொன்னான்.

''சம்மதம், தயா! நிச்சயமா நான் சொல்லமாட்டேன்! ஆனால் கூடிய சீக்கிரமே தீபிகா என்கிட்ட ஐ லவ் யூ! சொல்லுவா! இது நிச்சயம் நடக்கும்!''

''பார்க்கலாம், சத்யன்! சத்தியத்தை மீறி அவள்கிட்ட உங்க வாயைத் திறந்து காதலை சொல்ல மாட்டீங்கன்னு நம்பறேன்!''

''சொல்ல மாட்டேன்! என் காதல் உண்மையானால், என் நேசமே எனக்கு தீபிகாவை கொண்டு வந்து என் கையில் கொடுக்கும்!''

''அதையும் பார்க்கலாம்! வரேன்!'' அவன் புறப்பட்டான்.

தயாகரன் விரித்த வலையில் ஏன் விழுந்தோம் என்றும்... சூழ்ச்சியில், சுழலில் ஏன் சிக்கினோம் என்றும் பின்னாளில் வருந்தப்போவது தெரியாமல் சத்யன் நம்பிக் கையோடு வீறுநடைப் போட்டான்.

அவன் தன் மேலான காதலை சொல்லுவான் என்று அவளும்...

அவள் தன் மேலான நேசத்தை, ப்ரியத்தை சொல்லுவாள் என்று அவனும்...

இருவரும் மௌனத்தை துணைக்கழைத்துக் கொண்டு நாட்களை கடத்தினர்.

மௌனம் சுகம்தான்!

மௌனம் இன்பம்தான்!

மௌனம் சிலிர்ப்புதான்!

காதலில் மௌனம் கூடாதல்லவா...?

அதிகப்படியான மௌனம் கூட மெல்ல கொல்லும் விஷம்! அந்த விஷம் நாளடைவில் இதயத்தின் சுவர்களை அரித்து அரித்து... கரைத்து கரைத்து...

சத்யனும், தீபிகாவும் நொந்துப் போனார்கள்.

சத்யன் தன் மனதில் காதலுக்காக பெரிய கற்கோட்டையை கட்டியிருந்தான். ஆனால் அது மண்கோட்டையாய், மணல் சிற்பமாய் சரியப் போகிறது எனத் தெரியாமல்!



# 13

வானம் நீலத் திரையை விரித்திருக்க... நிலவு நங்கை நாட்டியத் தாரகையாய் மாறி நடனமாட... நட்சத்திர இளைஞர்கள் நின்ற இடத்திலேயே நகராமல்... வாய் பிளந்து, கண்சிமிட்டி நடனத்தை ரசித்துக் கொண்டிருந்த... ரம்மியமான இரவுப் பொழுது!

சத்யன் தூக்கம் வராமல் புரண்டான்.

தீபிகா... தன் மனம் திறந்து, இதயம் திறந்து காதலை சொல்லுவாள் என்று எதிர்பார்க்கப் பார்க்க ஏமாற்றம் தான் மிஞ்சியது.

பொறுப்போடு ஐ.ஏ.எஸ். பரிட்சைக்கு படித்தாள்.

சத்யனை அன்பாய் நடத்தினாள். ஆசையாய், அரவணைப்பாய் கவனித்துக் கொண்டாள்.

சத்யனுக்குத்தான் உடம்பு நன்றாகி அவள் வீட்டில் உட்கார்ந்திருப்பது முள்மேல் இருப்பது போல் தோன்றியது.

அவனுடைய தகுதி, படிப்புக்கு தகுந்த வேலையும் கிடைத்தப்பாடில்லை!

தீபிகாவின் மனம் திறக்க வேண்டுமென்றால், அது பிரிவு ஒன்றால்தான் முடியும்! பிரியும்போது தானே நேசம் பொங்கி எழும்! பிரிவில்தானே பிணைப்பு வலுப்படும்!



குழந்தைக்கு தாயின் மேலுள்ள மிதமிஞ்சிய அன்பை தெரிந்து கொள்ள வேண்டுமென்றால்... அதனை விட்டு தாய் நாள் முழுக்க பிரிந்திருக்க வேண்டும்! மாலையில் தாயைக் கண்ணுறும் குழந்தை அவளை அட்டையாய் ஒட்டிக் கொண்டு விடவே விடாது! அழுது ஆர்ப்பாட்டம் செய்து தன்னுடைய அன்பை வெளிப்படுத்தும்!

அதுபோல தீபிகாவுக்கு என்மேல் அன்பு இருப்பதைத் தெரிந்துக் கொள்ள சின்ன பிரிவு வேண்டும்!

தீபிகாவின் ஆசை அவன் தாய், தந்தையோடு மீண்டும் இணைவதுதான்! தினம் தினம் புத்தி புகட்டியிருக்கிறாள்.

அவன் சென்னை செல்வது எனத் தீர்மானமாய் முடிவெடுத்தான்!

அதன் பிறகு உறக்கம் வந்து தாலாட்ட எளிதாய் தூங்கிப் போனான்.

மறுநாளே அந்த செய்தி இடியாய் ஒவ்வொரு நாளிதழிலும், டி.வி.யிலும் வந்தது.

சத்யனின் படம் போட்டு... மன்னிப்பு கேட்டு... தாய்க்கு உடல்நிலை சரியில்லாமல் அப்பல்லோவில் சேர்த்திருப்பதாகவும், உடனே வரும்படியும் அப்பா கீர்த்திவாசன் விளம்பரப்படுத்தியிருந்தார்.

''சத்யன்... நீங்க முதல்ல கிளம்புங்க! உங்க வீம்பையெல்லாம் விட்டுட்டு... உங்க தாயைப் பாருங்க! அவங்க குணமானதும்... உங்க தொழிலை கவனியுங்க!'' என்று கட்டாயமாய் கூறினாள்.

''தீபிகா... என்னை மறுந்துடமாட்டீயே?'' தவிப்போடு கேட்டான்.

''மறக்கக்கூடிய நபரா? என்ன சத்யன், நீங்க? வார்த்தைக்கு கூட உங்களை மறந்துடுவேன்னு சொல்லாதீங்க!''

இப்போதாவது அவள் மனம் திறந்து சொல்லுவாளா என்று சத்யன் அவளை நோக்கிக் கொண்டிருக்க...

'நான் உன்னை நேசிக்கிறேன்! எனக்காக காத்திரு! விரைவிலேயே வந்து உன்னை மணந்து கொள்கிறேன்!' என்று வாய்திறந்து சொல்லுவான் என்று ஆவலோடு தீபிகாவும் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்க...

இருவரிடையே நீண்ட, பெரிய மௌனம் என்ற பாழாய்ப் போனத் திரை, அவர்களை சேரவிடாமல் பிரித்து, வேடிக்கைப் பார்த்தது.

மீனாட்சி சத்யனைக் கண்டதும்... நோயிலிருந்து விடுபட்டு விட்டாள்.

சத்யன் மீண்டும் கம்பெனிகளுக்கு சென்றான்.

தீபிகாவின் நினைவுகளோடு கரம் கோர்த்து சென்னையில் சுற்றிக் கொண்டிருந்தான், சத்யன்!

சத்யனையே சுவாசமாய் கொண்டிருந்தாள், தீபிகா!

பரீட்சைக்கு படிக்கும் நேரம், வேலை நேரம் போக, மீதி நேரமெல்லாம் அவளின் இதயத்தை, எண்ணத்தை ஆக்ரமித்து அரசாட்சி செய்துக் கொண்டிருந்தான், சத்யன்!

சத்யனிடமிருந்து அன்று போன் வர...

''ஹலோ தீபிகா... நான் சத்யன்!''

''சத்யன்... எப்படி இருக்கீங்க? உடம்பு பரவாயில்லையா? அம்மா எப்படி இருக்காங்க? தேறிட்டாங்களா? நீங்க ஆபீஸ் போறீங்களா? இல்ல இன்னும் வீட்டுலதான் இருக்கீங்களா?''

''தீபிகாம்மா... மூச்சு வாங்கிக்கோம்மா! ஒரே சமயத்துல இவ்வளவு கேள்வியும் கேட்டால் அதையெல்லாம் ஞாபகத்துல வச்சுட்டு எப்படி பதில் சொல்வேன்? ஒவ்வொரு கேள்வியாய் கேட்கக் கூடாதா?'' என்று கம்பீரமான புன்னகையோடு கேட்க...

''ஸாரிங்க, சத்யன்! ஆன்ட்டி தேறிட்டாங்களா?''



''ம்...!''

''அடுத்ததா உங்க உடம்போட ஹெல்த் கண்டிசன் தெரியணும்!''

'என் மனசோட நிலையைப் பற்றி தெரிய வேண்டாமா, தீபிகா?' கேட்க நினைத்து மௌனமாய் இருந்தான்.

''சத்யன்... எனக்கு கொஞ்சம் பயமா இருக்கு! தலையை எம்.ஆர்.ஐ. ஸ்கேன் பண்ணிப் பார்த்தீங்களா?''

''இன்னும் இல்லே! உன் திருப்திக்காய் செய்துடலாம், தீபிகா! நான் ஆபீஸ் போறேன்! மீண்டும் லட்சம், கோடிகளைப் பார்த்து போரடிக்குது தெரியுமா?''

''ஓ....''

''என்ன ஓ...? எனக்கு இந்த நகர வாழ்க்கை நரகமா இருக்கு, தீபிகா! மலை வாழ்க்கை ரொம்ப பிடிச்சிருந்தது! ஒரு தேவதையின் கண்காணிப்பில் நோயில் இருந்தது கூட சொர்க்கம் தான்! ஆக்ஸிடெண்ட் பலமா ஆகி, குணமாகாமலேயே அங்கே நான் இருந்திருக்கக் கூடாதான்னு ஏங்கறேன்!''

''ஐய்யோ சத்யன்...! அபத்தமா பேசாதீங்க!'' சீறலோடு கோபமாய் அவள் குரல் ஒலித்தது.

அவன் அவ்வாறு கூறியது ரணமாய் நெஞ்சில் வலித்தது.

''சத்யன்... வெள்ளிமலையில கோடைவிழா வருது! வரீங்களா? எனக்கும் உங்களைப் பார்க்கணும்போல இருக்கு!'' தவிப்போடு அவள் குரல் கேட்க...

''கண்டிப்பா வரேன், தீபிகா!''

அவன் அந்த நாளுக்காக ஏங்கிக் கொண்டிருந்தான்.

அந்த நாளும் வர ஆசையோடு, ஆவலோடு வெள்ளிமலைக்கு சென்றான்!

சத்யனுக்கு மிஞ்சியது, ஏமாற்றமே!

# 14



தீபிகாவிடமிருந்து சத்யனுக்கு போன் வந்தது.

''தீபிகா... நல்லாயிருக்கீயா? பாரதி மேடத்தை நான் கேட்டதா சொல்? உன் ஐ.ஏ.எஸ். கோச்சிங் எப்படி இருக்கு?''

''பைன்! இன்னும் பத்து நாளில் பரீட்சை தெரியுமா?''

''அப்படியா?''

''லீவு போட்டுட்டு படிக்கறேன்! லாஸ்ட் பைவ் டேய்ஸ் கோச்சிங் சென்டருக்கு தினம் போகணும்! அதனால் புதுச்சேரியிலேயே தங்கிடப் போறேன்!''

''சென்னை சென்டர் போட்டிருக்கக் கூடாதா?''

''எங்களுக்கு புதுச்சேரிதானே பக்கம்! வாராவாரம் கோச்சிங் சென்டர் போறேன்! பழகின இடம்!''

''நான் இதை யோசிக்கலே!''

''அதுவும் இல்லாமல் சமீபமாத்தானே, புதுசா சென்னை ப்ரண்ட் கிடைச்சிருக்கீங்க?''

''எந்த இடம்? என்ன தேதி?''

அவள் சொன்னாள்.

''ஆல் த பெஸ்ட்! சொல்லமாட்டீங்களா, சத்யன்?'' பிரியத்தோடு கேட்க...

''ஆமா சொல்லல இல்ல? ஸாரி தீபிகா! முக்கியமான மீட்டிங்ல இருக்கேன்! அப்புறமா பேசவா?''



''சரி!'' ஏமாற்றத்துடன் செல்லை ஆப் செய்தாள்.

''ஆல் த பெஸ்ட்!' சொல்லாத நீங்க எங்க 'ஐ லவ் யூ!' சொல்லப் போறீங்க! நான் உங்களுக்கு முக்கியமானவள் இல்லைதானா? அப்போ மாய்ந்து மாய்ந்து, மருகிக் கொண்டிருப்பதெல்லாம்... இந்த மடச்சி தீபிகா மட்டும் தானா?'

'தேவையில்லாமல் என் மனதில் காதல் விதையை ஊன்றிவிட்டேனா? என் காதல் விதைக்கு... கடைசியில் கண்ணீர் தான் உயிர்நீரா?'

'உங்களை சிற்பமாய் என் நெஞ்சுக்குள் செதுக்கி பூஜிப்பது... நான் மட்டும்தானா?'

'நான் உங்கள் நெஞ்சில் இல்லையா? கருத்தில் இல்லையா? கவனத்தில் இல்லையா?'

'உங்களின் ஆழமான பார்வையில்தானே... நான் என்னை இழந்தேன்!'

'நான் பைத்தியம், சத்யன்! படித்த, அறிவுள்ள பைத்தியம்! நீங்கள் மலை! நான் மடு! மலைக்கும் மடுவுக்கும் ஒத்து வருமா? பொருந்துமா? என்ற வித்தியாசம் தெரியாமல், இனம் பிரித்துப் பார்க்காமல், உங்களை நினைத்தது தப்பு! உங்கள் மேல் நேசம் கொண்டது, அறிவீனம்! உங்கள் மேல் அன்பு கொண்டது, ஆசை கொண்டது, காதல் கொண்டது அத்தனையும் மகாப் பெரிய தப்பு!'

'தப்புத் தப்பாய்... நான் மனதில் ஆசைகளைப் புகுத்திக் கொண்டு... இப்போது மருகுவதும், மாண்டுப் போவதும்... எல்லாமே அறிவில்லாதவர்களின் செயல்தானே!'

'என் ஆசை நியாயமற்றது!'

'என் காதல் அர்த்தமற்றது!'

'மனமே... மனமே... சத்யனை மற!'

'சத்யனை மணக்க... அவன் அந்தஸ்துக்கு ஈடான பெண்ணால்தான் முடியும்! நீ மடு பெண்ணே! மலையை விரும்பலாமா?'

'எத்தனை படித்திருந்தும், கடைசியில் காதல் என்று வரும்போது, எதையும் சிந்திக்காமல் இப்படியா... சட்டென்று அவனுள் விழுவாய்? மெல்ல எழு! அந்த சத்யன் என்ற கடல் உனக்கு சொந்தமானதல்ல!'

'வானமாய் விரிந்திருக்கும் உன் காதலை சுருட்டி, மடக்கி, வலுவான, கயிறாய் பார்த்து கட்டி, தூக்கி தூரே வீசு! இல்லையேல், உன் கதி நங்கூரம் இல்லாத பாய்மரக் கப்பலின் கதியாய் ஆகிவிடும்!'

எத்தனை மறக்க நினைத்தாலும்... அவன் மேலான காதல் வற்றி, வடிந்துப் போகாமல்... நீருற்றாய்.... பொங்கி பெருகி, வளைந்து நெளிந்து, ஆறாய் ஓடியது... சத்யன் என்ற கடலில் கலக்க!

புதுச்சேரி பயணமானாள்! ஓட்டல் சவேராவில் தங்கிக் கொண்டு கோச்சிங் சென்டருக்கு போய் வந்தாள்.

தேர்வு நாளும் வந்தது.

ஒரு 'ஆல் த பெஸ்ட்!' சொல்லலைையே சத்யன்! நீ அவ்வளவு பண்பாடு தெரியாதவனா?

தினம் தினம் போன் செய்தவன் இந்த பத்து நாளும் ஒரு போன் கூடச் செய்யவில்லையே!

அவன் மேல் தீராத சினம் வந்தது!

தீபிகா குளித்து விட்டு, உணவை தவிர்த்து, பட்டினியாய் அந்த கல்லூரிக்கு வந்தாள். எட்டுமணிக்கு முதல் ஆளாய் வந்து நின்றது, அவள் மட்டும்தான்!

எந்த அறை என்று தெரிந்துக் கொண்டு... அவளுடைய அறையை நோக்கி மைதானத்தில் சென்றாள்.

சத்யனை நினைத்து கண்கள் கலங்கி அவள் செல்ல...



''ஆல் த பெஸ்ட், தீபிகா!''

பின்னாலிருந்து ஒலித்தக் குரல் அவளுடைய இதயத்தில் இனிமையாய் இறங்க... சடாரென்று திரும்பினாள்.

'சத்யன்தான்!'

அழகான ஓவியமாய், செதுக்கிய சிற்பமாய், கண்களில் குறும்பு மின்ன, இதழ்களில் புன்னகை தவழ, தலை களைந்து, பயணக் களைப்பை லேசாய் அப்பிக் கொண்டு நின்றான்.

தீபிகா துள்ளிவிட்டாள்!

'இத்தனை நாட்கள் தவிக்க விட்டுவிட்டானே!' என்ற சுய பச்சாதாபம் அவளுள் முளைக்க, திடீரென கோபமாகி முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

''டாக்டரம்மாவுக்கு கோபமா? மேடம்... உங்க முகம் கோபத்துல செங்காந்தள் மலராய் சிவப்பது வெகு அருமை!''

அவள் இன்னும் விரைப்பாக...

''தீபிகாவுக்கு என் மேல் என்ன கோபம்? ம்? 'ஆல் த பெஸ்ட்!' சொல்லலையேன்னுதானே?''

சத்யன் கூற... திக்கென்று நிமிர்ந்தாள்.

''நீ நினைச்சதை நான் எப்படி சொல்றேன்னு ஆச்சரியம்தானே?''

''எனக்கு நேரமாகுது! நான் இன்னும் கொஞ்சம் ரீ-ரீடிங் பண்ணனும்!'' அவள் நகர முயற்சிக்க...

''வயித்துக்கு சாப்பிடாமல் படிச்சி என்ன கிழிக்கப் போறே? வாங்க டாக்டரம்மா... சாப்பிட்டுட்டு வந்துடலாம்!''

''நான் சாப்பிடலேன்னு சொன்னேனா?''

''சாப்பிட்டவள் முகம் ஏன் மாலை சூரிய காந்தியாய் வாடிக் கிடக்கு? பிகு வேண்டாம்! வாங்க டாக்டரம்மா!''

நக்கலாய் கூறினான். பின் ''எனக்குமே பயங்கர பசி, தீபிகாம்மா!''

'சத்யன் பசி தாங்கமாட்டானே!' தீபிகா நெகிழ்ந்தாள்.

அருகில் உள்ள ஓட்டலுக்கு போக...

''இங்கேயா? என்ன தீபிகா நீ? என் அந்தஸ்துக்கு இங்கே எல்லாம் நுழையலாமா? வா தாஜ்க்கு போகலாம்!''

''அவ்வளவு பெரிய ஓட்டலா? ஒரு இட்லி நூறு ரூபா சொல்லுவான்!''

''ஏய் ஜோக்கடிக்காதே, தீபிகா! நான் புதுச்சேரி வந்தால் தாஜ்லதான் தங்குவேன்!''

''தாஜ்ஜில் தங்க ஒருநாள் வாடகையே பத்தாயிரத் திற்கு மேல் வேண்டுமே!''

''ஆமா அதுக்கென்ன?'' அவன் அலட்சியமாய் கூறி அவளை காரில் ஏற்றினான்.

சின்ன ஓட்டலிலேயே காலெடுத்து வைக்கத் தயங்கு பவன், இந்த மலைஜாதிப் பெண்ணை எப்படி கட்டிக் கொள்வான்? இதுகூடத் தெரியாமல் இவனை நேசித்து தொலைத்து விட்டேனே! என் நேசத்தை எந்த ரப்பரைக் கொண்டு அழிப்பது? ரப்பரால் அழித்தால் அழியக் கூடிய காதலா? அமிலத்தை ஊற்றி அழித்தால்தான் இந்த காதல் அழிந்துப் போகும்!

கண்களில் நீர் துளிக்க... அவனுக்குத் தெரியாமல் துடைத்துக் கொண்டாள்.

''தெரிந்த பெண், அங்கிள்! ஐ.ஏ.எஸ். பரீட்சை எழுத வந்திருக்கிறாள்!''

ஹோட்டல் முதலாளியிடம் அறிமுகப்படுத்தினான்.

'தோழி என்றுகூட சொல்லத் தயங்குகிறானே!'

'ஏதோ ஆபத்தில் காப்பாற்றினேன் என்பதற்காகவும், புதுத் தோழி கிடைத்திருக்கிறாள் என்று பொழுது



போக்கிற்காகவும் அவன் என்னுடன் உறவாட... நான் அகம் மகிழ்ந்துப் போகலாமா?'

''பிசினஸ் விஷயமாய் அண்ணா கிளம்பினான். உன் பரிட்சை ஞாபகத்துல வந்ததும், நானே புறப்பட்டு வந்துட்டேன்.!''

ஒரு நகைப் பெட்டியை எடுத்து நீட்டி...

''தீபிகா... தொழில் சம்பந்தமா அமெரிக்காப் போனேன்! இந்த நெக்லஸ் ரொம்ப பிடிச்சிருந்தது! உனக்காக வாங் கினேன்! பிடிச்சிருக்கா? வைரம்ன்னு நினைச்சிடா தேம்மா! வெறும் தங்கம்தான்!'' என்று அவள் கையில் திணிக்க...

மனம் மீண்டும் அவன் மேலான ஆசையை கவிதை நடையில் வரிவரியாய் எழுதியது!

## 15



**செ**ன்னை!

மருத்துவர்களுக்கான கருத்தரங்கு!

வெள்ளிமலை ஆஸ்பிட்டலின் சார்பாய் கலந்துக் கொள்ள தீபிகா வந்திருந்தாள்!

சுகாதார அமைச்சர் பேசப் பேச குறிப்பெடுத்துக் கொண்டிருந்தாள், தீபிகா!

எளிமையான உடையிலும், ராஜ கம்பீரமான தோரணை யில் இளவரசியாய் வீற்றிருந்த தீபிகாவையே கண் கொட்டாமல் பார்த்தான், சத்யன்!

எல்லாம் முடிந்து கிளம்பும் போது...

''கண்டிப்பா வீட்டுக்கு வரணும்!''

சத்யன் கார் கதவை திறந்து விட....

''இன்னொரு நாள் வரேனே!''

''அதெல்லாம் முடியாது! உன்னை யார் விட்டா? ஒழுங்கா வண்டியில ஏறு!''

''வரேன்! முதல்ல ஷாப்பிங் போகணும்!''

சத்யன் ஸ்பென்சர் பிளாசா அழைத்துப் போனான்.

அவன் அம்மாவுக்கு நல்லதாய் பட்டுசேலை ஒன்றையும், ரஞ்சனாவுக்கு மோதிரம் ஒன்றையும் வாங்கிக் கொண்டு சென்றாள்.

''வெல்கம், தீபிகா...!'' சத்யன் கூற... கண்ணயர்ந் திருந்த தீபிகா விழித்தாள். பங்களாவின் பிரம்மாண்டம் கண்டு மிரண்டாள்.

உடம்பெல்லாம் உதறியது.

'இத்தனை பணக்காரனா இந்த சத்யன்! ஐய்யோ...' உள்ளுக்குள் அலறினாள்.

மீனாட்சி வந்து...

''வாம்மா மலைராணி! என்ன நின்னுட்டே? தீபிகா தானே?'' நட்போடு கைப்பற்றி அழைத்துப் போய் அமர வைத்தாள்.

''ரொம்ப நன்றிம்மா! எங்க குலதெய்வம் நீதாம்மா! நீ மட்டும் இல்லேன்னால்... மீண்டும் எங்க சத்யன் பயலை பார்த்திருக்க முடியாதல்லவா?'' கண்கள் பளபளக்கக் கூற...

''நன்றியெல்லாம் எதுக்கும்மா? உயிரை காப்பாத் தறதுதானே என்னோட வேலை!''

''புதர்ல கிடந்தவன் உன் கருத்தில் பட்டிருக்கானே! அது இவனோட அதிர்ஷ்டமில்லையா? இது என் மரு மகள் ரஞ்சனா!''



மோதிரப் பெட்டியை ரஞ்சனாவிடம் நீட்ட...

''எதுக்குங்க இதெல்லாம்?'' வாங்கிக் கொண்டாள், ரஞ்சனா.

''எங்க சத்யனோட தீபிகா...?''

ரஞ்சனா சாதாரணமாய் சொல்ல உள்ளுக்குள் சிதறிப் போனாள்.

''என்ன அழகு! சத்யன் சொன்னப்போ நிஜமாவே நம்பலே!'' ரஞ்சனா தீபிகாவின் அழகு கண்டு வியக்க...

ஆபீஸ் முடிந்து மித்ரன், கீர்த்திவாசன் வர... அறிமுகம் முடிந்து... மாலை டிபன் என்று ஒரு விருந்தே நடந்து முடிந்தது.

''வாம்மா! பங்களாவை சுற்றிக் காட்டறேன்!''

மீனாட்சி அழைக்க... தீபிகா பின்னே சென்றாள்.

ஒவ்வொரு அறையாய் காட்டி விளக்கினாள்.

''இது சத்யன் அறை! பயலுக்கு சுத்தம் ரொம்பப் பிடிக்கும்! எதுவுமே காஸ்ட்லியானதா, சுகாதாரமானதா அவனுக்கு இருக்கணும்!''

''எங்க சத்யனுக்கு விரைவிலேயே மேரேஜ் பண்ணப் போறோம்!'' மீனாட்சி சொல்ல...

தீபிகா அதிர்ந்தாள்.

''பெண்.....?'' என்று மெல்ல அதிர்ச்சியை மறைத்து கேட்க...

''பெண்ணா? பார்த்தாச்சும்மா! சத்யன் மனசுக்கு பிடிச்சுட்டாள்! மறுக்கத் தோணல!''

காலடி நிலம் நழுவி அவளை பூமி உள்வாங்கிக் கொண்ட உணர்வு, அவள் உள்ளத்திலே!

''பெண் குணத்துல தங்கம்! அழகுல ரதி! பெண் அப்படி ஒரு கலர்! சந்தன சிற்பமாய் நெகு நெகுன்னு

ஆறடிக்கும் மேலே வளர்ந்திருக்காள்! ரம்பா, ஊர்வசி எல்லாம் எம்மாத்திரம்? என் ரெண்டாவது மருமகள் ஓரம் வந்து நிற்பாளுங்களா?''

அவளையே வைத்த விழி எடுக்காமல் மீனாட்சி நோக்க...

கண்கள் சட்டென்று கண்ணீரை மழையாய் கொட்ட ஆயத்தமாகக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''எந்தப் பெண்ணையும் பிடிக்கலே... பிடிக்கலேன்னு பாட்டுப் பாடினவனுக்கு... அவளை முதல் பார்வையிலே... முதல் சந்திப்பிலே பிடிச்சிப் போயிடிச்சாம்! உயிரோடு உயிர் கலந்துட்டானாம், இனி பிரிக்கவே முடியாத அளவு! எந்த நேரமும் அந்தப் பெண் பற்றிய பேச்சுதான்! அவனுடைய கற்பனை தேவதையே நேர்ல வந்து காட்சி தந்துட்டாளாம்! அவளைக் கண்டதே வரம்ன்னு சதா மூச்சுக்கு முந்நூறுதரம் ஒரு டயலாக் விடறான்! சத்யன்... உன்கிட்ட ஏதாவது சொன்னானா, தீபிகா?'' மீனாட்சி கேட்க...

''ம்கூம்...!'' என்று தலையாட்டினாள்.

''இன்னும் பத்திரிகை அடிக்கறதுதான் பாக்கி!''

தீபிகா முகம் இருண்டு போக...

''நீங்க ஏன் டல்லாயிட்டீங்க?'' ரஞ்சனா கேட்டாள்.

''இ... இல்லையே! ச... சந்தோசம்! சத்யனுக்கு கல்யாணம் என்றதும் சந்தோசம் மனசுல கரை புரண்டோடுது!'' திக்கித் திணறி முடித்தாள்.

''என் பையன் அந்த பொண்ணு கழுத்துல பெரிய, ஸ்ட்ராங்கான மஞ்சள் கயிரை கட்டி... முதலிரவு நடத்தறதுதான் பாக்கி! அந்த நாள் விரைவிலேயே வரும்!''

''சந்தோசம்... சந்தோசம்!''

''உனக்குச் சொல்லி அனுப்பறேன்! வந்துடுவே இல்லையாம்மா?''



''ம்... இப்போ நான் கிளம்பறேம்மா!''

''என்ன அவசரம்? ரெண்டு நாள் இருந்துட்டு போகக் கூடாதா?''

''அம்மா தனியா இருப்பாங்க! அத்தைக்கு வேற உடம்பு முடியலே! நான் போகணும்மா!''

''நம்ம கார்ல போயிடும்மா! டிரைவரை கொண்டு வந்து விடச் சொல்றேன்!''

''வேணாம்மா! ப்ளீஸ்...'' மறுக்க...

தீபிகாவோடு ஹாலுக்கு வந்தனர்.

''சத்யா... கிளம்பறேன்னு அடம்பிடிக்கறா! பஸ் ஏத்தி விட்டுட்டு வந்திடுப்பா!''

''இந்த இரவு நேரத்திலா? காலையில போகலாம்!''

''எனக்கு வேலையிருக்கு! நான் வரேங்க!'' என்று அனைவரிடமும் விடை பெற்று காரில் ஏற... சத்யன் காரைக் கிளப்பினான்.

''என்ன ஆன்ட்டி அந்தப் பெண் முகத்தை கவனிச்சீங்களா? ஒளியிழந்து, கறுத்துப் போயிடிச்சி! ஏன் அப்படி சூட்சகமா பேசனீங்க? சத்யன் விரும்பறது இவளைத் தானே!'' ரஞ்சனா சொல்ல...

''பொண்ணு கேட்க போறோம்ன்னு சொன்னால் என்ன அவசரம்ன்னு சத்யன் தடுக்கறான்! அழுத்தக்காரன் அவனும் அவள்கிட்ட காதலை சொல்ல மாட்டேங்கிறான்! கள்ளி இவளும் மனசை போட்டு பூட்டி வச்சிருக்கா! பூட்டு திறக்கட்டுமேன்னுதான் இப்படி ஒரு பொய்யைச் சொன்னேன்!''

மீனாட்சி சிரிப்போடே தொடர்ந்தாள்.

''இன்னேரம் அவன்கிட்ட கத்தி ரகளைப் பண்ணுவா! நான்தான்டா உன்னை விரும்பினேன்! என்னை விட்டுட்டு வேறொருத்தியை எப்படி மணம் முடிக்க பார்க்கலாம்ன்னு சட்டையைப் பிடிச்சி கேட்பாள், தீபிகா!...''

''நம்ம சத்யனும்... நிஜம் தெரியுமாடி, உனக்கு? நிஜமா நீதான்டி பிசாசே... அந்தப் பொண்ணுன்னு காதல் மிகுதியில் அவளை அறைவான்.!...''

''அவன் அறைய... அவள் அறைய, அவன் அவளை பிடித்து உலுக்க... இவளும் இராட்சசியாய் மாறி அவன் மேல் பாய... ஊடல் கூடலாய் மாறி, கட்டி, அணைச்சி, பயல் அவள் இதழ்ல தன் முத்திரையை இன்னேரம் பதிச்சிருப்பான்! யார் கண்டா உணர்ச்சி வேகத்தில் முதலிரவை கூட முடிச்சிட்டு வரலாம்!''

மீனாட்சி சிரித்தாள்.

''நீ வேணாப்பாரு ரஞ்சனா... இன்னும் கொஞ்ச நாளில் அவங்க காதல் வெடிச்சிட்டு... நம்ம மேலே பூமழையா கொட்டப் போகுது!''

அந்த வயதானவளின் கண்களில் கனவுகள் மிதந்தன.

பூமழைக்கு பதிலாய் பூகம்பம் வரப் போகிறது எனத் தெரியாமல்!

## 16



அதே இரவு வெள்ளிமலையில்...

இரவு பத்து மணிக்கு மேல் தயாகர் வந்து கதவைத் தட்ட... மகாலட்சுமி வந்து கதவைத் திறந்தாள்.

''மலையை விட்டு சமவெளிக்கு போயிட்டு வரீயா? லீவு நாளில் கூட வீடு தங்கமாட்டாயா? என்ன விஷயமா போறே? நீ போன கொஞ்ச நேரத்தில் உன்னைப் பற்றி



தப்பு தப்பா கேள்விப்படறேனே? யாராவது போன் பண்ணி...''

''என்ன சொன்னாங்க?'' இடைமறித்து கேட்க...

''பொண்ணுங்க கூட சுத்தறீயாமே? அவளுங்க எல்லாம் உன் காசுக்காக சுத்தறவளுங்களா? என்னடா? ஏன்டா? உன் அப்பா எப்பேர்ப்பட்ட ஒழுக்க சீலன்! அவருக்கு பொறந்த நீ? ஐய்யோ... நெஞ்செல்லாம் பதறுதே! எவளாவது ஒழுக்கம் கெட்டவ கூட கூடி ஏதோ எய்ட்ஸாமே... அந்த நோயெல்லாம் வாங்கி கட்டிக்காதேடா!''

மகாலட்சுமி பொங்கி அழுதாள்.

''இப்போ எதுக்கு அழறே?'' தயாகர் அதட்டினான்.

''நான் உன்னை பெத்தவடா! நீ செய்யற காரியத்துக்கு அழாமல் என்ன செய்ய? உன்னை இப்படியே பொலி காளையா, இனியும் விட்டு வைக்கக் கூடாது! தறிகெட்டு சுத்துவே! உனக்கு உடனே ஒரு கல்யாணத்தை பண்ணி வைக்கணும்!''

''கல்யாணம் வேண்டாம்!'' தீபிகாவை மனதில் நினைத்துக் கொண்டு சொன்னான்.

''விடமாட்டேன், தயா! உன் அப்பாவை முடுக்கி விட்டு, உனக்கு மறுமுகூர்த்தத்திலே கல்யாணம்தான்!''

''பொண்ணுக்கு எங்கே போவீங்க?''

''நம்ம தீபிகா இருக்காளே!'' சாதாரணமாய் சொல்ல...

சட்டென்று தயாகர் ஆனந்தமானான்.

''தீபிகா...?'' ஆச்சரியமாய் கேட்க...

''உனக்கு தீபிகா மாதிரி பெண் வந்து மூக்கணாங்கயிறு போட்டாத்தான் திருந்துவே! உருப்படுவே! இல்லேன்னால் கட்டுத்தறியை பிச்சிட்டு ஓடத்தான் பார்ப்பே!''

''அவளுக்கு என்னை பிடிக்காதும்மா!''

''ஏன் பிடிக்காமல் போகும்? கோபக்காரன்தான்! கொஞ்ச குணக்கேடன்தான்! ஆனால் நல்ல அழகன்தானே? நல்ல படிப்புருக்கு! வேலையிருக்கு! ஏகப்பட்ட சொத்திருக்கு! அவளுக்கு இன்னும் வேறென்ன வேணும்? இந்த தகுதியை அவளுக்கு பிடிக்கலேன்னாலும்... என் பையன் என்ற தகுதிக்காகவே அவளுக்கு உன்னைப் பிடிக்கும்! நான் கிழிச்ச கோட்டை தாண்டமாட்டா! சொன்னச் சொல்லைத் தட்டமாட்டா! நம்ம தீபிகாவை கட்டிக்கிறீயா?''

''நான் என்ன குருடனா? தீபிகாவை வேண்டாம் என்று சொல்ல!''

''நம்ம வீட்டுல வளர்ந்ததால... அவளை வேலைக் காரியை விட கீழ்த்தரமா நடத்துவே! அதனால் அவளுக்கு நீயின்னால் வெறுப்பு! அவளும் மிக அழகான தேவதை! உனக்கு சமமா படிச்சிட்டு வேலைப் பார்க்கிற டாக்டர் என்பதையே மறந்துட்டு கேவலமா பேசுவே!''

''தப்புன்னு இப்போதாம்மா தெரியுது!''

''தீபிகா மாதிரி ஒரு நல்லப் பெண், பேரழகி எங்கே தேடிட்டுப் போனாலும் கிடைக்கவே மாட்டாள்!''

''அவகிட்ட பேசும்மா! சம்மதிச்சா! அடுத்த முகூர்த்தத் திலே அவ கழுத்துல தாலி கட்ட நான் ரெடிம்மா!''

''காலையில் மெட்ராஸ்ல இருந்து வந்துடுவா! பேசறேன்!''

தயாகர் வெற்றிப் புன்னகை ஒன்றை உதிர்த்துவிட்டு உள்ளேச் சென்றான்.

தயாகர் சட்டென்று ஒத்துக் கொள்ள ஏதாவது காரணம் இருக்கும் என்று மகாலட்சுமி அம்மாளுக்கு தெரியாமல் போனதேன்?

காலை தீபிகா வீட்டிற்கே போய்விட்டாள், மகாலட்சுமி.



''பயணம் சுகமா இருந்ததாம்மா! இப்போதான் வந் தாயா? உன்கிட்ட பேசணும்மா! நீ தூங்கி எழு! பிறகு வரேன்!''

''அதெல்லாம் வேண்டாம்! என்ன விஷயம், அத்தை? சொல்லுங்க?'' அக்கறையாய் கேட்க...

''தயா பத்தி தாம்மா! காலா காலத்துல கல்யாணம் பண்ணி வக்கலேன்னால் கெட்டு குட்டிச் சுவரா போயிடு வான் போலத் தெரியுதும்மா! தயாவை அடக்கக்கூடிய பெண் நீயாகத்தான் இருப்பே! அதனால் அவனை கல்யாணம் பண்ணிப்பீயாமா?'' மீனாட்சி கேட்க...

இதயத்தை யாரோ ராட்சசத் தனமாய் கசக்கி, தூரே எறிந்தது போலத் துடித்தாள்.

''என்னோட பெரிய ஆசையே இதுதாம்மா! என் ஆசையை நிறைவேத்துவீயா, தங்கம்? தயாவுக்கு பூரண விருப்பம்! எனக்கும் அடிக்கடி உடம்பு முடியாமல் போகுது! எனக்குப் பிறகு என் பையனையும், மாமாவையும் பொறுப்பா பார்த்துக்கக் கூடிய ஆள் நீ ஒருத்தியாத்தான் இருப்பே!'' என்று கண்ணீரோடு கெஞ்சலாய் மகாலட்சுமி கூறினாள்.

'சத்யன் உயிர் ஓவியமாய் உள்ளே இருக்க, தயாகரை எப்படி மணப்பது?'

'ஐயோ கடவுளே... நேற்றிலிருந்து எனக்கு ஏன் அதிர்ச்சி மேல் அதிர்ச்சி?'

'சென்னையில் சத்யனுக்கு திருமணம் என்றதும் பாதி செத்து விட்டேன், இங்கே தயாவுக்கு வாழ்வு கொடு என்றதும் மீதி உயிரும் போகிறதே!'

'சத்யனை நினைத்து காலமெல்லாம் கன்னியாய் வாழ்வதா? அல்லது சத்யனை மறந்து, வளர்த்த பாசத்திற்கு நன்றி கடனாய் என் வாழ்க்கையை அர்ப்பணிப்பதா?'

'எத்தனை காத்திருந்தாலும் சத்யன் இனி எனக்கு கிடைக்கப் போவதில்லை! வேறொருத்திக்கு மாலை யிடப் போகிறவன்!

'வீணாய், வெட்டியாய், என் வாழ்க்கை பாலைவனமாய் பட்டுப் போவதை விட.... என் தாயையும், என்னையும் காப்பாற்றிய மகாலட்சுமி அத்தை வீட்டிற்கு என்னை அர்ப்பணித்துக் கொண்டால் என்ன? ஏன் இந்த உடல், உயிருக்கு சொந்தக்காரியே மகாலட்சுமி அத்தைதான்!'

'என் ஆசை நிறைவேறாது எனும் போது... அத்தையின் ஆசையைத்தான் நிறைவேற்றினால் என்ன?'

''தீபிம்மா... நான் கேட்டதுக்கு இன்னும் பதில் சொல்லலையே, செல்லம்!'' அத்தையின் கண்கள் தளும்பி வழிந்தது. சத்யன் மீதான காதலை தன்னுள் போட்டு புதைத்துக் கொண்டு,

''ஏற்பாடு செய்யுங்க, அத்தை!'' என்று மனதைப் பூட்டிக் கொண்டு பதில் சொன்னாள், தீபிகா.

"என் தங்கம்!" என்று அணைத்துக் கொண்டாள், அத்தை!

இந்த முடிவுக்காய்... பிறகு வருந்தப் போவது தெரியாமல்!

# 17



தீபிகா உணர்ச்சிகளை துடைத்தெறிந்து விட்டு, சிறு புன்னகை, மலர்ச்சியின்றி கற்சிலையாய் நடமாட.... அதைக் கண்ட தயாகர் தீப்பிழம்பாய் உள்ளுக்குள் கொதித்தான்.



அவளிடம் பேச கிட்டே நெருங்கினால்... அவள் விலகி தூரே சென்று விடுவாள்.

அதை தயாகர் அவமானமாய் உணர்ந்தான்.

இங்கே கல்யாண வேலை துரிதமாய் நடைபெற...

தீபிகாவுக்கு சத்யனிடம் சொல்லாமல் இருக்க மனம் வரவில்லை!

சத்யன் போன் செய்வான் என்று எதிர்பார்த்தாள். சத்யனுக்கு தீபிகா ஒருநாள் கூட தன் வீட்டில் தங்கவில்லையே என்று கோபம்!

தீபிகாவே போன் செய்தாள்.

''சத்யன்... நான் உங்ககிட்ட பேசணும்!''

''நானும் உன்கிட்ட பேசணும்!''

''பேசுங்க!''

''போன்ல இல்ல! நேரிலே வரேன், தீபிகா!''

மறுநாள் அண்ணி ரஞ்சனாவோடு சத்யன் வந்து நிற்க.... அவளுள் இனம் புரியாத பயம்!

''பெரியார் நீர்வீழ்ச்சி போயிடலாம்!''

போனார்கள்.

அண்ணி காரிலே இருக்க... இவர்கள் மட்டும் நீர்வீழ்ச்சி அருகே போனார்கள்.

''லேடீஸ் பஸ்ட்! ஜென்ஸ் செகண்ட்! எங்களை ரெண்டாம் இடத்துல தள்ளிட்டு முன்னுக்கு நிற்கறது நீங்கதானே! இன்னும் கொஞ்ச நாள் போனால், தாலியை எங்க கழுத்துல கட்டி, கால்ல மெட்டியை மாட்டினாலும் மாட்டிடுவீங்க! அந்த அளவு பொம்பளைங்க ராட்சசத்தனமா முன்னேறிட்டு வரீங்க, இல்ல?'' என்று கள்ளமில்லாமல் சிரித்தான், சத்யன்.

'இவ்வளவு சிரித்து சந்தோசப்படுபவனிடம் அந்த செய்தியை சொன்னால் மகிழ்வானா? அல்லது கஷ்டப்படுவானா?'

இந்த நினைப்பில் அவள் மௌனமாய் இருக்க...

"சொல்லு, தீபிகா?" அவன் ஆர்வமாய் கேட்க...

கண்களில் ஜீவனற்று "எனக்கும், டாக்டர் தயாவுக்கும் கல்யாணம் நிச்சயமாகி இருக்கு!"

"ஐய்யோ..." தீப்பிழம்பு தீண்டியக் கணக்காய் சத்யன் துடித்தான்.

அம்மா தீபிகாவிடம் பேசியதை அண்ணி நேற்றுத் தான் சொன்னாள். கொஞ்ச நேரத்தில் தீபிகாவும் போன் செய்ய விஷயத்தை நேரில் விளக்கினால் நல்லது என்றுதான் சத்யன் புறப்பட்டு வந்ததே!

"தீபிகா... தீபிம்மா... நிஜம் பேசும்மா! ப்ளீஸ்..." கண்கள் பளபளக்க கெஞ்சினான்.

"கல்யாண விஷயத்துல யாராவது ஜோக்கடிப்பாங் களா? நிஜமா, சத்யன்! அத்தை என் பையனை கட்டிக் கோன்னு அழ.... மறுக்க முடியல! என் உடல், உயிர், ஓடற ரத்தம் எல்லாத்துக்குமே சொந்தக்காரி, மகாலட்சுமி அத்தை! அவங்களுக்காவது உதவட்டுமேன்னு... சம்மதம் சொல்லிட்டேன்!"

சத்யனின் கண்களில் ஆகாயத்து சூரியனின் 6000° வெப்பம் கசிந்துக் கொண்டிருந்தது.

"நன்றிக் கடனை அடைக்கப்போறீயா? அப்போ... நீ என்னை நேசிக்கலையா?" கோபமாய் கேட்டான்.

"நீங்க என்னை நேசிக்கலையே!" உதடு துடிக்கக் கேட்டாள். கண்கள் நீரை அருவியாய் கொட்டியது.

"தெரியுமா, உனக்கு? நான் உன்னை நேசிக்கலேன்னு தெரியுமாடி, உனக்கு? என் உயிராய் உன்னை சுவாசிச் சேனே, தீபிகா! நம் காதலை என்னுள் வைத்து பூஜித் தேனே!" தவிப்போடு சொல்ல...

"சொன்னீங்களா?" ஆவேசமாய் கேட்டாள்.

"நீ சொன்னீயா?" அவன் திருப்பி கத்த...



"இதை முன்னமே சொல்லியிருந்தால், அத்தை கேட்ட துக்கு நான் ஒத்துட்டு இருக்கமாட்டேனே! நான் பெண்! நீங்க ஆண்தானே? என்ன பயம்? என்ன தயக்கம்? என்ன வெட்கம்? சொல்லுங்க? ஒரு பொண்ணு போய் மேலே விழுந்துட்டு காதலைச் சொன்னால் விபச்சாரியை பார்க்கிறாமாதிரிதானே இன்னமும் ஆண்கள் சமுதாயம் பார்க்குது! எத்தனையோ மனசு விட்டு பேசினவர் தானே, நீங்க! அதுல ஒரு வார்த்தை 'ஐ லவ் யூ!'ன்னு சொல்ல முடியாமல் போயிடிச்சா?"

"என்னை இவ்வளவு குற்றம் சாட்டறீயே, நீ சொல்லக் கூடாதா?"

"என் சுயமரியாதை, சுய கௌரவம் வந்து என்னை மௌனமா இருக்க வச்சிடிச்சி! அதுவும் இல்லாமல் 'நேசிக்கிறோம்' என்பதை விட ஒருவரால் 'நேசிக்கப் படுகிறோம்!' என்பதில் தானே சந்தோசம், ஆனந்தம்!"

சத்யன் ஆங்காரமாய் கத்தினான்.

"என் கண்கள், என்னுடைய காதலை, உனக்கு கதைகதையா சொல்லிச்சே... அதைக் கூட தெரிஞ்சிக்க முடியாத குருடியா நீ? என் வாய் நொடிக்கொருதரம்... நீ இல்லாத வாழ்க்கை பிடிக்கலே! இடம் பிடிக்கலே! நோயாளியா உன்னருகே காலமெல்லாம் இருந்திருக்கக் கூடாதான்னு ஏக்கமா இருக்குன்னு என் எண்ணத்தை குறிப்பாய் சொன்னேனே... அதைக் கேட்டுப் புரிஞ்சிக்க முடியாத செவிடா நீ?

"உன் அருகாமையில் இருக்கும்போது குளிர்ந்து போவேனே... அந்த குளிர்ச்சியை உணராதவளா நீ? உன் குரலை அடிக்கடி போன் பண்ணி பத்திரப்படுத்திட் டேனே, அதை புரிஞ்சிக்காத பைத்தியமா நீ?"

"ஒரு காபி குடிக்கணும்ன்னாலும் பைவ் ஸ்டார் ஓட்டலைத் தேடிப் போறவர்! எதையும் காஸ்ட்லியா பழகி, வாங்கி பழக்கப்பட்டவர்... என்னை எப்படி விரும்புவீங் கன்னு நினைச்சுட்டேன்!"

தயாகர் அவனுக்கு விதித்திருந்த கட்டுப்பாட்டை வாய் தவறிக் கூட சொல்லக்கூடாது என்ற முடிவில் இருந்தான், சத்யன்!

"அடியே பிசாசே... பெண்ணும், பொருளும் ஒன்றா? அன்பு, பண்பு, பாசம், நட்பு, நேசம், அழகு, பொறுமை அத்தனையையும் ஒண்ணாக் கொட்டி குழைச்சி, பிசைஞ்சி செய்த தேவதை நீ! உன் மதிப்பு உனக்கே தெரியலையே! நீ ஏன் அவ்வளவு சட்டுன்னு முடிவெடுத்தே!"

"உங்க மனசுக்குப் பிடிச்ச பெண்ணை கண்டுட்டதாகவும், உங்களுக்கு அவளோட கூடிய சீக்கிரமே கல்யாணம் என்று உங்க அம்மா சொல்லவும், அந்த நேரம் அத்தை அழுதுட்டு வந்து தயாவை கட்டிக்கச் சொல்லி கேட்க... ஒத்துட்டேன்.!"

"என் மனசுல இருக்க பெண், நீதானே! அம்மா சொன்னது உன்னைப்பற்றிதான்! நம்ம ரெண்டு பேருக்கிடையே இருக்க மௌனத்திரை கிழியும்ன்னு நினைச்சி சொல்லியிருக்காங்க! நீ என்னை ஒரு வார்த்தை கேட்காமல் தயாவை கட்டிக்க ஒத்துட்டையே! என் எதிர்காலத்தை யோசிக்கலையே! தீபிகா நீயில்லாமல் எனக்கு வாழ்வேது? நீ எனக்கு வேணும்! என் வாழ்க்கை துணையா வேணும்! நீ என்னை வழி நடத்த வேணும்! மறுத்துடாதே தீபிகா! இப்போதும் ஒண்ணும் குறைஞ்சிடல! மகாலட்சுமி ஆன்ட்டிகிட்ட நான் பேசறேன்!"

"வேணாம், சத்யன்! ஊருக்கெல்லாம் விஷயம் தெரியும்! இங்க இருக்க ஜனங்க முன்னாடி அத்தையை தலைகுனிய வைக்கமாட்டேன்!"

"ஒரு நல்லவனை நிராகரித்து... ஒரு பொல்லாதவனை கட்டிக்கப் போறியே!"

தீபிகா பேசாமல் இருக்க...



"தயா உனக்கு பொருத்தமானவன் இல்லே, தீபிம்மா! உன்னை தினம் தினம் நரகத்துல தள்ளி, ராட்சசனாய் மாறி, ஓங்கி ஓங்கி மிதிப்பான்! தாங்கமாட்டியே... என் கண்ணே!"

ரஞ்சனா எப்போதோ வந்து இவர்களின் காரசாரமான பேச்சை கேட்டுக் கொண்டிருந்தவள், இடைப்புகுந்தாள்.

"ஆசையாசையாய் தன் காதலை சொல்ல வந்தவனுக்கு.... உன் கல்யாணம் பற்றி சொல்லி... உயிரோடவே கொன்னுட்டையே, தீபிகா! எங்க சத்யன் தாங்க மாட்டான்! உள்ளுக்குள்ளே ஆழமான, அழுத்தமான காதலை வச்சிகிட்டு நீ சொல்லுவேன்னு அவனும், அவன் சொல்லுவான்னு நீயும் இருந்து... உங்க உண்மையான காதலுக்கு நீங்களே தீ வச்சுட்டீங்களே! ஒண்ணும் கெட்டு போயிடல! அந்த அம்மாகிட்ட, எங்க வீட்டு ஜனங்களைப் பேசச் சொல்றேன்!" ரஞ்சனா சொன்னாள்.

"எனக்கு காதலைவிட, இப்போ நன்றிதான் பெரிசு! கடமைதான் பெரிசு!" தீபிகா தீர்மானமாய் சொன்னாள்.

"உன் பரீட்சை சமயம் சத்யன் புதுச்சேரி எப்படி வந்தான்? அமெரிக்காவுல பெரிய தொழில்முறை ஒப்பந்தம் முடியற நாள்! அது மட்டும் முடிஞ்சிருந்தால் எத்தனை லாபம்! எத்தனை விற்பனை! எல்லாத்தையும் விட்டுட்டு உனக்கு 'ஆல் த பெஸ்ட்!' சொல்றதுதான் முக்கியம்ன்னு இரவோட இரவா விமானம் புடிச்சி சென்னை வந்து... சென்னையிலிருந்து புதுச்சேரி வந்து பைத்தியக்காரன் மாதிரி நின்னானே, அதிலிருந்துகூட அவன் ப்ரியம் உனக்குத் தெரியலையே!..."

தீபிகா மிரட்சியோடு நிற்க...

"கோடி ரூபா மதிப்புள்ள வைர நெக்லஸை, தங்கம்ன்னு பொய் சொல்லி உங்கிட்ட கொடுத்தானே! அதிலிருந்து, அவன் உன் மேல் வச்ச ஆசை புரியலையா?..."

"வெறும் தங்கம்ன்னு சொல்லி கொடுத்ததால் தான் வாங்கினேன்!"

"உன்மேல எங்க சத்யன் உயிரையே வச்சிருக்கான் தண்டிச்சிடாதே, தீபிகா!"

"அத்தை என் தெய்வம் மாதிரி! அவங்களை தண்டிக்கலாமா?"

"உன்னால் தயாவோட மனசு ஒப்பி வாழ முடியுமா?"

"தயா காட்டப்போகும் அன்பால்... நான் சத்யன் மேல் வச்சிருக்க பிரியம் எல்லாம் பனியா, மேகமா கரைஞ்சிடும்!"

"தப்பு, தீபிகா!" ரஞ்சனா அடித்துச் சொன்னாள்.

"உன் மனம் கொன்னுடும், தீபிகா! உன் கடைசி காலம் வரை உன் முதல் காதலும், காதலனும் கண்ணுக்குள்ளே வந்து நின்னு இம்சிப்பாங்க, தெரியுமா?"

"அண்ணி... அவகிட்ட என்ன கெஞ்சறீங்க? எவனையோ கல்யாணம் பண்ணி, எக்கேடோ ஒழியட்டும்! விடுங்க!"

சத்யன் சினத்தோடு சொல்ல...

தீபிகா அதிர்ந்துதான் போனாள்.!

## 18



காதல் தந்த வலியை, அழுகையை கட்டுப்படுத்த முடியாத சத்யன், அருவியில் இறங்கி, மண்டியிட்டு, கதறி கண்ணீர் விட்டான்.



அருவியின் தண்ணீரோடு அவன் கண்ணீரும் கலந்து, கை கோர்த்து ஓடியது.

ஒருநாளும் சத்யன் இப்படி உருக்குலைந்து போனதில்லை! உள்ளம் வாடி நின்றதில்லை!

தீபிகா வேகமாய் நடக்க, ரஞ்சனா பின்னாடியே கெஞ்சிக் கொண்டுப் போனாள்.

'என்னிடம் சலனத்தை, பரவசத்தை, நேசத்தை ஏற்படுத்தி விட்டு, கடைசியில் கைவிரித்துவிட்டாயே, தீபிம்மா!'

'நான் என்ன செய்வேன்? இந்த தோல்வியை எப்படித் தாங்குவேன்? என் உடல் இருக்க, உயிரை மட்டும் பறித்துக் கொண்டாயே, கண்ணே!'

'என்னுள் காதல் விதையை ஊன்றி... கண்களின் வழியாய் நேசநீரைப் பாய்ச்சி... அந்த விதை விண்ணுக்கும் மண்ணுக்கும் ஓங்கி, உயர்ந்து நிற்கும்போது... கடைசியில் கோடரி கொண்டு, அடிமரத்தண்டை வெட்டலாமா? இது நியாயமா? தீபிம்மா?'

'உன் கள்ளவிழிப் பார்வையில் தானே... நான் கரைந்துப் போனேன்!'

'உன் உயர்வான அன்பில்தானே... நான் உன்னுள் தொலைந்து போனேன்!'

'உன் தன்னலம் பாராத பாசத்தால்தானே... நான் உன்னுள் மூடுபனியாய் ஊடுருவிப் போனேன்!'

'என்னுள் நேசத்தை விதைத்தவள்... நெருஞ்சியாய் மாறலாமா?'

'என்னுள் பாசத்தை விதைத்தவள்... பின்னாடியே ஆழமான புதைகுழியைத் தோண்டலாமா?'

'அன்பை கொடுத்த அமுதமே... பின் நஞ்சாய் மாறலாமா?'

'உயிர்களிடத்து அன்பு வேண்டும் என்று எனக்கு போதித்த நீ, கடைசியில் நானும் ஓர் உயிர் என்பதை மறந்து போனாயா... என் உயிரே!'

ஆற்றாமையுடன் அருவியில் புரண்டு அழுதவனை அள்ளிப் போட்டுக் கொண்டு ரஞ்சனா சென்னைக்குப் பறந்தாள்.

சென்னையை நெருங்குவதற்குள் சத்யனுக்கு கடும் குளிரும், சுரமும் வந்து விட்டது.

அன்று மகாலட்சுமி கூப்பிடுவதாய் செய்தி வர, பங்களாவுக்கு சென்றவளுக்கு ஏமாற்றம்.

தயாகர் மட்டுமே அவன் அறையில் இருந்தான்.

''வா தீபிகா! எனக்குத்தான் உன்னைப் பார்க்கணும்ன்னு ஆசை வந்தது! அம்மா பேரைச் சொன்னாத்தானே வருவே!''

''நான் பிறகு வரேன்!''

''என்ன அவசரம்? என்ன வெட்கம்? ரெண்டு பேரும் ஒண்ணா வளர்ந்தவங்கதானே!''

தயாகர் சொல்லிக் கொண்டே அருகேப் போய் அவளை இழுத்து அணைக்க முற்பட....

''எனக்கு இதெல்லாம் பிடிக்காது விடுங்க!'' திமிரி அவனிடமிருந்து விடுபட்டாள்.

''சத்யன் நாலு நாளைக்கு முன்ன வந்திருந்தான் போல! அருவிக்குப் போய் குளிச்சி, கும்மாளம் போட்டீங்களா?'' நாக்கில் விஷம் தடவி தீண்ட....

''ஐய்யோ...'' அலறினாள்.

''என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஒத்துட்டு, அவனோட என்ன கொஞ்சல்? உறவு? ம்? அவனை உன்னால மறக்க முடியலையா?''

தீபிகா கண்ணீர் விட்டாள்.



''அவன்கிட்ட சிரிக்கறதுல ஒரு பத்து பர்சண்ட் என் கிட்டையும் சிரிச்சா குறைஞ்சா போயிடுவே?''

தயாகர் வெறியோடு, காமத்தோடு அருகில் வர...

தீபிகா பயந்து, பின்வாங்கி, படியிறங்கி, அழுதுக் கொண்டே ஓடினாள்!

சென்னையில்...

''என்னை மன்னிப்பாயா, சத்யா?'' கண்ணீரோடு மீனாட்சி கேட்க...

''உனக்கு நல்லது செய்யறதா நினைச்சி ரெண்டு முறையும் உன் வாழ்க்கையில எமனா குறுக்கிட்டு விட்டேனே! நான் தீபிகா கால்ல விழுந்தாவது, உன்னைக் கல்யாணம் செய்துக்க சம்மதம் வாங்கிட்டு வரேன்!'' என்று புறப்பட்ட மீனாட்சியை சத்யன் தடுத்து நிறுத்தினான்.

முகம் முழுக்க தாடி வளர்த்துக் கொண்டு, பாக்கெட் பாக்கெட்டாய் சிகரெட்டை ஊதி, பார்ட்டியில் கூட குடிக்காதவன் இப்போது குடிக்கவும் செய்தான்.

தீபிகாவின் கல்யாண பத்திரிகை வர... அதைக் கண்ட சத்யன் துடிதுடித்து, கத்தி கதறியழுதான்!

# 19



''சத்யா... தீபிகா உன் உயிரைக் காப்பாற்றியவள்! உனக்கு அடைக்கலம் கொடுத்து பராமரித்தவள்! இந்த காலத்தில் தன்னலம் பாராமல் யார் செய்வாங்க இது போல

உதவியை? அந்த நன்றிக்காவது நாமெல்லாம் அவ கல்யாணத்துக்கு போகணும்ப்பா! உன் கையால மங்கல அரிசியை போட்டு, நீ வாழ்த்தினாத்தான் அந்த பொண்ணு நல்லா வாழ்வா! காலையில கிளம்பலாம், சத்யா!''

மீனாட்சி சொல்ல...

''என் தீபிகா இன்னொருத்தன் மனைவியாவதை என்னால பார்த்துட்டு இருக்க முடியுமா? செத்துடுவேம்மா! என் உயிர்ம்மா, அவள்! என் உயிரை இன்னொருத்தன் சொந்தமாக்கிக்கிறதை எப்படி கண்ணால பார்ப்பேன்? நோ... என்னால முடியாது! நான் வரவே மாட்டேன்!'' என்று குலுங்கியழுதான்.

எல்லோரும் கிளம்பும் போது வம்படியாய் சத்யனையும் காரினுள்ளே இழுத்துப் போட்டுக் கொண்டனர். மீனாட்சி யின் மடியில் தலை வைத்து அழுதுக் கொண்டே வந்தான்.

வெள்ளிமலையில் ஊரே திருவிழாக் கோலம் பூண்டது.

பங்களாவின் முன்புறம் பெரிய பந்தலிட்டிருந்தனர். மலைவாழ் மக்கள் அத்தனை பேரும் ஒன்று கூடி விட்டனர்.

மணவறையில் தயாகரன் அமர்ந்திருக்க... ஐயர் மந்திரம் ஓத... அலங்கரிக்கப்பட்ட பதுமையாய், தீபிகா கண்களில் ஜீவனற்று வந்தமர்ந்தாள்.

கெட்டி மேளம் கொட்ட.... ஐயர் தாலி எடுத்து கொடுக்க.... தாலியை வாங்கிய தயாகரன் அதைத் தூக்கி தூரே வீசினான்.

அவன் முகம் செந்தழலாய் தகதகக்க.... மணவறையை விட்டு எழுந்தான்.

எல்லோரும் புரியாமல் அதிர...

''தயா... தயா...'' மகாலட்சுமி ஓடிவர...

தீபிகாவைப் பார்த்து கத்தினான்.

''ஏய் என்னை எத்தனை முறை அவமானப்படுத்தி இருப்பே? அதுக்கெல்லாம் சேர்த்து ஒட்டு மொத்தமா



உன்னை அவமானப்படுத்தத்தான் இந்த கல்யாணத்துக்கு ஒத்துட்டேன்!''

தீபிகா அதிர்ந்துப் போய் அவனைக் கண்ணீரோடு நோக்க...

''ஒரு முறையா? ரெண்டு முறையா? ஆஸ்பத்திரியில அத்தனை பேர் முன்னாடியும் அவமானப்படுத்தி... சத்யன் விஷயத்துல போலீஸுக்கு போவேன்னு ஆடினே இல்லையா? இப்போ அனுபவி! அத்தனை பேர் முன்னாடி அப்பா அறைய, எனக்கு எவ்வளவு அவமானமா இருந்தது தெரியுமா? சத்யனை வீட்டுலே சேர்க்காதேன்னு எவ்வளவு அட்வைஸ் பண்ணினேன்! கேட்டியா? என் கண் முன்னாடி அவனை இழுத்துட்டு காடு, மலை, அருவின்னு அலைஞ்சி காதல் செய்தீயே! அதையெல்லாம் பார்த்த நான் உன் கழுத்துல எப்படி தாலி கட்டுவேன்?...''

''உன்னை காதலிக்கறதா சொன்ன சத்யன்கிட்ட 'என் உடமை! என் உரிமை! என் வருங்கால மனைவி!' அவள் உன்கிட்ட காதலை சொல்றாளா, பாருடா! நீ சொல்லாத டான்னு சூழ்ச்சி செய்தேன்! அவனும் நம்பிட்டு நீ சொல்லுவேன்னு பார்க்க... நீ சொல்லவே இல்லையா?'' என்று நக்கலாய் கேட்க...

''ஐய்யோ...'' என்று மார்பில் அடித்துக் கொண்டாள்.

''அவன் சென்னைக்கு போன பின்பும்... அவனை அடிக்கடி இங்கே வரவழைக்கறதும்... புதுச்சேரி வரவழைக் கறதும்... ஏன் கல்யாணம் நிச்சயமான பின்புகூட பெரியார் நீர்வீழ்ச்சிக்கு போனீயா? இல்லையா?... தயாகரை கட்டிக்கோ... அதுக்குமுன்னே உன்னை அனுபவிச்சி கிறேன்னு, அனுபவிச்சிட்டானா?...

''இவ்வளவும் கண்டும், நீ கற்போடு இருப்பேன்னு எப்படி நம்புவது?''

''ஐய்யோ...'' தீபிகா கத்தினாள்.

கூட்டம் வேடிக்கைப் பார்த்தது.

''நானுமே உன்னை அனுபவிக்க ஆசைப்பட்டேன்! தப்பிச்சிட்டே! பரவாயில்லை! கல்யாணம் வரை வந்து நின்ன உன்னை எவன் கட்டிப்பான்? கண்ணு ரெண்டும் கரைஞ்சிப் போறாப்பல நல்லா அழு! தயாப்பத்தி இப் போதாவது முழுமையா தெரிஞ்சிருப்பேன்னு நம்பறேன்!''

தயாகர் வெளியேற... சத்யன் உள்ளே நுழைந்தான்.

சத்யனைக் கண்ட தீபிகா...

''சத்யன்... சத்யன்...'' என்று கதறியழ...

''தீபிகா...'' என்று உயிர் உருக அழைத்து, கை களிரண்டையும் விரித்து, தலையாட்ட... தீபிகா புயலாய் ஓடிவந்து... அந்த பரந்த மார்பில் தஞ்சம் புகுந்தாள்.

''சத்யன்... சத்யன்... என்னை மன்னிப்பீங்களா? உங்க காதலுக்கு தயா தடைக்கல்லா இருந்தது தெரியாமல் போச்சே!'' அவள் தேம்பியழ...

''தீபிகா... என் உயிரே... உன் இந்த நிலைக்கு நானு மேத்தானே காரணம்! என்னை மன்னிப்பாயா, கண்ணே?''

அவளின் நீர்வழியும் கண்களில் முத்தமிட்டு... கன்னம், உதடு என்று முன்னேற... இந்த நிலை நீடிக்கா வண்ணம்... மகாலட்சுமி தாலியை எடுத்து வந்து நீட்ட... மீனாட்சி தலையாட்ட...

நொடி கூட தாமதிக்காமல் தீபிகா கழுத்தில் மங்கல நாணைப் பூட்டினான்.

தீபிகாவை அணைத்துக் கொண்டான், இனி பிரிவே அவர்களிடம் இல்லாததுபோல!